

# ஞானச்சுடர்

பங்குனி மலர் 2009

11 JUL 2009



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

## குறள்வழி



**குணமெனும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்த லரிது.**


**பொருள்:** பெரியவர் கோபம் கொள்வாரானால் தாங்க முடியாத துன்பம் நேரும். (29)

**அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்**
**செந்தண்மை பூண்டொழுக லான்.**

**பொருள்:** எல்லா உயிர்கள் மேலும் நல்ல தயவுடையராய் இருத்தலால் அந்தணர் என்போர் தருமத்தை உடையவராவர்.

(இது பிறப்பினாலன்று ஒழுக்கத்தினால் அந்தணத் தன்மை உண்டாவதென உறுத்தியது) (30)

## நற்சிந்தனை



### நமச்சிவாயப் பதிகம்

ஒடுகங்கை யுடன்மதிகொன்றை யுரகம் வைத்த சடையனே
பாடுவார்பசி நோய்வறுமை பகைத்திடாவண்ணம்
அருள்செய்வாய்
தேடுவார்தங்கள் இதயமாமலர் தினமும்வாழ்ந்திடு
தெய்வமே
நாடினேனுனை நான்மறக்கினும் நவிலுநா
நமச்சிவாயவே (9)

பாலன்மார்க்கண்டன் பரிந்து வேண்டிடப்பாய்ந்து வந்திட்ட
கூற்றன்தன்
காலனேகொடுங் காமன்மேனி தழலெழச் செய்த கர்த்தனே
மாலயன் முன்னர் மாப்பெருஞ்சோதி வடிவமாய்நின்ற
மறையவா
ஞாலனேயுனை நான்மறக்கினும் நவிலுநா
நமச்சிவாயவே (10)

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் –135


## 2009 பங்குனி
## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சந்நிதியானும் சந்நிதியான்... | ம.க. ஸ்ரீதரன் | 1 - 4 |
| 'ராம' பிரம்மம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 5 - 7 |
| கால பைரவர் | இரா. செல்வவடிவேல் | 8 - 10 |
| குப்பிளானும் சித்தர்..... | மாதாஜி | 11 - 12 |
| அறம் செய்ய விரும்பு | நா. நல்லதம்பி | 13 - 15 |
| சைவ சமய பக்தி.... | க. நாகேஸ்வரன் | 16 - 19 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 20 - 22 |
| வட இந்திய ஸ்தல யாத்திரை | | 23 - 25 |
| முருகன் புகழ்பாடும் பங்குனி.... | வல்வைச் செல்வம் | 26 - 27 |
| நித்திய அன்னப்பணி | | 28 - 29 |
| நம்பிக்கையில் நிம்மதி | கு. குணாளன் | 30 - 31 |
| இந்துசமயத்தில் பெண்கள் | S.K. சிந்துரா | 32 - 35 |
| திருவிளையாடற் புராண.... | ஆறுமுகநாவலர் | 36 - 37 |
| சைவப்புலவர் சி. வல்லிபுரம்... | யாழ் வதிரிவாசன் | 38 - 40 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவ. மகாலிங்கம் | 41 - 45 |
| சிவவொளி | வாரியார் சுவாமிகள் | 46 - 48 |
| ஆத்திசூடி | ஔவையார் | - 49 |
| செய்திச் சிதறல் | | - 50 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 51 - 53 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 54 - 56 |



**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**FAX: 021- 2263406**

**பதிவு இல. Q.D/38/NEWS/2009**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

உ

# ஞானச்சுடர்

# மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

134ஆவது மலருக்கான வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளை சிலாகித்துக் கூறியதோடு ஞானச்சுடர் மலரும் அதன் வளர்ச்சியும் எங்குமே இடம்பெறாத அதிசயமாகவே காணப்படுகின்றது. அத்துடன் மாதாமாதம் வெளிவரும் மலர்களுக்கு வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை என்பன இடம்பெற்று அதில் பங்குபற்றியோரின் கருத்துக்கள், அடுத்துவரும் மலர்களில் இடம்பெற்றுவருவதும் இவ்வகை நிகழ்வில் பங்குபற்றுபவர்களுக்கு உந்துசக்தியாக விளங்குகின்றது. இதனடிப்படையில் இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டுமென சந்நிதி வேற்பெருமானை வேண்டுதல் செய்வதோடு இந்நிகழ்வுகளின்மூலம் தாங்களும் சந்நிதியானை தரிசிக்கச் சந்தர்ப்பம் கிடைப்பதையிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்திற்கும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினருக்கும் நன்றி கூறியதோடு தனது வெளியீட்டுரையினை நிறைவுசெய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

மாசிமாத மலருக்கான மதிப்பீட்டுரையினை யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரான திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தனது மதிப்பீட்டுரையின்போது ஒரு ஆன்மீக நூலாகிய ஞானச்சுடர் மலர் 134 மாதங்களாகத் தொடர்ந்து பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் அக்காலவோட்டத்தை எதிர்த்து நின்று வெளிவருவது மிகவும் போற்றுதற்குரிய விடயம். இதனை நாம் கண்கூடாகவே காணக்கூடியதாக உள்ளது. மலரில் வெளிவந்த கட்டுரைகளின் தரத்தை சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக்கூறியதுடன் மலருக்கு ஆக்கங்களை எழுதுவோரின் சிறுசிறு தவறுகளையும், மொழிநடைகளையும் சுட்டிக்காட்டி இனிவரும் மலர்களில் இவ்வகைத் தவறுகள் ஏற்படா வண்ணம் கட்டுரைகள் அமையவேண்டும் என வேண்டுகோளையும் விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கட்டுரையாளர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து அவர்களுக்குரிய கௌரவிப்பை வழங்கித் தனது பணியினை நிறைவுசெய்தார்.

உ

# கௌரவிப்பு நிகழ்வு

தைமாதம் நடைபெற்ற கட்டுரையாளர் கௌரவிப்பு நிகழ்வின் தொடர்ச்சியாக மாசி மாதம் இடம்பெற்ற கட்டுரையாளர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டோர்.

## கோபுரக்கேடயமும் பொன்னாடையும்

திரு சிவ மகாலிங்கம்
திரு வை.க. சிற்றம்பலவனார்
திரு க. சிவசங்கரநாதன்
திரு கா. கணேசதாசன்
திரு கு. தியாகராஜசர்மா
திரு K.S. சிவஞானராசா
திரு தி. பொன்னம்பலவாணர்
சிவத்திரு வ. குமாரசாமிஐயர்
திரு ப. சிவானந்தசர்மா
திரு ச. லலீசன்
மாதாஜி

## தாமரைப்பூ கேடயமும் பொன்னாடையும்

திரு S.S. ரவீந்திரன்
செல்வி தி. வரதவாணி
செல்வி ச. சரவணமுத்து
திரு சி. கேசவன்

## வட்டக்கேடயமும் பொன்னாடையும்

செல்வி அ. கந்தையா
கவிஞர் வ. யோகானந்தசிவம்
செல்வன் தி. மயூரகிரிசர்மா
திரு துரை கணேசமூர்த்தி
திரு இராம ஜெயபாலன்
திரு ம.க. ஸ்ரீதரன்
திரு ஆ. மகேசு
செல்வன் இரா. கேதீசன்

## பொன்னாடை போர்த்தப்பட்டோர்

செல்வி அம்பாலிகா தம்பாப்பிள்ளை
திருமதி கலாநந்தினி குமாரசாமி ஐயர்
திரு சி. கிருஷ்ணபிள்ளை
திரு இரா. சாந்தன்

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.NO. 021- 2263406
060 - 2219599
FAX.NO. 021- 2263406

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org

உ

# சுடர் தரும் தகவல்

நாம் ஏன் கடவுளை வாழ்த்த வேண்டும்? என்ற ஒரு வினா எழும். நாம் வாழ்த்தியா கடவுள் வாழப்போகிறார்.

எப்போதும் அறிவற்ற பொருளாக, இன்ப வடிவினராக, எல்லாம் செய்ய வல்லவராக, முடிவில்லா ஆற்றலுடையவராக, இருப்பவர் கடவுள். அப்படியிருக்க அவரை வாழ்த்துவது எதற்கு?

ஒரு நூலில் ஆயிரம் மணிகளை கோர்த்து வைத்திருக்கிறோம். ஆயிரம் மணிகளையும் அசைக்க வேண்டுமானால் ஒவ்வொரு மணியாகப் பிடித்து அசைப்பது அறிவுடைமையாகாது. ஆயிரம் மணிகளுக்குள்ளும் ஊடுருவி நிற்கும் நூலைப்பிடித்து அசைத்தால் ஆயிரம் மணிகளும் தாமே அசையும். அதுபோல் எல்லாவுயிர்களுக்குள்ளும் உயிருக்குயிராய் ஊடுருவி நிற்கும் இறைவனை வாழ்த்தினால் எல்லா உயிர்களும் வாழும்.

இக்கருத்தையே திருவள்ளுவர்

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்**

என்று கூறினார்.

எல்லாவுயிர்களும் ஈசன் கோயில்கள். ஆதலின் அவ்வுயிர்கள் அனைத்தையும் ஓம்புதல் வேண்டும். இதுவே ஆன்றோர்கள் தொகுத்த அறங்கள் அனைத்திலும் தலையாயது என்று கூறுகின்றார். இதற்கமைவாக எமது நாட்டில் இடம்பெற்றுவரும் வன்செயல்களின் நிமித்தமும், தற்காலத்தில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாகவும் ஏராளமான மக்கள் பல்வேறு இன்னல்கள், இடைஞ்சல்கள் மத்தியில் வாழ்கின்றனர். இத்தகைய அவல வாழ்வினை எம்மக்கள் வாழ்வதற்கு அன்புகலவாத இறைவழிபாடுதான் காரணமாகும். நம்மில் பெரும்பாலானோர் தத்தம் சுயதேவையை பூர்த்திசெய்யும் வகையிலேயே இறைவழிபாடுகளை மேற்கொள்கின்றனர். ஆலயத்தில்த்தான் இறைவனைக் காணவேண்டும் என்பதில்லை. உலகில் உள்ள எல்லா உயிர்களிலும் நாம் செலுத்தும் அன்பின்மூலம் இறைவனைக் காணலாம். அதனடிப்படையில் இன்னல்களுக்குள்ளாகியுள்ள எமது மக்களின் வாழ்க்கை சுபீட்சமடைய நாம் எல்லோரும் கடவுளை முழுமனதோடு பிரார்த்திப்பதன்மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை களையமுடியும்.

ஆகவே நாம் அனைவரும் ஆன்மாக்களின் இதயத் தாமரையாக, எங்கும். எதிலும் நிறைந்திருக்கின்ற எம்பெருமானை வாழ்த்தி வணங்கி வழிபடுவோமானால் என்றும் இன்புற்று நீடு வாழ்வோம் என்பது திண்ணம்.

உ

# சந்நிதிக் கந்தவேளே

முந்திநான் அடிக்கடி
முருகா குகா வென்று
முற்றுமுன் தலத்தில் வந்து
முதற்பூசை யோடுநல்
லடியார்கள் பூசையும்
முற்றுமே கண்டு களிப்பேன்

அந்தநா ளிளமையும்
கைதர வாகனமு
அளிக்கவதில் வரவும் வைத்தாய்
அதுவன்றி ஆச்சிரமத்
தடியாரின் கூட்டத்திலும்
அடியேனை யாளாக்கினாய்

இந்தநா ளுன்நினைவும்
என் நினைவு மொன்றாக
இருப்பதுங் கண்டு கொண்டாய்
இத்துணைச் சந்நிதி
முருகனே யெனையாளும்
ஈசனே எனது மனதில்

வந்துநீ இடங்கொண்டு
என்மனதில் இன்றும்வர
வள்ளலே வேண்டுகின்றேன்
வளங்கொண்ட தொண்டைமா
னாற்றயலில் கோயில்கொள்
வாசனே கந்தவேளே!

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம் ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலம்*

உ

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு R. கிருஸ்ணசிவம்**
(அவுஸ்திரேலியா)

**திரு இ. சங்கரலிங்கம்**
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

**திரு இராமசாமி திருச்செல்வம்**
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

**திரு நா. நவராஜ்**
(உளவள துணையாளர், யாழ்ப்பாணம்)

**திரு அ. வரதராசா**
(66, வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

**திரு வே. நடராசா**
(தும்பளை மேற்கு)

**திரு சி. கிருஷ்ணபிள்ளை J.P.**
(ஆவரங்கால்)

**பொதுமுகாமையாளர்**
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

**பொதுமுகாமையாளர்**
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

**திரு சி. சந்திரலிங்கம் J.P.**
(பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை)

**திரு செ.க. செல்வநாயகம்**
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**திரு க. இராசதுரை**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)

**திரு சோமசுந்தரம் செல்வக்குமார்**
(சண்சில்க் ஹைக்கிளின் சென்ரர், G.P.S. றோட், கல்வியங்காடு)

**உரிமையாளர்**
(புதிய குகானந்தா, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்)

**திரு இராஜதுரை அதிபர்**
(வதிரி மெ.மி.த.க. பாடசாலை)

**உரிமையாளர்**
(சுபாஸ் வெதுப்பகம், நெல்லியடி)

**திரு ஜீ ஜெயப்பிரகாஸ்**
(ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)

**திரு சி கணபதிப்பிள்ளை (தலைவர்)**
(கரவெட்டி)

**திரு கு. செல்வரெத்தினம்**
(நிக்ஷன் பல்பொருள் வாணிபம், அச்சுவேலி)
**திரு வை. துரைராசா**
(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)
**திரு ந. நவரெட்ணம்**
(மகேஸ்வரி வாசா, ஆனைக்கோட்டை)
**திரு S. விமலராசா**
(தேவாலயவீதி, சங்கானை)
**திரு வே. கிருஸ்ணபிள்ளை**
(K.V.K. அரிசி ஆலை, உடுப்பிட்டி)
**M.B. முருகதாஸ் (கல்யாணி)**
(வல்வெட்டித்துறை)
**திரு சி. வல்லிபுரம்**
(தும்பளை, பருத்தித்துறை)
**உரிமையாளர்**
(கந்தசாமி அன்சன்ஸ், சங்கானை)
**திரு சபா இரத்தினசிங்கம் J.P.**
(சபா றேடர்ஸ், அச்சுவேலி)
**திரு V. பரமானந்தம்**
(கொள்வனவு உத்தியோகத்தர், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்)
**திரு ஜெ. நகுலன்**
(பூநாரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
**திருமதி இ. தில்லையம்பலம்**
(திருவாதெனி, இமையாணன்)
**இரா. கேதீஸ்வரநாதன்**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**திரு சு. மகேஸ்வரன்**
(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)
**திருமதி மகேஸ்வரி**
(சங்கத்தானை, சாவகச்சேரி)
**திரு E.V.K. குமாரசாமி**
(செல்வபதி, மட்டுவில்)
**திரு ஏ. சுந்தரமூர்த்தி**
(மணியன் ஈசன் ஜுவல்லரி, சாவகச்சேரி)
**S. நாகம்மா**
(கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, மானிப்பாய்)
**உரிமையாளர்**
(மெடிலாண்ட் பார்மஸி, சங்கானை)
**திரு S. திருவனேஸ்வரன்**
(V.S.K, மானிப்பாய்)

**திரு த. விவேகானந்தராசா**
(டச்றோட், சித்தங்கேணி)
**திரு இ. புஸ்பநாதன்**
(S.R.P. ஸ்ரோர்ஸ், சங்கானை)
**திரு அ. குபேரானந்த உதயன்**
(உதயன் கொமினிக்கேஷன், இணுவில்)
**திரு அ. கோணேஸ்வரன்**
(தில்லையம்பதி, கோண்டாவில்)
**திரு ஆ. தனபாலசிங்கம்**
(இணுவில் கிழக்கு)
**திரு சி. அழகேசன்**
(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)
**திரு க. தர்மநாயகம்**
(மஞ்சத்தடி, இணுவில்)
**திரு பூ. இராமகிருஷ்ணர்**
(சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி)
**திரு Dr ஸ்ரீகணேசன்**
(பழமுதிர்சோலை, பருத்தித்துறை)
**திரு செ. சூரியகுமார்**
(இன்பர்சிட்டி)
**உரிமையாளர்**
(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)
**திரு வ. தங்கவடிவேலு**
(இராமுகடை, கரவெட்டி)
**அதிபர்**
(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)
**அதிபர்**
(இமையாணன் அ.த.க. பாடசாலை)
**அதிபர்**
(வல்வை மகளிர் கல்லூரி)
**திருமதி சி. தருமலிங்கம்**
(இமையாணன், உடுப்பிட்டி)
**ஆனந்தராசா சீதா**
(ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)
**திரு கி. அருள்நாதர்**
(பாலாவி தெரு, பொலிகண்டி)
**திரு V. மாணிக்கராசா**
(வறாத்துப்பளை, பருத்தித்துறை)

# சந்நிதியானும் சந்நிதியான் ஆச்சிரமமும் (ஒரு கண்ணோட்டம்)

திரு ம.க. ஸ்ரீதரன் அவர்கள்

சந்நிதியானுடன் எனக்கிருக்கும் தொடர்பு 1967ஆம் ஆண்டளவில் ஆரம்ப மாகியதெனலாம். அதற்கு முன்பும் தொடர்பிருந்தாலும் அது ஒரு குறுகிய தெனலாம் அக்காலத்தில் நான் கடமை புரியும் காங்கேசன் சீமெந்து தொழிற் சாலைக்கு கரணவாயிலிருந்து செல்வது வழக்கம். இதனால் நாளாந்தம் கடமைக் குப் போகும்பொழுதும், திரும்பிவரும் பொழுதும் சந்நிதியானை வணங்கத் தவறுவதில்லை.

உற்சவகாலம் ஆரம்பமாகினால் அப்பாதையூடாக பிரயாணஞ்செய்வது மிகவும் கஷ்டம். தென்மராட்சி, வடமராட்சி போன்ற இடங்களிலிருந்து பக்தர் கூட்டம் மாட்டுவண்டில்கள், உழவு இயந்திரங்கள், லாறிகள் போன்றவற்றில் சாரைசாரையாக வருவது வழக்கம். அதுமட்டுமல்ல, ஆட்டக்காவடிகள், பால்க்காவடிகள், தூக் குக் காவடிகள், செதில்க் காவடிகள், கற்பூரச்சட்டி, பஜனைக் கோஷ்டிகள் போன்ற நிகழ்வுகள் கால்நடையாக வெகு தூர இடங்களிலிருந்து இரவு இரவாக சந்நிதியானை நோக்கி வருகைதரும். இவற்றைக் கண்கொண்டு பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும். தாகசாந்தி நிலையங் களுக்கும் கணக்கில்லை. எத்திசை திரும் பினாலும், முருகனின் பக்திப் பாடல்கள் ஒலித்தவண்ணமிருக்கும். இன்றும் எனக்கு ஒரு நிகழ்வு ஞாபகத்தில் வருகின்றது. 1969ஆம் ஆண்டில் உற்சவகாலத்தில் ஒரு நாள் நான் கடமைக்குச் செல்ல வீட்டில் இருந்து புறப்பட்டு உடுப்பிட்டிச் சந்திக்கு அப்பால் செல்லமுடியாது வீடு திரும் பியது. சந்நிதியானைத் தரிசிக்க அவ் வளவு கூட்டம். தெருக்களெல்லாம் கந்தா, கடம்பா, முருகா, சந்நிதியானே, பழனி யாண்டவா, குமரா, கதிர்வேலா, அழகா, வேலவா என்னும் பரவசத்தையூட்டும் ஒலி களைத்தான் கேட்கமுடியும். நாட்டில் ஏற் பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்படிப்பட்ட காட்சிகள் இன்று இல்லை. தற்சமயம் சந்நிதியானைத் தரிசிக்க வருவோரில் பெரும்பாலோர் சோதனைச் சாவடிகளில்படும் கஷ்டங்களாலும், வீதித் தடுப்புகளாலும், சீரற்ற போக்குவரத்துக் களாலும் தங்கள் வரவைக் குறைத்துக் கொண்டனர். என்றாலும் அன்றிருந்த சந்நிதிவேலவனே இன்றும் அதே இடத்தில் மிளிர்ந்துகொண்டு எண்ணற்ற அற்புதங் களைச் செய்தவண்ணமிருக்கின்றான். இவற்றை நாம் சந்நிதியான் ஆச்சிரமத் தினால் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" சஞ்சிகையில் அன்பர் திரு ந. அரியரத் தினம் அவர்கள் "சந்நிதியான்" என்ற தலைப்பின்கீழ் எழுதிவரும் கட்டுரையில் மிகவும் தெளிவாக வாசித்தறிய முடியும். உளமார இதை வாசிப்பவர்களது நெஞ் சம் நெக்குருகும். அன்பர் திரு அரியரத் தினம் அவர்களின் இப்பணி மிகவும்

மெச்சத்தக்கது. சந்நிதியானிடம் நாட்டமில்லாதவர்கள் கூட இக்கட்டுரைகளை வாசித்தபின்பு நாட்டம் ஏற்பட்டதை நான் அறிந்திருக்கின்றேன்.

நான் என் சொந்தக் காரணங்களுக்காகவும், தொழில் நிமித்தமும் எனது ஊரான கரணவாயை விட்டு வலிகாமம் பகுதியில் வதிவிடத் தொடங்கியதோடும், ஆறு, ஏழு வருடங்கள் கொழும்பிற்கு மாற்றலாகிச் சென்றதாலும் சந்நிதியானுடனிருந்த தொடர்பு குறைவடைந்தது. என்றாலும், நான் அன்று நாளாந்தம் சந்நிதியானை வணங்கிய பலாபலன்தான் என்னை தொழில்ரீதியில் உச்சநிலைக்கு உயர்த்தியது. அவ்வளவு நம்பிக்கை எனக்கு சந்நிதியானிடமுண்டு. இவற்றை நான் அடிக்கடி மீட்டுப்பார்க்கும்பொழுது உண்மையில் என் கண்கள் கலங்கும். கொழும்பிலிருந்து மாற்றலாகி 2003ஆம் ஆண்டளவில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு கடமைபுரியவந்தேன். அப்பொழுது சந்நிதியான் ஆச்சிரமமொன்று சந்நிதியில் இயங்கிவருவதாகவும், அவ் ஆச்சிரமத்தின் பணிகள் வெகுசிறப்பாக நடைபெறுவதாகவும், அவர்கள் ஒரு மலரை மாதாமாதம் வெளியிடுவதாகவும் அறிந்து அதைப்பெற ஆவலுற்றேன். அச்சமயம் எமது கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் திரு அருள்லிங்கம் அவர்கள் தனக்கு அங்கு தொடர்பு இருப்பதாகவும் வேண்டுமெனில் என்னை ஒரு சந்தாதாரராகச் சேர்ப்பதாயும் கூறி ஞானச்சுடர் மலரொன்றை என்னிடம் கையளித்தார். அம்மலர் கிடைத்ததும் ஒரு நாளில் அம்மலரிலுள்ள விடயங்களை முழுவதாக வாசித்து முடிக்கவேண்டுமென்ற ஆவலுடன் வாசித்து முடித்ததும் என் உடம்பு புல்லரித்தது. அம் மலரை மீண்டும், மீண்டும் வாசித்ததும் யானும் ஏதும் ஆக்கம் எழுதவேண்டுமென்ற உந்துதலில் ஆக்கங்கள் எழுதினேன். அவை பிரசுரமாகின. அண்மையில் கட்டுரையாளர்களைக் கௌரவிப்பது என்ற ஒரு அழைப்பிதழ் எனக்கு ஆச்சிரமத்திலிருந்து கிடைத்தது. அதை நான் அவ்வளவு பொருட்படுத்தவில்லை. காரணமென்னவெனில், பகவான் கிருஷ்ணர் கூறுகின்றார். "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" அதையே பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்கள் நாம் சேவை என்று செய்யும் விடயங்களுக்கு எவ்வித பதவிகளையோ பட்டங்களையோ, கௌரவங்களையோ எதிர்பார்க்கப்படாது என்கின்றார். ஆதலால் நான் கௌரவிப்பு நிகழ்விற்கு சமூகமளிக்கவில்லை. மீண்டும் சந்நிதியான் ஆச்சிரம பேரவையினர் கௌரவிப்பு நிகழ்விற்கு வருகை தரும்படியும், சமூகமளிக்காவிடில் தங்கள் ஆக்கங்கள் இனிவரும் காலங்களில் பிரசுரிக்கப்படமாட்டாது எனவும் எழுதியிருந்தனர். உடனே யான் அதிலிருந்து சந்நிதியான் ஆச்சிரமத்தின் சுவாமி அவர்கள் மிகவும் கண்டிப்பானவர். அவரின் கண்டிப்பு கோபத்துடனல்ல, ஒரு அன்பு அழைப்பாகத்தானிருக்கும் என்றாலும் கட்டாயம் போகவேண்டுமோ என்ற திரிசங்க சொர்க்கநிலையில் இருக்கும்பொழுது சந்நிதியான் அற்புதத்தால் திரு அருள்லிங்கம் அன்று என்னைச் சந்தித்தார். நீங்கள் கௌரவிப்பு நிகழ்விற்கு கட்டாயம் நாளைவரவேண்டும் அதுவே எமது விருப்பமென அன்புக்கட்டளை இட்டார். அவ்விடத்தில் உடனே நான் அவருக்கு கட்டாயம் வருவேனென

உறுதியளித்தேன்.

சந்நிதியான் ஆச்சிரமத்தைநோக்கி பயணமாகி காலை 8.30மணியளவில் ஆச்சிரமத்தை அடைந்தேன். ஆச்சிரமத்தினுள் உட்புகுந்ததும் பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணர் உருவத்தில் காவி வேஷ்டி யுடன் மிக எளிமையானவராக ஒருவர் அமர்ந்திருந்தார். நான் அவர்தான் ஆச்சிர மத்துச் சுவாமி என மனதில் நினைத்துக் கொண்டு அவரை அணுகி அவரிடம் வந்த விடயத்தைக் கூறினேன். அவர் அதற்கு நிகழ்வுகள் 10.00 மணியளவில்த்தான் ஆரம்பமாகும், அதற்கிடையில் சந்நிதி யானைத் தரிசித்துவிட்டு வரலாமெனக் கூறி, நான் புறப்பட்டபொழுது தேநீர் அருந்திவிட்டுச்செல்லுங்கள் என்று அன்புக் கட்டளையிட்டார். யானும் அதற்குப் பணிந்தேன்.

முதன்முறையாக யான் சந்நிதி யான் ஆச்சிரமத்தினுள் பிரவேசித்தது அன்றுதான். உண்மையில் இது ஒரு ஆச்சிரமமல்ல. ஞானிகள்,அருளாளர்கள், நாயன்மார்கள், பெரியோர்கள் ஆகியோரின் ஒரு வர்ண கலைக்கூடம். ஆச்சிரமம் இப் படி இருக்குமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அங்குள்ள கண்டிப்பு, நிசப்தம், கடமை என்பவற்றைப் பார்க்கும்பொழுது எனக்கு உடனே மனதில் “பிரசாந்தி நிலையம்” தான் நினைவிற்கு வந்தது. 1983ஆம் ஆண்டு பிரசாந்திநிலையத்தில் நின்ற நினைவுடன் சந்நிதியான் ஆச்சிரமத் திலிருந்தேன். உண்மையில் சந்நிதியான் சுவாமி அவர்களை ஒரு கருவியாக வைத்தே இவற்றைச் செய்கின்றார் போலும். அடுத்து ஞானச்சுடர் மாசிமாத மலரின் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை என்பன இடம்பெற்றன. இதிலும் ஒரு அற்புதம். வெளியீட்டுரை நிகழ்த்தியவர் எனது உறவினர். மதிப்பீட்டுரை நிகழ்த் தியவர் அன்று என்னுடன் ஆச்சிரமத்திற்கு வருகைதந்தவர். இருவரது உரைகளும் மிகவும் கருத்தாழமிக்கவை. ஞானச்சுடர் உண்மையில் ஒரு அமுதக்கலசம்தான். அடுத்து எழுத்தாளர்கள் கௌரவிப்பு ஆரம்பமாகியது. எழுத்தாளர்களை நான்கு பிரிவுகளாக வகுத்து அவர்களுக்கு ஏற்ற வாறு கௌரவிப்பு நிகழ்ந்தது. பாராட்டுக் குரியது. சுவாமி அவர்களின் சுறுசுறுப்பும், கண்டிப்புமே என்னை ஆகக்கவர்ந்தன. சுவாமி அவர்களே சகலருக்கும் கௌர விப்பை வழங்கியிருக்கலாம். ஆனால் அவர் அதனின்றும் விலகி தான் ஒரு செயற் கருவிமாதிரி நடந்துகொண்டது ஆன்மீகப் பெரியோர்களின் பண்பிலொன்று என்று தான் நினைக்கின்றேன். தான் கௌர விப்பை வழங்காவிடினும் பெரியோர்களை அழைத்தே வழங்குவது எங்குமுள்ள ஒரு மரபு. ஆனால் சுவாமியோ பார்வையாளர் களாக இருந்தவர்களை அழைத்து கௌர விப்புக்களை வழங்க வைத்தது எமது சுவாமி அவர்கள் எங்கே நிற்கின்றார் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது. இது மிகவும் பாராட்டுதற்குரிய விடயமாகும். அதன்பின்பு 63 நாயன்மார்களுக்குமாக 63பேரை அமர்த்தி அத்துடன் ஒருவரை மேலதிகமாக சந்நிதியான் என்ற பாவனை யிலும் வைத்து அமுது அளித்தது எங்கும் நடக்காத ஒரு நிகழ்வு எனலாம். சுவாமி அவர்களின் சிவபுராண ஓதுகையும் அவர் மண்டபத்தினுள் அங்கும், இங்கும் உலாவி சிவபுராணத்தை மிகவும் உச்ச தொனியில் பாடியது எல்லோரையும் மெய் மறக்கச் செய்தது. சந்நிதியான் ஆச்சிர மத்தில் அமுது உண்பவர்கள் இது

**இயற்கையின் விதிகள் நியாயமானவை ஆனால், பயங்கரமானவை.**

சந்நிதியானுடைய மருந்து'' என நினைத்து உண்ணவேண்டும். தங்களுக்கு விருப்பமில்லாத கறிகள் எதனையும் ஒதுக்கவேண்டியதில்லை. அவையெல் லாம் வீட்டில்த்தான் செய்யவேண்டும். இங்கே சாப்பிட்டுவிட்டு வாழை இலையை மட்டும்தான் விடவேண்டும் என்று கண்டிப் புடன் கூறியதும் அடியேனும் எனக்கு ஒத்துக்கொள்ளாத கறிகளையும் சேர்த்து உணவருந்தினேன். அவர் கூறிய மற்ற நாட்களில் எனக்கு எவ்வித விக்கினங் களும் ஏற்படவில்லை.

முருகனை நம்பினோர் கைவிடப் படார். சந்நிதியான் ஆச்சிரமத்தில் எதனை உண்டாலும் விக்கினமில்லை. உணவு பரிமாறும் தொண்டர்களின் சுறுசுறுப்பும், கடமை உணர்வும் மிகவும் போற்றத் தக்கது. உண்மையில் சுவாமி அவர்களின் கீழ் பணிபுரியும் அடியார்கள் கொடுத்து வைத்தவர்கள். அவரது கண்டிப்பும், கருணையும் என்றும் அவர்களை ஈடேற் றும். அதுவும் பேரவையின் தலைமைப் பொறுப்பை திரு அருள்லிங்கம் அவர்கள் கொண்டு நடாத்துவது மிகமிகப் பொருத்த மானதாகும். தன்னலம்பற்றி சிந்திக்காமல் பிறர் நலத்தில் நாட்டமிக்கவர். எல்லோரை யும் சமமாக மதிக்கும் பண்புள்ளவர். அவரும் சுவாமிக்கு ஒரு பொருத்த மானவராக அமைந்தது சந்நிதியானின் விளையாட்டே. எதற்கும் மனங்கோணா தவர். கடமைவீரர். இதற்கு முன்பே யான் அவரைப்பற்றி அறிந்தவன் என்ற ரீதியில் இவற்றை யான் திடமாகச் சொல்கின்றேன்.

அன்றைய நாள் என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு பொன்னாள். சுவாமி அவர்களுக்கும், சந்நிதி வேலவனுக்கும் தான் நன்றிகூறவேண்டும். நல்லோர் சேர்க்கை என்றும் கிட்டாது. அருளாளர்கள், சான்றோர்கள், பெரியோர்கள் ஓரிடம்கூடி குழாவும்பொழுது அங்கே ஒரு விழிப் புணர்வு ஏற்படுகின்றது. யானும் அதைப் பெற்றேன். உள்ளம் உவகையடைந்தேன்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூல விருட்சமாக கடமையே தெய்வம் என உழைத்துக்கொண்டிருக்கும் சுவாமி அவர்களுக்கும், அதன் வேர்களாக பல்கிப் பெருகி கடமை உணர்வுடன் நடாத்திக் கொண்டிருக்கும் அதன் தொண்டர்களுக் கும், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் மேலான சேவைகளுக்கும் என்றென்றும் சந்நிதி யானின் பூரண அருள் கிட்டவேண்டுமென வணங்கி விடைபெறுகின்றேன்.

"வேலை வணங்குவதே வேலை"

"ஸமஸ்தா லோகா சுகினோ பவந்து"

## தவம்

தவம் என்பது உங்கள் இஷ்ட தெய்வத்தின் திருநாமமாகிய மூலமந்திரத்தை சர்வ சதாகாலமும் ஜபம் செய்துகொண்டிருப்பதுதான். ஜபம் உரு ஏற ஏற ஜபசித்தியால் உங்கள் நாக்கு உங்களை அறியாமல் மூலமந்திரத்தை நாளடைவில் சொல்லப்பழகிவிடும். ஜபம் செய்ய வயதுக்கட்டுப்பாடு இல்லை. எந்த வயதிலும் செய்யலாம்.

**அமைதி இருக்கும் இடத்திற்கு ஆண்டவன் தன் ஆசியை அனுப்புகிறார்.**

# 'ராம' பிரம்மம்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள்

சீதா கல்யாணத்தின்போது ஒரு அற்புதமான நிகழ்ச்சி நடந்தது. யாரும் எடுக்கமுடியாமல் மிதிலையில் இருந்த வில்லை ஒரு நொடிப்பொழுதில் ராமர் எடுத்து முறித்துவிட்டார். அவர் அதைத் தன் காலில் வைத்து வளைத்ததையோ நாண் ஏற்றியதையோ யாருமே பார்க்க வில்லை. ராமர் வில்லை எடுத்ததைப் பார்த்தார்கள். வில் முறிந்த ஓசையைக் கேட்டார்கள். அவ்வளவுதான்.

எடுத்தது கண்டனர். இற்றது கேட்டனர் என்றார் கம்பர்.
அருணகிரிநாதர் அந்தவில் முறிந்த ஒலியையும் பாடுகிறார்.

**சிலை 'மொளுக்' கெனமுறிபட**
**மிதிலையிற் சனக மனருள்**
**திருவினைப் புணரரி**

எனத் திருவிடைக்கழி திருப்புகழில் வருகிறது.

ராமர் அந்த வில்லை முறித்த போது 'மொளுக்' என்ற சத்தம் கேட்டதாம். பலகாலமாக யாராலும் அசைக்கமுடியாத அந்தவில் மிகுந்த பலசாலியான ராம ருக்கு ஈடுகொடுக்கமுடியாமல் 'மொளுக்' என உடைந்துவிட்டது.

சீதா கல்யாணத்துக்குப்பின் முக்கியமான நிகழ்ச்சி ராமரின் பட்டாபி ஷேகம் தடைப்பட்டது. வலிமையான வில்லை முறித்து, அழகு, அறிவு, நற் குணம் ஆகியவற்றில் தலை சிறந்தவரான சீதையைத் திருமணம் புரிந்த ராமர் அயோத்திக்குத் திரும்பி பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகே ராமருக்கு மகுடம் சூட்ட ஏற்பாடு ஆனது. ஆனால் கொடுங்கூனியின் சொற்கேட்டு கைகேயி தடுத்துவிட்டாள். ராமனிடம், "பரதன் நாடாளவேண்டும். நீ காட்டுக்குப் போக வேண்டும். பதின்னான்கு ஆண்டுகள் ஆனதும் திரும்பி வரவேண்டும் என அரசர் கூறினார்" என்றாள். இயம்பினன் அரசன் என்றாள். அரசர் என்ற முறையில் அப்பா சொல்லவேண்டுமா? தாங்கள் சொன் னாலே போதுமே! நான் மறுத்தா பேசப் போகின்றேன். என்று சொன்னார். மன்ன வன் பணியன்றாகில் நும்பணி மறுப் பனோ? என்கிறார் கம்பர். "கைகேயியின் உள்ளத்தை ராமர் புரிந்துகொண்டார்" என்று பொருள். இதை அருணகிரிநாதர், "அரசர் சொன்னார்" என்று கைகேயி சொல்லவில்லை. "ராமா! நான்தான் சொல் கிறேன் நீ காட்டுக்குப் போ என்கிறாள்.

**எனது மொழி வழுவாமல் நீயேகு கான்மீதில்**
**என விரகு குலையாத மாதாவு(ம்) நேரோத**
**இசையு மொழி தவறாமலேயேகி மாமாதும்**
**இளையோனும் இனிமையொடு வரும்.** (குளகியொரு - திருப்புகழ்)

கைகேயி நேருக்குநேராகச் சொல்லியும், மறுத்துப் பேசாமல் ராமர், அந்தச் சொல்லுக்கு இசைந்து காட்டுக்குக் கிளம்புகிறார். நிழல்போல் இலட்சுமணனும், சீதையும் செல்கிறார்கள்.

ராமர் மணிமகுடம் ஏற்றுக்கொள்ளச் சென்ற நேரத்தில் எந்த மனநிலையில் இருந்தாரோ, அதே சமமனோநிலையையும், மகிழ்ச்சியையும், நாடுநகர்விட்டு கானகம் சென்றபோதும் கொண்டிருந்தார். கொடுத்தவாக்குறுதி உயிரைத் தியாகம் செய்வதைவிடச் சிறந்ததானதாகக் கருதி, தந்தையின் வாக்குறுதியைக் காப்பாற்ற, பொல்லாத துயரங்களையும், துன்பங்களையும் சம மனநிலை மாறாது தாங்கிக் கொண்டார் இந்தா ராஜ்யம் என்றபோது மகிழ்ச்சியில் துள்ளிக்குதிக்கவுமில்லை. இனி நீ வெறும் பூஜ்யம் என்றபோது துன்பத்தில் துவண்டு விழவும் இல்லை. இதுதான் ஸ்ரீ கிருஷ்ணன் சொன்ன ஸ்தித ப்ரக்ஞ நிலை. ராம பிரம்மம் வாழ்ந்து காட்டிய பிரம்மானந்த நிலை.

பட்டாபிஷேகக் கோலத்தில் மகனைப் பார்க்க விரும்பினாள் கோசலை. ஆரவாரமாய் வரவேண்டிய பிள்ளை, அந்தோ என, தன்னந்தனியே அவள் முன் வருகிறான்.

**குழைக்கின்ற கவரி இன்றி கொற்ற வெண்குடையுமின்றி**
**இழைக்கின்ற விதிமுன் செல்ல தருமம்பின் இரங்கி ஏக**
**மழைக்குன்றன் அனையான் மௌலிகவித்தனன்வரும் என்றென்று**
**தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்முன் ஒரு தமியன் சென்றான்**

பட்டாபிஷேகம் நின்ற செய்தியறிந்து கோசலை அழுது புலம்புகிறாள். இலட்சுமணன் கோபத்தால் கொதிக்கின்றான்.

மனித ஆன்ம ஈடேற்றத்துக்கு வெற்றியைக் காட்டிலும் தோல்வியும் வாழ்வைக் காட்டிலும் தாழ்வும் பேருதவிபுரிகின்றன. என்பதை உணர்ந்தவன் ராமன் நமது பிதா அன்னை கைகேயி, தம்பி பரதன் யாருமே நமக்குத் தீங்குசெய்யவில்லை. விதி செய்த பிழை. கோபப்படுவதால் ஆவது ஒன்றுமில்லை என இருவரையும் தேற்றி விதிசெய்யும் சதியைச் சொல்கிறான் ராமன்.

**நதியின் பிழையன்று நறும் புனல் இன்மைஅற்றே**
**பதியின் பிழை அன்று பயந்து நமைப் புரந்தாள்**
**மதியின் பிழை அன்று மகன்பிழை அன்று மைந்த**
**விதியின் பிழை நீ இதற் கென்னை வெகுண்டது என்றான்.**

'விதியின்பிழை நீ இதறகு என்னை வெகுண்டது' என்று கூறினார். கண் தெரியாத சலபோசன முனிவரும், அவர் மனைவியும் இட்ட சாபத்தினால், ராமர் பிரிவினால் பெருந்துயருற்று தசரதன் மாண்டான். வினை மூண்டது விதியின் பிழை.

இராமர் கானகம் சென்றதால்த் தானே தசரதர் இராமன்மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்றும், குகனின் நட்புக் கிடைத்ததும், பல முனிவர்கள் ஆசி பெற்றதும், ஜடாயுவிற்கு மோட்சம் கொடுத்ததும், அரக்கர்களை அழித்ததும், சுக்ரீவனின் நட்புக் கிடைத்ததும், இரா

வணனை வென்றதும், சீதையின் கற்புத் திறன் வெளியானதும், பரதன் எத்தனை உத்தமன் என்பது தெரிந்ததும் எல்லாம் விதியின் வலிமையே வலிமை.

இராமர் உறுதியுடன் சத்தியத் தைக் கடைப்பிடித்தார். தந்தை வாக்கை காப்பாற்றவும், குல கௌரவத்தை நிலை நாட்டவும் பதின்னான்கு வருடங்கள் வன வாசம் மேற்கொண்டார். தன்னிடம் சரண் அடைந்து, தஞ்சமடைந்த எவருக்கும் எத் தகைய குற்றம் புரிந்தவராயினும் மன்னித்து அடைக்கலம் அளித்தார். "ஒரு முறை யாராவது நான் உமக்குச் சொந்த மானவன் என்று கூறினால், அவன் என்றுமே எனக்குச் சொந்தமானவன்" என ராமர் அறிவித்தார். மூவுலகினையும் கலங்கச் செய்த இராவணனைக் கொன்று தேவர்களையும் முனிவர்களையும் காத்தார்.

இராவணன் அடியோடு அழியக் காரணமானவள் சூர்ப்பனகை. ராவண னிடம் சீதையின் அழகை வர்ணித்துப் போற்றியவள். அவனிடம் காமத்தீயை மூட்டியவள். அதன் விளைவாக இரா வணன் சீதையிடம் மையல் கொண்டான். கம்பர் சூர்ப்பனகையை அறிமுகப்படுத்தும் போது 'நீல மாமணி நிருதர் வேந்தனை மூலநாசம் பெறமுடிக்கும் மொய்ம்பினாள்' என்கிறார். அருணகிரி நாதரும் வஞ் சனையில் முதலிடம் வகிப்பவள். திருத் தணித் திருப்புகழில் இலட்சுமணனால் மூக்கறுக்கப்பட்டவள், விபீஷணனின் சகோதரி, ராவணன் அடியோடு அழியக் காரணமானவள் என்கிறார்.

**மூக்கறை மட்டை மகாபல காரணி**
**சூர்ப்பநகைப் படுமூளி உதாசனி**
**மூர்க்க குலத்தி விபீஷணர் சோதரி முழுமோழ**
**மூத்தவரக்கனி ராவணனோழயல் போற்றிவிட**

(தாக்க மருக்கொரு) திருப்புகழ்

சூர்ப்பனகையை ராவணன் தங்கை என்று சொல்லாமல் விபீஷணன் தங்கை என்று அருணகிரிநாதர் குறிப்பிட்டதற்கும் ஒரு முற்பிறவிக் கதையுண்டு.

(தொடரும்...

## ஞானச்சுடரே நீடு வாழ்க!

சிந்தனைப் பெட்டகமாய் சிறந்த சேவையாற்றும்
சீர்நிறைந்த "ஞானச்சுடரே" நீடு வாழ்க!
உந்தனைக் கையிலெடுத்தால் உள்ளமே துள்ளுமே
உவகை மிகுந்து நல்லார்வமும் வந்திடுமே
கந்தனைக் கரங்குவித்தே களிபேருவகையினால்
கடைசிப்பக்கம்வரை கருத்தூன்றிப் படிக்க
வந்தனை செய்தே நாம் வளமுடன் வாழ்கவென
உந்தனை வாழ்த்துகிறோம் வாழ்கபல்லாண்டே.

*சிவநெறிக்கலாநிதி*
*இராசையா ஸ்ரீதரன் அவர்கள்*

**ஆசையுள்ள வாழ்வில் இன்பம் இருப்பதில்லை.**

உ

# கால பைரவர்

**திரு இரா செல்வவடிவேல் அவர்கள்**

சிவபூமியாகிய இலங்கையில், சிறப்பாக யாழ்மாவட்டத்தில் வைரவப் பெருமானுக்கு பல தனி ஆலயங்கள் அமைந்துள்ளன. வைரவப் பெருமானை வழிபட்டு பயன்பெறுபவர் அதிகம். "காவல் தெய்வமாக" வைரவர் போற்றப் பட்டு வழிபாடு நடைபெறுகிறது. வைர வருடன் உரையாடினேன், வைரவர் எனக் குப் பின்னாலேயே வருவர். இப்படியாக வைரவசுவாமி பற்றிய பல கருத்துக்கள் உண்டு. இதில் உண்மை உண்டு வைர வர்- காவல்த் தெய்வம்.

வைரவர் வரலாறு கந்த புராணத் தில் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. பிரம் மாவும், விஷ்ணுவும் மகா மேருமலையில் இருந்தனர். அவ்வேளையில் முனிவரும் தேவரும் இருவரையும் வழிபட்டு, தமது மனதில் ஏற்பட்டுள்ள ஐயத்தைப் போக்கிக்கொள்வதற்கு முயன்று, பிரம்மா விஷ்ணுவை நோக்கி "பிரம்மா விஷ்ணு உருத்திரர் ஆகிய மூவரில் முதலானவர் யார்"? எனக் கேட்டார்கள். மாயை வயப் பட்ட பிரம்மாவும் விஷ்ணுவும் தாமே முதலானவர்கள் எனக்கூறினார்கள். பிரம்மா விஷ்ணுவுக்கிடையில் நீண்ட காலம் தர்க்கம் நிகழ்ந்தது. இவ்வாறு இருவரும் தர்க்கம் நிகழ்த்திக்கொண்டு இருந்தவேளை வேதமும் பிரணவமும் தேவவடிவங்கொண்டு இவர்கள் முன் தோன்றி மேலான உயிர்களுக்கு உயிராய் விளங்கும் சிவனே பிரம்மம் ஆகும். சிவனே உண்மைப்பொருள் என்றனர். இதனை ஏற்காது தமது வாதத்தைத் தொடர்ந்தார்கள்.

**அடி முடியிலாத வள்ளல்**
**அமலமாய் ஒளியாய் விண்ணின்**
**நடுவுற வந்து தோன்ற**
**நாரணன் தானும் வேதக்**
**கடவுளுஞ் சிவனாம் என்று**
**கருதிலர் யாதோ இந்தச்**
**சுடரென மருண்டார் மாயச்**
**சூழ்ச்சியின் நீங்க லாதார்**

இவர்கள் கொண்ட இயல்பினை அறிந்து சோதியின் இடையில் கயிலை நாதர் உமையுடன் தோன்றினார். நாரா யணர் சிந்தை தெளிவுற்றார். ஆனால் பிரம்மா மாயையிலிருந்து விடுபடவில்லை. பிரம்மா உண்மையை உணராதது மட்டுமல்ல தனது உருவில் கொண்ட ஐந்து தலைகளில் உச்சியில் அமைந்த தலையில் இருந்த வாயினால் சிவனை இகழ்ந்து பேசினார். பிரம்மதேவருக்கு தொடக்கத்தில் திக்குக்கொன்றாக நான்கு தலையும் உச்சியில் ஒரு தலையுமாக

ஐந்து தலைகள் இருந்தன. தீமை உடைய வர்கள் எந்தச் சூழ்நிலையிலும் தீமையான செயல்களைச் செய்வதற்கு அஞ்சுவது இல்லை. நல்லவர்கள் தீயவர்களின் செயல்கண்டு கோபம் கொள்வதில்லை, மாறாக தீயவர்களுக்கு உண்மை நிலையை விளக்கவே முற்படுவர்.

தீய சிந்தனையை உடையவர் களை திருத்தி, தர்மத்தைக் காத்து உண் மையை உணரச் செய்வதற்கு எண்ணிய கயிலைநாதர் தமது திருவுள்ளத்திலிருந்து வைரவக் கடவுளைத் தோற்றுவித்தார். வைரவர் பிரம்மாவின் அறியாமையை நீக்கும் பொருட்டு தீமை விளைவித்த உச்சித்தலையைத் துண்டித்தார். நீங்கிய உயிரை மீண்டும் கொடுத்து பிரம்மாவை மாயையிலிருந்து நீக்கினார்.

வைரவர்சுவாமி, அகந்தை கொண்ட அனைவரினதும் உடலில் பாயும் குருதியை தானமாக வாங்கி, இதனால் இறந்துபோனவர்கட்கு மீண்டும் உயிரை வழங்கி அகந்தையை நீக்கியருளினார் என்பது வரலாறு. இக்கதையின்மூலம் மக்களுக்கு நன்மை செய்வதற்கு தோன் றிய அருள்வடிவமே! வைரவர் வடிவம் என்பதனை அறியமுடியும். தீய எண்ணம் கொண்டவரை "இவனின் உடலில் கெட்ட இரத்தம் ஓடுகிறது" எனக்கூறும் வழக்கம் இன்றும் உண்டு. இரத்தம் அமைப் பிலிருந்து மாறினால் இறப்பு ஏற்படும், என்பது விஞ்ஞான உண்மை. ஒரு மனி தன் தீய எண்ணங்கொண்டு தீயவற்றையே செய்வானாயின் அவன் இறந்தவன். நல்ல சிந்தனையும், செயலும் கொண்டவர்களே வாழ்பவர்கள் ஆவார்கள். இதனை எடுத் துக்காட்டும் வகையிலே வைரவர் வர லாற்று உண்மை திகழ்கிறது.

சமூகத்தில் காலபைரவரின் தேவை இன்று மிகையாகத் தேவைப் படுகிறது. நல்ல சிந்தனை என்பது பூச்சி யத்தை அடைந்து விடுமோ என்ற பயம் நல்லவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. எந்தக் காரியத்திலும் தர்ம சிந்தனை மறைந்துபோய்க் கொண்டிருக்கிறது. ஆலயங்களில் நிகழும் ஆடம்பர விழாக் கள், கிரியைகள், மந்திரசுத்தமின்மை, எண்ணத்தில் தூய்மையில்லை, விதித்த வற்றை ஒழுங்காகச் செய்யாமை, கடமை தவறுதல்... இப்படியாக ஒழுங்குகள் தடம் புரண்டுவிட்டன.

மனதில் தோன்றியுள்ள "மாசு" நீங்கினால் அன்றி இறை அருள் கிடைக் காது. உலகத்தின் உயர் தர்மம் "மனத்திற் கண் மாசிலனாதல்" என்பது குறள்தரும் நற்சிந்தனை.

கால வைரவர் மனதில் எழும் தீய எண்ணங்களை நீக்கி நமக்கு - சமூ கத்திற்கு உயிர் கொடுப்பதற்கு எழுந்து வரும்படியாக நமது பிரார்த்தனைகள் அமையட்டும். எல்லாம் சமாதியாகின்ற பெரியதோர் அமைதியில் பூரண இன்ப வடிவமாகித் திகழ்பவர் வைரவப்பெருமான். வைரவரும், முருகனும், குழந்தைபோன்ற அழகிய வடிவமுடையவர்கள். தீமையை அழிக்கும் எண்ணம் அகோரமாக இருக்க வேண்டுமல்லவா! வைரவப்பெருமான் செயல்கள் யாவும் சிவன் செயலேயாகும்.

பிரம்மன் தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்று! அரக்கன் ஐஞ்ஞானகு தோளும் தாளும்
சிரநெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானே போற்றி போற்றி.



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் 27.03.2009 அன்று இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வின்போது மேடையில் மாசிமாத மலருக்கான வெளியீட்டுரையை நிகழ்த்த வந்த திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்களும் மதிப்பீட்டுரையினை நிகழ்த்தவந்த திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்களும் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட கோப்பாய் சிவம், நீர்வைமணி ஐயர் அவர்களும் மேடையில் அமர்ந்திருப்பதையும் ஆச்சிரம சுவாமிகள் நன்றியுரை கூறுவதையும் படத்தில் காணலாம்.

நாம் செய்யும் செயல்களே நமக்கு விதியாய் அமைகின்றன.

உ

(தைமாதத் தொடர்ச்சி...

# குப்பிளானும் சித்தர் சரவணமுத்துச் சுவாமிகளும்

**மாதாஜி** அவர்கள்

சமயம் என்பது பரீட்சைக்காக படிப்பது மட்டுமல்ல. வாழ்க்கை கற்க வேண்டும். ஆலயம் சென்று அர்ச்சனை செய்தோ, அபிடேகம் செய்தோ, நேர்த்தி வைப்பதோ சமயமாகி விடாது. சமய கலாசாரம் ஆசாரம், பண்பாடு, ஜீவகாருண் யம், தியாகம் சேவையாவதும் வெளிப் படுத்தி நிற்பது சமயதர்ம இலட்சணமாகும். இவையே நாட்டையும் வீட்டையும் காக் கும் மாபெரும் படைகளாகும்.

சமயங்கள் பலவாகும். எத்தனை சமயங்கள் இருப்பினும் சைவசமயம் முதன்மையானது என்பதை குப்பிளான் கிராமத்தவரன்றி அயற்கிராமங்கள், ஊர வர்கள் உணர வாழ்ந்து காட்டியவர் குப்பி ளான் சித்தர் சரவணமுத்துச் சுவாமிகள் என்றால் மிகை இல்லை.

**"சைவ சமயமே சமயம் சமயா தீதப் பழம் பொருளைக்**
**கைவந் திடவே மன்றுள் வெளிகாட்டும் இந்தக் கருத்தைவிட்டு**
**பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டா முத்தி தரும்**
**தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே**

என்றும்

**காகம் உறவு கலந்துண்ணக்**
**கண்டீர் அகண்டா காரசிவ**
**போக மெனும்பே ரின்ப வெள்ளம்**
**பொங்கித் ததும்பிப் பூரணமாய்**
**ஏக வுருவாய் கிடக்குதையோ**
**இன்புற் றிடநாம் இனியெடுத்த**
**தேகம் விழுமுன் புசிப்பதற்குச்**
**சேர வாரும் செகத்தீரே**

(தாயுமானவர்)

என்றாங்கு சரவணமுத்துச் சுவாமி கள் காணப்பட்டார். அக்காலத்தில் வெள் ளைக்காரன் கையில் யாழ்குடாநாடு இருந்தது. இதனால் கிராம மக்கள் திகைத்திருந்த காலமது.

அப்போதுதான் சித்தரின் அற்புதங் கள் அம்பலமாயின. அக்காலத்தில் வறுமையும், உணவுப்பஞ்சமும் சேர்ந்து விளையாடியது. சித்தர் பெரிய செல்வந்தர் அல்லர். சிவகாமி அம்மன்கோவில் கட்டி அம்பாளைப் பூசித்து வந்தார். இவ்வால யம் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத் திலிருந்து கூப்பிடு தொலைவில் உள்ளது. பக்கத்தில் குடிசைகட்டி வாழ்ந்துவந்தார். பகலில் பிச்சை எடுப்பார். அதனை அம் பாளுக்கு நிவேதனமாகப் படைத்து

நிவேதித்த பின் பக்கத்தில் உள்ளவர்க்குப் பகுத்துண்டு வந்தார்.

பிச்சை எடுக்கும் உணவு ஒரே மாதிரி இருக்காது. பலரின் உணவு பல மாதிரித்தான் இருக்கும். கண்ணப்ப நாயனார் தனது குலஆசாரப்படி குடுமித்தேவரைப் பூசித்தார். இறைவன்மீது மீளா அன்பு கொண்டு உயிருக்குயிராய் விசுவாசித்து பக்திப்பரவசத்துடன் நின்றமையால் ஏழே நாளில் இறைவனைக் கண்டார். சிவகோசரியார் காலமெல்லாம் வேதாகம ஆசாரத்துடன் குடுமித்தேவரை வழிபட்டது உண்மையாயினும் வேடுவனின் வழிபாடு தான் குடுமித்தேவருக்கு உகந்ததாய் இருந்தது. அதுபோலவே சித்தரின் தேவி வழிபாடு பொதுமக்களுக்குச் சிறிதளவும் விருப்பம் இல்லாதிருந்தபோதும் தேவி சித்தரின் வழிபாட்டை ஏற்றுக்கொண்டார்.

சித்தர் தேவியை நினைந்து முக்கரண சுத்தியுடன் பலநாள் பலமணிநேரம் தியானத்தில் இருந்துவந்தார். தொடர்ந்தும் பலநாள் இருப்பார். இவை பொதுமக்களிடையே விழிப்புணர்வைக் கொண்டு வந்தது. அக்காலத்தவர்கள் எழுத்தறிவு படிப்பறிவு இல்லாவிடினும் கேள்விஞானம் இருந்தமையால் சுவாமி சொல்லும் அருள் வாக்குகளைப் பொன்போற் போற்றிச் சிரமேற் கொண்டு ஒழுகிவந்தனர்.

சித்தரின் அற்புதங்கள் அயற்கிராமங்கள், ஊர்கள் நகரங்கள் யாவுமன்றி கடல்கடந்து தீவுகளிலும் பரவியிருந்தது. பல சீடர்கள் கூடிவிட்டார்கள். அவர்களுள் அருட்சோதியம்மா, மனோன்மணியம்மா, சின்னாச்சியம்மா இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவர்கள். எமது முப்பத்திரண்டாவது வயதில் இவர்களின் ஆச்சிரமத்திற்குப் போய்வந்தேன்.

சுவாமிகள் சமாதியாவதற்கு அறிகுறியாகத் தொடர்ந்து தியானத்தில் சமாதி நிலையில் இருந்தார். அரசு அடிக்கடி அங்குவந்து சுவாமிகளின் தேகநிலை பரிசோதித்தார்கள். பல நாட்களின்பின் சமாதிநிலையில் உயிர் பிரிந்தது.

தொடர்ந்து குருவாக மனோன்மணியம்மா இருந்தார். அருட்சோதியம்மா சிஷ்யராக இருந்தார். தொடர்ந்து சமாதியான சுவாமிகளின் அருள்வேண்டி பக்தர்கள் வருவதுண்டு. ஆயிரத்துத் தொளாயிரத்து தொன்னூற்ரோராம் ஆண்டு நிகழ்ந்த இனப்பிரச்சினையின்பின் யாரும் இப்போது அங்கு போகாத நிலையேற்பட்டது. குப்பிளான் மக்களின் உற்சாகமின்மையேயாகும்.

குப்பிளானும் சுவாமிகளும் என்ற இந்தக் கட்டுரை நூல்வடிவமாகவேண்டிய ஒன்றாகும். காலத்தின் கோலத்தால் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்ததால் சரித்திர வரலாறுகளும் இலைமறை காயாகிவிட்டன. (முற்றும்)

## பக்தியே பெரியது

பணத்தின் துடுக்கினாலும், படிப்பின் முறுக்கினாலும் பரமனைக் காணமுடியாது. பக்தி ஒன்றாலேயே காணலாம்.

முற்பிறப்பில் அறஞ்செய்யாது தீவினை புரிந்தோரை வறுமைப்பேய் பிடித்து அல்லற்படுத்தும்.

தருமம்தான் மனித வாழ்வைப் புனிதமாக்கும்.

உ

# அறம் செய்ய விரும்பு

திரு நா. நல்லதம்பி அவர்கள்

உலகத்துக்கு, குறிப்பாகப் பிள்ளைப் பருவத்தினருக்குச் சில நீதிநெறிகளைச் சொல்ல விரும்பிய ஔவையார், ஒரு அழகாக, அகரவரிசையில் சொல்லத் தொடங்கினார். அந்த வகையில் அவரது முதல் நீதி. 'அறம் செய விரும்பு' என்பதாம்.

**"ஆத்திசூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே"**

என்று கடவுள் வாழ்த்துப் பாடித் தொடங்கப்பெற்ற இந்த நீதிநூலுக்கு "ஆத்திசூடி" என்ற பெயர் சூட்டப்பெற்றுள்ளது மக்கள் அறிவர்.

இரு வரிகளில் ஒருகாவியம் என்று திருக்குறளில் ஒரு குறளையும் அதன் பொருளையும் சுருக்கமாகச் சொல்லி, இக்காலத்தில் பலரும் தமது பரப்புரைகளைத் தொடங்குவதை நாம் அவதானிக்கலாம்.

அதுபோல, ஒரு வரியில் ஒரு காவியம் அமைந்திருக்கும் 'ஆத்திசூடி'யின் முதலாவது வாக்கியமான அறம் செய விரும்பு என்பதில் அடங்கியுள்ள ஒரு பெரிய தத்துவத்தை ஆராய்வதே இக்கட்டுரையில் எமது குறிக்கோள் ஆகும்.

அறம் செய்ய விரும்பு என்ற வாக்கியத்தில் முதலாவது சொல் அறம்; முதலாவது எழுத்து அகரம்.

தமிழ் நெடுங்கணக்கிலுள்ள முதலாவது எழுத்து அகரம்; அது உயிர் எழுத்து; ஏனைய எழுத்துக்கள் பிறப்பதற்கு முன் 'அ' உயிர் ஒலிக்கிறது.

அத்துடன், அகர உயிர், உலகத்துக்கு இறைவன் எல்லா உயிர்களிலும் கலந்து அறிவாகி நிறைந்து நிற்கின்றமைக்கு உவமானமாகக் கூறப்பெறுகின்றது. இதனை உமாபதி சிவாசாரியார் இவ்வாறு கூறுகின்றார்.

**அகர உயிர்போல அறிவாகி எங்கும்**
**நிகரில் இறை நிற்கும் நிறைந்து** (திருவருட்பயன்) என்பதாம்.

திருவள்ளுவரும், எழுத்துக்களின் பிறப்பிடமாக அகர உயிர் நிற்பதுபோல, இறைவன் உலகத்துக்கு முதல்வனாக இருக்கின்றான் என்று கூறுகின்றார்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு** (குறள்) என்பது அவர் வாய்மொழி. இந்த வகையில் "அ" என்ற உயிர் எழுத்து முக்கியத்துவம் பெறுகிறது.

இனி, 'அறம்' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை வாழ்க்கை நெறியில், அறம் முதலாவதாகச் சொல்லப்பெறுகிறது. அறவழியில் பொருள்தேடி, இன்பமாக வாழ்ந்தால் வீடுபேறு தானாக வந்துசேரும் என்பது வள்ளுவர் வாக்காகும். சைவநெறி கூறுவதும் அஃதேயாகும். அன்றியும், சைவ கலை பண்பாட்டு இலக்கியங்களெல்லாம் இந்த நான்கு கருப்பொருள்களை அல்லது அவற்றுள் ஒன்றை மையமாக வைத்து எழுதப்பட்டவையாக இருக்கும்;

இருக்கவேண்டும். அவ்வாறின்றேல் அந்நூல்களால் மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை என்று ஆகிவிடும்.

இங்கே அறம், என்பது தனக்கும் சமூகத்துக்கும் நன்மைதரும் செயற்பாடுகளைக் குறிக்கும். நல்வினைகள் என்னும்போது புண்ணியங்கள் என்கிறோம்; தீவினைகள் பாவம் என்கிறோம். எனவே புண்ணியம் செய்யத்தக்கது; பாவம் விடத்தக்கது. புண்ணியம் என்பது நல்ல அறவினையைக் குறிக்கும். வழியில் இருக்கும் வாழைப்பழத்தோலை அகற்றி விடுவதும், பசிப்பிணி போக்க அன்னதானம் செய்வதும் நல்லறங்களே. பொறுமை காத்து இன்சொல் பேசி உண்மைபேசி இன்முகத்தோடு நற்செயல்களைச் செய்வதும் நல்லறமாகும். சரீர உதவியோ பொருளுதவியோ அன்றி மனிதாபிமான உதவியோ செய்வதெல்லாம் அறத்தின் பாற்படுவனவே. இவ்வாறு நமது வாழ்வில் பொருள்தேடும் போது நல்லற வழியில் அவற்றைத்தேட வேண்டும் என்பதையே ஔவையார் கருத்திற் கொண்டிருந்தார். அதனால் அறம் என்பதனை முதலிற் கூறிவைக்க எண்ணினார்.

இனி, அறம் செய்ய வசதியிருந்தும் மனமில்லாமல் இருப்பவனுக்கு "அறம் செய்" என்று சொல்வதில் பிரயோசனமில்லை; அவன் செய்யான். அதனாலே, 'அறம் செய்ய விரும்பு' என்று சொல்லுகிறார். அறம் செய்வதாகிய இரண்டாவது நிலையைக் கூறாமல், விரும்புவதான முதலாவது நிலையைக்கூறி அமைகிறார் ஔவையார்; மனதிலே விருப்பத்தை ஏற்படுத்தினால், அவன் எப்படியும் அறத்தைச் செய்வான் என்ற எதிர்பார்ப்பு அவரிடம் இருக்கிறது.

இம்மை மறுமை இரண்டிற்கும் அறம் வேண்டப்பெறுகிறது.

**இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்**
**[illegible]நமை பிறங்கிற்று உலகு** என்பார் தெய்வப்புலவர்.

இம்மை [illegible]னும் இவ்வுலக வாழ்விற்கும் மறுமைக்கும் நல்லறம் மிகவும் வேண்டப்பெறு[illegible]து.

ஆக, அற[illegible] என்ற சிறப்பான சொல்லோடு நீதி வாக்கியத்தை ஆரம்பிக்கும் ஔவையார். அறம் செய் என்று சொல்லாமல், செய்ய விரும்பு என்று வாக்கியத்தை முடிக்கின்றமை மிகவும் முக்கியமானது.

மனம் உள்ளவன் மனிதன். ஆயினும் ஒன்றைச்செய்யும் மனம்- அதாவது விருப்பம் இல்லாமலும் மனிதன் இருக்கிறான் என்பதால், "செய்ய விரும்பு" என்று மனிதனுக்குப் பாடம் புகட்டுகிறார் ஔவையார் என்பது தெளிவாகிறது. மனதிலே விருப்பத்தை ஊட்டிவிட்டால் அறவினைதானே நிகழும் என்பது அவரது நம்பிக்கை ஆகிறது.

ஆகவே, 'அறம் செய்ய விரும்பு' என இவ்வளவு சிறப்பான ஒரு வாக்கியத்தை எடுத்துக்கூறி, மனித வாழ்க்கை சிறப்பாய் அமைய ஒரு பெரிய தத்துவத்தை விளக்கிய ஔவையாரின் பொன்மொழி போற்றத்தக்கது.

மகாபாரதத்திலே, தேரோட்டியின் மகனான கர்ணன், கொடைக்குக் கர்ணன் என்று இன்றும் புகழப்பெறுகிறான். பெரும் இராசாதிராசனான துரியோதனன்,

பாண்டவர்களுக்கு ஈயிருக்கும் இடந்தானும் இல்லையென வனத்துக்கு அனுப்புகிறான். இவர்கள் இருவரினதும் மனந்தான் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் காரணமாகிறது; பொருளல்ல என்பது நாம் உணர்வோமாக.

இனி, இந்த அறம்செய்ய விரும்பு என்ற சிறப்பான வாக்கியத்தைச் சிறுவர்களின் மனதிலே பதியச் செய்துவிட்டால், இளமையிற் கற்கச் செய்துவிட்டால் அவர்களின் வளர்ச்சிப் பாதையில் நல்ல பலனைத் தரும் என்பது ஒளவையாரின் உள்ளத்துணிபு என்பதையும் நாம் உணரவேண்டும். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதும் உண்மையே.

தெய்வப்புலவர் திருவள்ளுவரும் அறவினைக்கு நல்லமனமே அவசியம் வேண்டப்பெறும் என்று கூறியிருப்பதுங் காணலாம்.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல்ஞு அனைத்தறன்**
**ஆகுல நீர பிற** (குறள்) என்கிறார் அவர்.

மாசற்ற மனமுடையவராக வாழுங்கள்; அவ்வளவே அறம் ஆகும். ஏனைய செயல்கள்- மனம் தூய்மையில்லாமல் செய்யும் செயல்கள் எல்லாம் மற்றவர்கள் தம்மை மதிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் செய்வனவே என்கிறார் தெய்வப்புலவர்.

ஆக, ஒளவையார் 'விரும்பு' என்று சொல்கிறார்; திருவள்ளுவர் விரும்புகின்ற 'மனம்' பற்றிச் சொல்லுகிறார்.

ஒரு செயற்பாட்டில் மனம் வாக்கு காயம் என்னும் மூன்றும் தூய்மையாக இருக்கவேண்டும். அவற்றுள் மனம் தூய்மையாக இருந்துவிட்டால், ஏனைய சொல்லும் செயலும் நன்கு நடைபெறும் என்னும் தத்துவம் உணர்த்தப்பெற்றிருப்பதை உணர்வோமாக.

'அறம் செய்ய விரும்பு'



**02.01.2009 அன்று நடைபெற்ற திருவாசகவிழாப் போட்டியில் பங்குபற்றிய யா/ இராமநாதன் கல்லூரியில் கல்விகற்கும் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி ஒருவர் பண்ணிசை இசைக்கும் நிகழ்வு**

அநாதையின் கண்ணீர் ஆண்டவனிடம் செல்லும்.

# சைவசமய பக்தி இலக்கியங்களின் அடிப்படைகளும் பயன்பாடுகளும்

**வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M.A அவர்கள்**

பக்தியின் முதிர்ச்சியினாற் பிர பக்தி நிலை உண்டாகும்போது பக்தன் தன்னுணர்வற்றுத் தனக்கென ஒன்றையுங் கோராது இறையுணர்வாகிறான். அன்பு போன்று பக்தியும் உள்ளமும் ஓர் அனுபவ மாகும். இந்த உணர்ச்சியை இதுவெனச் சுட்டவோ விளக்கவோ முடியாது. அனு பவத்தில் உணரவேண்டும் பக்தியைப்பற்றி பல நூல்களைப் படிப்பதினாற் பக்தி உண்டாகப் போவதில்லை இக்காலத்தில் எமது கல்வி பகுத்தறிவுக் கல்வி. பகுத் துப் பகுத்து வாழ்க்கையிற் சலித்துப் போகிறோம். "பக்தியைக் காட்டுவதற்கு அடியார்களின் பாடல்களே உறுதுணை யாகின்றன.

**"தத்துவங்கள் எல்லாம் சகசமாய் ஆன்மாவில்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றி போல் – முத்திதனில்
சித்துமலம் அற்றார் செறிந்திடுவார் என்றுமறை
சத்தியமா ஓதியிடுந் தான்"** 12,

என்பது உண்மை விளக்கம்.

"ஆன்ம விடுதலையே அறிவின் முடிந்தபயன்"13 சித்தர்மரபும் பக்தி இலக் கியப் பாரம்பரியத்திலே பெரும் இடம் பெறுகிறது. பேராசிரியர் கலாநிதி கார்த்தி கேசு சிவத்தம்பி எழுதிய "மதமும் கவிதையும் - தமிழ் அனுபவம்" என்னும் நூல் முக்கியமானது. கலாநிதி கா. சிவத் தம்பியின் கருத்துக்கள் மேல்வருமாறு.

"பக்தி இலக்கியம் அனைத் திந்திய, உலகத் தளங்களில் நின்று நோக்கும்பொழுது தமிழ்க்கவிதை மரபின் பிரதான பரிமாணங்களில் ஒன்று ஆகும். ஆனால் அதனை அவ்வம் மதநிலை நின்று பார்த்து விளக்கங்கள் அளிக்கும் விளக்கங்களுள்ளும் புலமை உசாவில் முறைமையே பெருவாழ்வாக உள்ளது. பக்தி இலக்கியத்தினை, இலக்கிய ஆக்கமாக இலக்கிய வெளிப்பாட்டு முறைமைகள் பலவற்றை உள்ளடக்கிய ஒரு இலக்கியத் தொகுதியாக, சுருங்கக் கூறின் இலக்கியப் படைப்பாகப் பார்க்கும் ஒரு மரபு இல்லையென்றே கூறல்வேண்டும். ..... அதாவது சாதாரண இலக்கியப் படைப்புக்கள் போல இவற்றைப் பார்த்தல் கூடாது. இவை அதற்கு அப்பாற்பட்டது என்ற ஒரு நிலைப்பாடு இங்கு தொழிற் படுகின்றது." 14 என்ற பேராசிரியரின் கருத்து பக்தி இலக்கிய ஆய்விலே முற் றிலும் பொருத்தமானது. பக்தி இலக் கியத்தினைச் சரியாகப் புரிந்துகொள் வதற்கும் பேராசிரியர் சிவத்தம்பியின் இவ் வரிகள் அனுபவக் காட்சிகளாகும். நயந் தனுபவித்தற்குரியது பக்தியுணர்ச்சி. அறிவடிப்படையிலன்றி அனுபவ அடிப்

படையிலே உணர்வதற்குரியது பக்தி மெய்ப்பாடு.

'மதமும் கவிதையும் - தமிழ் அனுபவம்' என்ற பேராசிரியர், கலாநிதி கா. சிவத்தம்பியின் கொழும்புத் தமிழ்ச் சங்க உரையில் இடம்பெறும் மிகப் பிரதான செய்திகள் குறிப்பிடற்பாலன.

"மதம் என்னும் நிறுவனம் இல்லாத சமூகமே இல்லை என்பது சமூக மானிடவியல் துறையின் பதிகை ஆகும். கவிதை என்பது ஓர் உணர்வு நிலையின் வெளிப்பாடு ஆகும். தமிழிலக்கியத்தில் இந்த மத உணர்வு சார்ந்த இலக்கியங்களைப் "பக்தி இலக்கியம்" எனும் தொடர்கொண்டு குறிப்பிடுகிறோம். தமிழிற் பக்தி இலக்கியம் எனப்பொதுப்படையாகக் குறிப்பிடப்படுவது கி.பி. ஏறத்தாழ 500 முதல் 900வரை தோன்றிய சைவ, வைஷ்ணவ பாடல்களாகும். பாடல்கள் எளிமையான மொழியிலே மக்களிடையே மக்களுடன் இணைத்துப் பாடப்பட்டவை என்பது தெரிகின்றது.... வெளியே நடக்கும் இன்னல்கள் அல்லலுற்று வேதனைப் பட்டுக்கிடக்கும் நமது தலைமுறைக்கு இந்தமத அனுபவப்பாடல்கள் இலக்கிய நிம்மதி ஒன்றினைத் தருகின்றன என்பது மறுக்கப்பட முடியாத ஓர் உண்மையே யாகும்.... கோயிற் பயன்பாட்டு எழுச்சியுடன் பக்தி இலக்கியத்தையும் தொகுக்கும் பண்பு தொடங்குகின்றது. தமிழ் இலக்கியம் இத்தகையதொரு தொகுப்பு முறைமையினாலேயே பேணப்பட்டு வந்தது. (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு) அந்தப்பட்டியலில் பத்தாம் நூற்றாண்டின் பின்னர் தேவார திருவாசகங்களும், பாசுரங்களும் சேர்ந்து கொள்கின்றன. தேவாரப் பாடல்களின் பின்னர் தோன்றிய திருவிசைப் பாடல் களிலே மறைஞான பண்பைக் காணலாம். கருவூர்த்தேவரின் பாடல்களில் இப்பண்பு துல்லியமாகத் தெரியத்தொடங்குகின்றது. கடவுளைக் கருத்துருவமாய்ப் பார்க்கும் பண்பு அவரிடத்திற் பெரிதும் காணப் படுகிறது. குமரகுருபரர், அருணகிரி, அபிராமிப்பட்டர் போன்ற இறையனுபவஸ்தர்கள் 15ஆம் 16ஆம் நூற்றாண்டுக் குரியவர். இக்காலத்தில் முருக வணக்கமும், தேவிவணக்கமுமே தமிழில் முக்கியப்படுகின்றன"15. என்ற பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்களின் கருத்துக்கள் பெரிதும் மனங்கொளற்பாலன.

"பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின்புலவீர்காள்" என்பது தேவாரம். நம்மாழ்வாரும் "மணி வண்ணன் தன்னைக் கவிசொல்ல வம்மினோ" என்று அழைக்கிறார். இலக்கியவரலாற்றிலே 'பக்தியுணர்ச்சி' பாரதி காலம் வரை இடையறாத தொடர்ச்சியைக் கொண்டுள்ளது என்ற செய்திமேல் வருமாறு 'தமிழ்உலா'வில் உண்டு. அச் செய்தி வருமாறு:

"பக்தி உணர்வு சமுதாயத்திலே கிளர்ந்தபோது, கிளர்ந்தெழும் தேவை அல்லது சூழல் ஏற்பட்டபோது,

'உளங்கனிந்த போதெல்லாம் உவந்துவந்து பாடுமே' என்று திருமுறை பாடுகிறது. 'தன்னை நன்கு தமிழ் செய்வதற்காகவே இறைவன் என்னை நன்கு படைத்தனன் என்கிறார் திருமூலர். வள்ளல்களைப் பாடி பரிசில் வாழ்க்கை வாழ்ந்த நெறிமாறி, சமய உணர்வை மையமாகக் கொண்ட இடைக்காலத்திலே மானுடம் பாடும் குறிப்பு ஏற்கத்தக்கதாகச் சமய குரவர்கள் கருதவில்லை.

**"கொள்ளும் பயனில்லை குப்பை
கிளர்ந்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்து நும் வாய்மை
இழக்கும் புலவீர்காள்
கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்
லாம் தரும் கோதில் என்
வள்ளல் மணி வண்ணன் தன்னைக்
கவிசொல்ல வம்மினோ"**

என்று பாடுகிறார் நம்மாழ்வார் பக்தி இலக்கியத்தில். இக்குறிக்கோள் செல்வாக்குப் பெற்றுக் கவிதையரங்கிலே மேலாண்மை செலுத்தியது. சமய உணர்வில் வீழ்ச்சி என்று கொள்ளாவிடினும் அதன் தளர்ச்சியென்று கொள்ளத்தக்க சூழல் உருவானபோது உலகியல், சமுதாயஇயல் உணர்வு மேலோங்கிய காலத்திலே கடவுட்பாடல் செல்வாக்கை இழந்தது. சமய உணர்வினைச் சற்றும் தளராமலேயே- சமுதாய உணர்வுக்கும் அரசியல் விடுதலைக்கும் தம் கவிதைத் திறனைக் காணிக்கையாக்கினார் பாரதியார். 16.

"பெரியபுராணத்தின் பின்னர் தமிழில் எழுந்தது திருவிளையாடற் புராணம். சிவனடியார்கள் பெரியபுராணத்தில் பெற்றுள்ள இடத்தையே சிவபெருமான் திருவிளையாடற் புராணத்தில் பெற்றுள்ளார். எனினும் சமண பௌத்த காப்பியங்கள் போலன்றித் தொன்மைக் கூறுகள் மிகுதியாக இதில் இடம் பெற்றுள்ளன". 17.

**திருமுருகாற்றுப்படை: காரைக்காலம்மையார் பாடல்கள்:**

பத்துப் [illegible]ள்ள மற்ற ஆற்றுப் படைகளைப் பே[illegible] [illegible]ி முருகாற்றுப்படை அடியாரொருவரை [illegible]றைவனிடம் ஆற்றுப் படுப்பது புதியமுறையெனப் பலரும் கூறுவர். 18 காரைக்காலம்மையார் சமய வளர்ச்சியின் பொருட்டுத் துறவுபூண்ட சைவத்துறவியெனலாம். நிலையாமை யையும், யாக்கையின் இழிவையும் தமது பாடல்களில் மிகத்தெளிவாகப பாடுகிறார். 19 வெள்ளியம்பலத்துத் திருநடனம் கண்ட பதஞ்சலியின் காலம் காரைக்காலம்மையின் சமகாலமாகும். அம்மையாரும் இறைவன் கூத்தினை திருவாலங்காட்டிற் கண்டார். பதஞ்சலியை இவர் பாடலிற் குறிக்காமல் அவர்க்கு முற்பட்டவர் என எண்ணவேண்டியுள்ளது. நக்கீரர் முதலோரும் அம்மையைக் குறிக்காமையையும் கருதவேண்டும். கண்ணப்பரையும் அம்மையார் குறிக்காமையால் அவர் அம்மையாருக்கும் முந்தியவராகலாம். முதல் நாயனார் அவரே என்பது அனைவர் கோட்பாடுமாகும்.

"அம்மையாரது பாடல்கள் ஆண்டாள் பாடலின் உருக்கமும் ஈடுபாடுமுடையன. அப்பன் ஆடுங்காட்டு வர்ணனை கலிங்கத்துப்பரணிப் பேய்களையும் நினைவுறுத்துகின்றன. வர்ணனைகள் அளவும் செம்மையுமுடையன. இறைவன் ஆட்டத்தைப் படிக்கையில் ஆடலை நேரிலே காணும் உணர்ச்சி பொங்கிவருகிறது. 20

**வஞ்சனையுடையவர் எவரிடமும் அணுகாதவர் இறைவர்.**

திருமந்திரம் என்ற உயர்ந்த நூலைத் தமிழகத்திற்களித்தவர் திருமூலர். அவர் ஒரு தாந்திரிகர். அவர் நாயன் மாருள் ஒருவராகத் திருதொண்டத் தொகையுள் குறிப்பிடப்படுகிறார். எனவே சுந்தரர் காலமாகிய கி.பி 7ஆம் நூற்றாண் டின் இறுதி அல்லது 8ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திற்கும் முந்தியவர்.

"அப்பர் சம்பந்தர்க்கும் முற்பட்ட நாயன்மாருள் இவரை ஆராய்ச்சியாளர் எண்ணுகின்றனர். அப்பரும் சம்பந்தரும் திருவாவடுதுறைக் கோவிலுக்கெழுந் தருளும்போது திருமந்திரத்தை அவர்கள் கொடிமரத்தின் கீழிருந்தெடுத்ததாகக் கர்ணபரம்பரையொன்றுள்ளது. திருமூல ரது சொற்கள் சுருக்கெனத் தைப்பவை; ஆணித்தரமானவை. சமூகத்திருத்தத்திலும் தமிழுணர்ச்சியிலும் நக்கீரரைப் போன் றவர். வள்ளுவர் அறத்தை உலகியலோ டொட்டிக் கூறினார். திருமூலர் அதனை ஆன்மவியல் யோக விபரங்களுடன் இணைத்துக்கூறினார். சைவசித்தாந்தத்தின் தனிமுதல்நூல் திருமந்திரம். தமிழில் கடவுளியலுக்கும் அதுவே முதலான தாகும். குறளும் மந்திரமும் இரட்டை நூல்களெனலாம். 21.

ஆழ்வார், நாயன்மார்களது பக்திப்பாடல்கள் தமிழிலக்கியத்தின் ஒரு சிறப்பியல்புடைய பகுதியாகும். பக்திப் பாடல்கள் இசைவளம் பொருந்தியமை வன. சங்க இலக்கியங்களிலும், சிலப் பதிகார முதலிய நூல்களிலும் ஏழிசை மிகுதியாகப் பேசப்படுகின்றது. அவ் ஏழிசைக்கிலக்கியமானவை இப்பக்திப் பாடல்கள். பொதுமக்களைக் கவர்ந்து பக்திப்பாடல்களை இசைப்பதற்கு இசைப் பண்பு பெரிதும் உதவியது. சம்பந்தரது தேவாரத்தில் மட்டும் 70 பண்களுக்குரிய அமைப்புக்களிருப்பதாகக் கண்டுள்ளனர். இக்காலவெல்லையில் மகேந்திரன் கூன் பாண்டியன் முதலிய அரசரும் எட்டாம் நூற்றாண்டில் பராந்தக நெடுஞ்சடையான் போன்ற அரசரும் தத்தம் சமயத்தை விட்டுச் சைவத்திற்கும் வைணவத்திற்கும் மாறியுள்ளனர். 7ஆம் நூற்றாண்டில் இத் தகைய மாற்றத்திற்கு இவ்விரு நாயன் மாருமே காரணமாவார். அடுக்கியடுக்கி வந்த இன்னல்களை அசையாமாற்றாங்கி இவர்கள் வளர்த்தது சமயமட்டுமன்றி இலக்கியமுமாகும். வயதும், நீண்ட அனு பவமும்மின்றியும் சிறந்த இலக்கியங்கள் எழுவதுண்டென்பதற்குச் சம்பந்தரது பாடல்களே சான்றுகளாகும். இவற்றால் அருளுணர்ச்சியும் உள்ளத்தில் அமைந்து கிடக்கும் பண்புமே இலக்கியத் தோற்றத் திற்குப் பெருங்காரணம் என்பது புலப்படும். அப்பரது பாடல்களில் அறமும், உலகானு பவமும், சிவனையே தொடர்ச்சியாகப் பாடும் பண்பும் மிகுதியாகக் காணப் படுமெனில் சம்பந்தரது பாடல்களில் இயற்கை வர்ணனை மிகுதியெனலாம்.

(தொடரும்.....

### காக்கும் எழுத்து

தமிழில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்று ஓசைகள் உண்டு. மு, ரு, கு இந்த மூன்று எழுத்துக்களும் மூன்று ஓசையுடன் கூடியவை. இந்த மூன்று எழுத்துக்களிலும் காத்தல் எழுத்தாகிய உகரம் "முருகு" என்ற மந்திரத்தில் வருகிறது.

**தூய்மையான மனதில் அமைதி குடிகொள்ளும்.**

உ

# வேண்டுதல்கள்

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

நாம் இறைவனை எத்தனையோ உருவங்களில் கண்டு வழிபடுகின்றோம். கணபதி, சிவபெருமான், உமாதேவி, முருகன், விஷ்ணு என்று நீண்ட பட்டியல் இடலாம். அதேபோன்று பல உறவுகளிலே யும் அவனைக் காண்கிறோம். குருவாய், தந்தையாய், தாயாய், குழந்தையாய், காதலனாய், தோழனாய்க்கண்டு வணங்கு கிறோம். பாரதி கண்ணனைச் சேவகனாக வும் கண்ணம்மாவைக் காதலியாகவும் கருதிப் பாடியிருக்கிறார். ஒவ்வொருவருக் கும் எந்த உறவில் அதிக ஈடுபாடோ அந்த உறவாக இறைவனைக் கண்டிருக்க வேண்டுமென்பது எனது எண்ணம்.

ஏன் அப்படி நினைக்கிறேன் தெரி யுமா? நானும் அப்படி இறைவனிடம் ஓர் உறவுகொண்டிருப்பதனால் என்னைப் போல் அவர்களு கருதியிருக்கலாம் என் பது என் முடிபு. எனக்கு ஓர் அன்பான அண்ணன் வேண்டுமென்பது சிறுவயது முதல் எனக்குண்டான ஆசை. அதனால் நான் பெரிதும் விரும்பி வழிபடும் கண பதியை எனது அண்ணனாக எண்ணி உறவுகொண்டாடுவேன். அதுபோல் அவர் களுமிருந்திருக்கலாம்.

ஆன்மா இறைவனிடம் ஈடுபாடு கொண்டு அவனுடன் ஐக்கியப்படுவதை தலைவனிடம் தலைவி காதல் கொண்டு இணைவதாகக் காட்டிப் பாடிய பாடல்கள் பல உள்ளன. காதலன், காதலி பற்றிய பாடல்கள்போன்று அவை தோன்றினாலும் உண்மையிலே ஆழ்ந்த தத்துவக் கருத் துகள் பொதிந்தவையாகவும். திருக் கோவையாரை இதற்கு ஓர் உதாரண மாகக் கூறலாம்.

**ணம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணாங் கேட்டாள்**
**பி னை அவளுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்**
**தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே**

என்ற அப்பர் பெருமானின் தேவாரமும் இவ்வாறான தத்துவப் பொருளையே கூறியுள்ளது.

இவ்வாறு திருமாலைத் தன் தலைவனாகக் கருதிக் காதலித்து அவனைத் தான் திருமணஞ்செய்ய வேண்டுமென வேண்டி நின்றவள் ஆண்டாள். அவளது பாடல்களில் இத்தகைய வேண்டுதல்களையே காணலாம்.

'வேங்கடவன் வரக்கூவாய்' எனக் குயிலிடம் கோருவாள். மாதவன் கையிலிருக் கும் சங்கிடம் பின்வருமாறு வேண்டுவாள்.

*சடங்குகளால் இறைமையை உணர முடியாது.*

**கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?**
**மருப்பு ஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழிவெண் சங்கே.**

என்பாள்.

பாற்கடலிலே பாம்பணையிலே பரந்தாமன் படுத்துறங்குகிறான் அந்தப் பாற்கடலுக்கு

**கடலே கடலே உன்னைக் கடைந்து கலக்குறுத்து**
**உடலுள்ள புகுந்து நின்று ஊறல் அறுத்தவர்க்கு என்னையும்**
**உடலுள் புகுந்துநின்று ஊறல் அறுக்கின்ற மாயர்க்குஎன்**
**நடலைகள் எல்லாம் நாக அணைக்கே சென்று உரைத்தியே**

எனத் தன் துன்பங்களையெல்லாம் பாம்பணையிடம் சென்று கூறுமாறு கோரிக்கை விடுப்பாள். அதுமட்டுமல்ல. கண்ணபிரானுக்காக வெண்ணெயும் சர்க்கரைப் பொங்கலும் செய்துவைத்து அவன் வந்து இவற்றை ஏற்றுக்கொள்ளானோ எனக் காத்திருப்பாள்.

**நாறு நறும்பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்கு நான்**
**நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்**
**நூறு தடா நிறைந்த தக்கார வழசில் சொன்னேன்**
**ஏறு திருவுடையான் இன்று வந்திவை கொள்ளுங் கொலோ!**

இவ்வாறு வைத்திருப்பவற்றை அவன் வந்து அமுதுசெய்திடப்பெற்றால் "ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்நாளும் செய்வன்" என்பாள். நூறு தடாவில் வைத்துக் காத்திருப்பவள், அவற்றை அவன் வந்து அமுது செய்தால் நூறாயிரம் தடாக்களிலே கொடுப்பதுடன் வரப்போகும் நாட்களிலும் அவ்வாறு செய்யப்போகிறாளாம்.

**மானிட வர்க்கென்று பேச்சுப்படில்**
**வாழ்கில் லேன்கண்டாய்**

எனக் கூறித் திருமாலையே மணப்பதெனத் தீர்மானித்திருந்தவள் கோதை. இந்தச் சாதாரண உலகவாழ்க்கை வாழ அந்த ஆன்மா விரும்பவில்லை. அது திருமாலை நாடி நின்றது. "இறைவனைத் திருமணஞ்செய்ய முடியுமா? இது என்ன வித்தியாசமான எண்ணம்?" என்றுதானே உலகோர் பேசுவார்கள். ஆனால் அந்த ஆன்மா பக்குவப்பட்டுவிட்டது. திருமால் தேடிவந்து நிற்கின்றானே!

**தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத்**
**தனிவழியே போயினாள் என்னுஞ் சொல்**
**வந்த பின்னைப் பழிகாப்பு அரிது**
**மாயவன் வந்து உருக்காட்டுகின்றான்.**

எனப்பாடிய ஆண்டாள் மதுசூதனன் வந்து தன்னை மணம்முடிக்கவும் கனவு

கண்டாள். "வாரணமாயிரம் சூழவலம் செய்து" எனத் தொடங்கி அந்தத் தெய்வீகத் திருமணத்தை நம் கண்முன் நிகழவைக்கும் வகையில் ஆண்டாள் பாடியுள்ள பாடல்களும் அதை வேண்டிப் பாடியதேயாகும்.

**இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்**
**நம்மையு டையவன் நாராயணன் நம்பி**

என அப்பாடல்களுள் ஒன்றில் விவரிக்கப்படும் நாராயணனுடல்லவா அவள் இணைகிறாள்!

இவ்வாறு இடையறாது வேண்டியதன் பயனாக அவள் கமலக்கண்ணனைப் பிருந்தாவனத்திலே கண்டாள். பதினான்காம் திருமொழியில் அதனை ஆண்டாள் நன்கு விவரித்துள்ளாள். இறைவனை நாடித்தேடி வேண்டி நிற்பவரிடம் அவன் வருவான். திருவரங்கனுடன் ஒருங்கிணைய வேண்டிய ஆண்டாளிடமும் அவன் வந்தான்.




**2008ஆம் ஆண்டு இடம்பெற்ற திருவாசக விழாவிற்கு தலைமை தாங்கிய ப. மனோகராக் குருக்கள் அவர்களும், சிறப்புரை ஆற்றிய அதிபர் ச. லலீசன் அவர்களும் கீழ்ப்பிரிவில் பங்கு பற்றிய மாணவர்கள் ஆறுதல் பரிசுகளுடனும் காணப்படுகின்றனர்.**

உ

(தொடர்ச்சி...

# மோகனதாஸ் சுவாமிகளின்

# வட இந்திய ஸ்தல யாத்திரை



**காலம்: 19.07.2008. சனிக்கிழமை. அதிகாலை 3.00மணி**

**இடம்: சென்னை - சிதம்பரம்.**

அதிகாலை 3மணிக்கு சென்னை யிலிருந்து புறப்பட்டு காலை 5 மணியள வில் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி திருக் கோயில் தரிசனம். காலைவேளையில் அன்னையின் தரிசனம் மனதுக்கு பெரும் நிம்மதியையும், உடலுக்குப் புதிய தெம்பையும் கொடுத்தது. ஆதிபராசக்தி யின் அறக்கட்டளை சார்பில் இயங்கும் பல்கலைக்கழக வளாகம் கோயிலின் மேற்குப்புறமும், வீதியின் மறுபுறம் கிழக் காக பராமரிப்பற்ற வயோதிபர்- சிறுவர் இல்லங்களும் இன்னமும் பல்வேறு கட்டிடங்களும் கண்டு வியந்து நின்றோம். அத்தனையும் அன்னையின் ஆசியுடன் இயங்கும் அற நிலையங்கள்.

இவற்றிற்கு காரணமாக விளங்கிக் கொண்டிருக்கும் ஆதிபராசக்தியை வணங் கிய மனநிறைவுடன் காலை 6.30 மணி யளவில் ஆடல்வல்லாளனாக விளங்கும் தில்லை நடராஜப்பெருமான் வீற்றிருக்கும் சிதம்பர தரிசனத்திற்காகப் புறப்பட்டு முற் பகல் 11.00 மணிளவில் தில்லைக்கூத்தன் சந்நிதியை அடைந்தோம்.

எமது யாத்திரையின் முகவராகச் செயற்பட்ட திரு ஸ்ரீரங்கநாதனது வழி நடத்தலில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு அந்தணர்மூலம் ஆலய உட்பிரகாரத்தில் உள்ள பரிவார மூர்த்தங்களின் பூசை வழிபாடுகளிலும் கலந்து சிதம்பர ரகசியம் என்று சொல்லப்படும் பொன்னால் வேயப் பட்ட கூரையின் கீழ் இருந்து அருள் பாலித் துக்கொண்டு இருப்பவராகவும் "பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று அப்பரடிகளும், "பொன்னம்பல நாதன் கழல் பொற்போடு பணிந்தான்" என்று வில்லிபுத்தூராழ்

வாரும் போற்றிப் புகழ்ந்த "புலியூரில்" தில்லைக் கூத்தனையும், மகாவிஷ்ணுவை யும் ஒரே பார்வையில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றோம். அங்கிருந்து பிற்பகல் 1.30 மணியளவில் மதிய உணவை முடித் துக்கொண்டு மாலை 5.30 மணியளவில் திருவண்ணாமலையை அடைந்து அங்கு உள்ள விடுதியில் தங்கினோம்.

**காலம்: 20.07.2008 ஞாயிறு.**

**இடம்: திருவண்ணாமலை.**

அதிகாலை 6.30க்கு திருவண்ணா மலை ஈசனின் தரிசனத்தை முடித்து மகா தீபம் ஏற்றப்படும் மலையை வணங்கி கிரிவலப் பாதை வழியே சென்று ரமண மகரிஷி ஆச்சிரமம், வழியில் உள்ள கோயில்கள் ஆகியவற்றை தரிசித்ததுடன் எமது பயணம் வேலூர் பொற்கோயிலை நோக்கித் தொடர்ந்தது. சென்னையில் இருந்து 150கி.மீ தூரத்தில் வேலூர் அருகே உள்ள "திருமலைக்கொடி" என் னும் இடத்தில் அண்மைக்காலத்தில் (16 வருடங்களின் முன்பு) தோன்றிய அன்னை ஸ்ரீ நாராயணி வீற்றிருக்கும் புகழ்பெற்ற ஆலய வளாகத்தை அடைந்தோம்.

**காலம்: 20.07.2008 ஞாயிறு காலை 10.30மணி**

**இடம்: வேலூர் "திருமலைக்கொடி"**

சென்னையிலிருந்து 150 கி.மீ தூரத்தில் வேலூர் அருகே "திருமலைக் கொடி" என்னும் பகுதியில் அமைந்துள் ளது. "அன்னை ஸ்ரீ நாராயணி அம்டாள்" ஆலயம். காஞ்சியில் காமாட்சி, மதுரை யில் மீனாட்சி, [illegible]ல் விசாலாட்சிபோல், அன்னை இங்கு [illegible]நாராயணி" என்னும் திருநாமத்தோடு அருளாட்சி புரிகிறாள்.

பொற்கோய[illegible] வளாகம் "ஸ்ரீபுரம்" என அழைக்கப்படுகிறது. வளாகத்தின் உள்ளே மூன்று அடுக்குகளாக மரங் களின் வரிசை. மதிற் சுவரை ஒட்டிய முதல் வரிசையில் நிழல்தரு பெருமரங்கள்; இரண்டாவது அடுக்கில் கனிதரு மரங்கள், மூன்றாவது அடுக்கு வகைவகையான பூக்களைச் சொரியும் பூ மரங்கள். இவை நாட்டப்பட்டிருக்கும் விதமே கலையம்சம் பொருந்திய தனியழகு.

பொற்கோயில் அன்னை ஸ்ரீ நாராயணியைத் தரிசிக்கச் செல்லும் பாதை நட்சத்திர வடிவில் அமைந்துள் ளது. நவீன முறையில் பாதையமைத்து, தளத்துக்கு மாபிள் பதித்து, இரு மருங்கும் குறுகிய சுவர் கொண்டதாக 2 கி.மீ தூரத் தையும் பக்தர்கள் களைப்பின்றிச் செல் வதற்கு ஏற்றபடி அழகுற அமைத்துள்ளார் கள். வழிநெடுகிலும் பல மொழிகளிலும் அடிப்படை தர்மங்களை விளக்கும் வாச கங்களைப் பொன்மொழிகளாக எழுதி வைத்துள்ளார்கள். ஸ்ரீபுரத்துள் நடந்து செல்லும்போது காதில் மென்மையாகக் கேட்கும் மந்திர ஒலியும் பக்தி கீதங்களும் மனதுக்கு அமைதியையும் ஆனந்தத் தையும் ஒருங்கே தருகின்றன.

ஸ்ரீ நாராயணிக்கான மூலக் கோயில் மிக அழகானது. நவீன கலையம் சங்கள் கொண்ட பளிங்குமாளிகை அது. கர்ப்பக்கிரகம் முழுவதும் பொற்தகடு களால் வேயப்பட்டுள்ளது. பகற்பொழுதில் கதிரவனின் ஒளிபட்டு அந்த வளாகம்

*பாபச் செயல்களே நம் உயிருக்குப் பகை.*

முழுவதுமே தகதகவென ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீ நாராயணி தவிர வேறு பரிவார மூர்த்தங்கள் எதுவும் அங்கில்லை. கோயில் முகப்பின் மேற் தளம் முழுவதும் சிறந்த கலைநுட்ப வேலைப்பாடு கொண்டதாக உள்ளது. உள்ளே கருவறையில் அன்னையைப் பார்த்ததும் அனைத்துப் பாவங்களும் நீங்கியதான ஒரு பரிபூரண மனநிறைவு ஏற்படுகிறது. இக்கோயிலை பக்தியாகவும் அனுபவிக்கலாம். கலை அம்சமாகவும் ரசிக்கலாம். அதனால் பல மதத்தவர் களும் இங்கு வருகை தருவதை அவ தானிக்க முடிகிறது. தினமும் அன்னை யைச் சரணடையும் பல்லாயிரக் கணக் கான பக்தர்கள் திரும்பிவரும் நட்சத்திர வடிவிலான பாதையில், தென்னை ஓலை யிலான பாத்திரத்தில் அனைவருக்கும் பிரசாதம் தருகிறார்கள். அரிசிச்சோறு- தக் காளி- பிளம்ஸ்- கயு இன்னும் பலவும் கலந்த அமிர்தக் கலவையாக இருந்தது அந்தப் பிரசாதம்.

அன்னையின் அற்புத தரிசனம் முடிந்து பகல் 1 மணிக்கு காஞ்சிபுரம் நோக்கிப் புறப்பட்டோம். காஞ்சியில் ஏகாம்பரேஸ்வரர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில், காமாட்சி அம்மன் ஆலயம், உலகளந்த நாதர் கோயில் ஆகியவற்றைத் தரிசித்த பின்னர் இரவு 10.00 மணிக்கு மீண்டும் சென்னை நோக்கிப் பயணமானோம்.

**எம்மால் மேற்கொள்ளப்பட்ட வட இந்திய தலயாத்திரையின் ஆரம்பகட்ட யாத்திரையில் தமிழ்நாட்டில் உள்ள ஒரு சில தலங்களைத் தரிசித்தோம். இத்தகைய தல யாத்திரையை 2006ஆம் ஆண்டு பங்குனி மாதமளவில் தனியாளாக தரிசித்த பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. அந்த யாத்திரையின் பொழுது நான் திருச்சி சென்று அங்கிருந்து பல தலங்களுக்குச் சென்றிருந் தேன். அது ஓர் அனுபவம். ஆனால் இம்முறை யாழ்ப்பாணத்திலிருந்து மூவராக புறப்பட்டு கொழும்பிலிருந்து 10பேர் கொண்ட குழுவாக சென்னையை அடைந்து தலங்களைத் தரிசித்தது இன்னொரு அனுபவம். குறிப்பாக எமது தலயாத்திரையின் முகவராகச் செயற்பட்ட திரு ஸ்ரீரெங்கநாதன் அவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட சொகுசு வாகனத்தில் அவரது வழிநடத்தலில் ஒரே குழுவாகச் சென்று ஒவ்வொரு தலங்களையும் தரிசிக்கும்பொழுது அந்தந்த இடங்களுக்கு ஏற்றவகையில் எமது வழிபாட்டு முறைகளும் அமைந்தமை மனதிற்குகந்ததாக இருந்தது.**

**இதனைத் தொடர்ந்து எம்மால் மேற்கொள்ளப்பட்ட வட இந்தியத் தல யாத்திரையில் எனக்கும் எமது குழுவிற்கும் ஏற்பட்ட பயணத்தின் சுவாரஸ்ய அனுபவங்களின் தொகுப்புக்கள் இனிவரும் மலர்களில் மலரும்.**

**(தொடரும்...)**

நான் அல்லாத தன்மைதான் அன்பு என்பதன் பொருளாகும்.

உ

# முருகன் புகழ்பாடும் பங்குனி உத்தரம்

## (பங்குனி 26இல் (08.04.2009) வரும் பங்குனி உத்தர நன்னாளின் சிறப்புக் கருதி இத் தொகுப்பு வெளியாகிறது)

திரு வல்லைச்செல்வம் அவர்கள்

பங்குனி உத்தரத்துக்கு அப்படி என்ன சிறப்பு? ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் வடிவமான சூரர்களை அழித்து தேவர்களைக் காக்க வேண்டி சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து முருகப்பெருமான் உதித்தார். சிங்கமுகன், தாருகன், ஆகிய அசுரர்களை வதைத்து சூரபத்மனை இரண்டாகப் பிளந்து மயிலாகவும் சேவலாகவும் மாற்றி சூரபத்மனின் ஆணவத்தை அழித்தார். இவ்வாறு அசுரர்களை வென்ற முருகனுக்கு இந்திரன் தன் மகள் தேவயானையை வெகுமதியாகத் திருமணம் செய்து கொடுத்தார். திருப்பரங்குன்றத்தில் தேவயானை திருமணம் நடந்ததாகப் புராணங்கள் [illegible]ன்ற நன்னாள் ஒரு பங்குனி உத்[illegible]ம்.

பழனியில பத்து நாட்கள் கொண்டாடப்படும் இவ்விழ[illegible]வில் காலை- மாலை இரு வேளையும் முத்துக்குமாரசுவாமி வள்ளி தேவயானை சமேதரராகப் பல்வேறு வாகனங்களில் மலைவீதியில் வலம் வந்து அருள்பாலிப்பார். பங்குனி உத்தரத்தன்று தேரோட்டம் நடைபெ[illegible]ம். பழனிக்குப் பால்க்காவடி, பன்னீர்க்காவடி, புஷ்பக் காவடி, சந்தனக்காவடி, இளநீர்க்காவடி என பலவிதமான காவடிகள் வந்துசேரும். அத்துடன் கரகாட்டம், காவடியாட்டம் என பலவிதமான நாட்டுப்புற ஆடல் வகைகள் நடைபெறும். நாட்டுப்புற மக்கள் மிகுதியாகக் கலந்துகொள்ளும் இந்த உத்தர விழாவைக்காண தமிழ்நாட்டின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் மக்கள் கூட்டம்கூட்டமாக வந்துசேருவர்.

மலையே இல்லாத தஞ்சை மாவட்டத்தில் மணல் குன்றினால் அமைந்த கட்டுமலையில் உள்ள சுவாமிமலைத் திருக்கோயிலில் பங்குனி உத்தர நன்னாளில் வள்ளிதிருமணம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இதைப்போலவே திருச்செந்தூர் பங்குனி உத்தரவிழாவில் வள்ளி கல்யாணம் நடைபெறுகிறது. முருகப்பெருமான் மூலமூர்த்தமாகக் குடி கொண்டு உள்ள திருத்தலங்களில் பங்குனி உத்தரம் பிரம்மோற்சவமாகவும், கல்யாண உற்சவமாகவும் கொண்டாடப்படுகிறது.

தவத்தில் இருந்த சிவபெருமானை மன்மதன் மலர்க்கணை எய்து தவத்தைக் கெடுக்க, சிவபெருமான் நெற்றிக் கண்களால் காமனை எரித்தது பங்குனி உத்தர நாளில்த்தான். கணவனை இழந்த ரதிதேவி சிவபெருமானிடம் மாங்கல்யப் பிச்சை கேட்க, பரமனும் மன்மதன் அருவமாக இருந்து தம் தொழிலைச் செய்யுமாறு அருளினார்.

திருமயிலை கபாலீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் பங்குனி உத்தரப் பெருவிழா தனிச்சிறப்பானது. இந்தப் பெருவிழாவில் கற்பகாம்பாள் கபாலீஸ்வரர் கல்யாணத்தையும் அனைவரும் கண்டு

*இறையருள் இருந்தால் மிகப்பெரிய செயலைக்கூட இலகுவாக முடித்துவிடலாம்.*

களிக்கிறார்கள். திருமயிலைப் பங்குனி உத்தர விழாவில் "அறுபத்துமூவர்" புறப் பாடும் நடைபெறுகிறது.

கேரளாவில் பந்தளராஜன் குமாரனாக ஐயப்பன் அவதரித்ததும் பங்குனி உத்தரமே. பங்குனி உத்தரத்தன்று சபரிமலையில் ஐயப்பனுக்கு ருத்ரம் சொல்லி அபிஷேகம் செய்கிறார்கள்.

பஞ்சபாண்டவர்களில் வில்லாளியான அர்ச்சுனன் பிறந்ததும் பங்குனி உத்தரமே. மனிதன் வாழவேண்டிய முறையை வாழ்ந்து காட்டிய ராமபிரான் சீதாதேவியை மணந்ததும் பங்குனி உத்தர நன்னாளிலேயாகும். இதே நாளில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கல்யாணமும், மதுரை அழகர்கோயில் திருக்கல்யாணமும் நடைபெறுகிறது. மதுரை மீனாட்சி சொக்கநாதர் கல்யாணம் பங்குனி உத்தர நன்னாளில் நடைபெற்றதாக திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

திருமகள் பங்குனி உத்தர விரதத்தைக் கடைப்பிடித்து விஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் பேறுபெற்றதாகப் புராணம் கூறுகிறது. இந்த விரதத்தை அனுட்டித்தே இந்திரன் இந்திராணியையும், பிரமன் சரஸ்வதியையும் பெற்றதாகக் கூறுவார்கள். எனவே, இந்த விரதத்தினைக் "கல்யாண விரதம்" என்றழைப்பர். இத்தகைய சிறப்புக்கள் பெற்ற பங்குனி உத்தர நன்னாளில் நோன்பிருந்து நாமும் நற்பேறுகள் பலவும் பெற்று உய்வோமாக.



**சந்நிதியான் ஆச்சிரமத்தினால் ஆற்றப்படும் சமூகப்பணிகளின் வரிசையில் யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய தரம்- 1 மாணவர்கள் அனைவருக்கும் சீருடைகள் தைத்து அதிபர் ஆசிரியர்களிடம் கையளித்தபோது கலந்துகொண்டோர் காணப்படுகின்றனர்.**

நல்லவர்களின் நட்பாலும் திருமுறைப் பாராயணத்தாலும் நல்லறிவைப் பெறலாம்.

உ (தொடர்ச்சி...

# 2009ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| கு. கங்கைவேணியன் வேணி ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம் | | | 5மூடை அரிசி |
| சுசீலா நகைமாடம் | | பருத்தித்துறை | 3000. 00 |
| சேதனன் தமிழினி மிதுலன் | இமையாணன் | உடுப்பிட்டி | 3000. 00 |
| திரு முகுந்தன் | | பத்தமேனி | 1000. 00 |
| வ. கணபதிப்பிள்ளை தல்லையப்புலம் | | கரவெட்டி | 2500. 00 |
| சி. ஸ்ரீஆனந்தராசா (சிட்னி) அவுஸ்திரேலியா | | நவிண்டில் | 10000. 00 |
| பத்மநாதன் கதிர்காமநாதன் | (புலோலி) | நியூசிலாந்து | 8000. 00 |
| இ. லோகநாயகி | | சிறுப்பிட்டி தெற்கு | 5000. 00 |
| S. கனகசுந்தரம் | | சிறுப்பிட்டி தெற்கு | 1000. 00 |
| தி. தவபாக்கியராசா | | அச்சுவேலி தெற்கு | 1மூடை சம்பா |
| இரட்ணசபாபதி குகதாசன் (ஜேர்மன்) புலவனார்வீதி கோண்டாவில் | | | 10000. 00 |
| திரு சிவராசா | துன்னாலை | (அவுஸ்திரேலியா) | 2475. 00 |
| சந்திரலிங்கம் மாதுமை | இன்பர்சிட்டி | பருத்தித்துறை | 2500. 00 |
| சி. பத்மநாதன் | மக்கள்வங்கி | திருகோணமலை | 5000. 00 |
| த. உதயசங்கர் | உவர்மலை | திருகோணமலை | 1500. 00 |
| செல்வி வ. கனகசபை | பார்வீதி | மட்டக்களப்பு | 2000. 00 |
| கு. கோடீஸ்வரன் | உவர்மலை | திருகோணமலை | 2000. 00 |
| ப. பார்த்தீபன் | கோண்டாவில் மேற்கு | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| அ. ஐங்கரன் | வித்தியாலயவீதி | திருகோணமலை | 2000. 00 |
| ஆ. சசிகரன் | உவர்மலை | திருகோணமலை | 2000. 00 |
| திருமதி வைஜந்தி குலேந்திரராஜா இராஜவரோதயம் வீதி திருகோணமலை | | | 5000. 00 |
| ம. பிறேம்குமார் | லிங்கநகர் | திருகோணமலை | 2000. 00 |
| க. மதிவதனன் | திருஞானசம்பந்தர்வீதி | திருகோணமலை | 1000. 00 |
| வே. பார்த்தீபன் | லிங்கநகர் | திருகோணமலை | 1000. 00 |
| மா. சிவஞானசுந்தரம் | நில அளவையாளர் | இடைக்காடு | 3000. 00 |
| திருமதி தங்கராசா | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| பஞ்சாட்சரநாதன் கலைவாணி | | | 5000. 00 |
| செ. சிவலிங்கம் | மலர்வசந்தம் | இணுவில் | 1000. 00 |
| நீரஜா சத்தியசீலன் | மக்கள்வங்கி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சு. சுரேந்திரரத்தினம் | | கோப்பாய் தெற்கு | 5000. 00 |
| திருமதி S. விசயகுமார் | | கோப்பாய் தெற்கு | 10000. 00 |
| அருள்ஈசன் கஸ்த்தூரி | | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ஜெகதீசன் தனுஜா | | வல்வெட்டித்துறை | 5000. 00 |

| | | | |
|---|---|---|---|
| Dr. ஜெயராசா | கந்தர்மடம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சனாதன் நினைவாக பொ. பாலசுப்பிரமணியம் | | இணுவில் | 10000. 00 |
| விபுலானந்தன் சதீசன் | ஸ்ரேசன் றோட் | மல்லாகம் | 3000. 00 |
| ச. ஜெயதாசன் | செந்தாவளவு | கோப்பாய் | 1000. 00 |
| திருமதி ஜெயதேவி குலராசா | | ஜேர்மனி | 5000. 00 |
| த. காசிநாதர் | | சிறுப்பிட்டி | 2000. 00 |
| மனோரஞ்சன் உதிசன் | அத்தாய் | வரணி | 2000. 00 |
| செல்வி காயத்திரி நெல்லிநாதன் | | கோப்பாய் | 1500. 00 |
| சி. கிருபாகரன் | | அச்சுவேலி தெற்கு | 2000. 00 |
| சு. இலங்கநாயகம் | | கோண்டாவில் | 1000. 00 |
| த. வேலுச்சாமி | இன்பர்சிட்டி | பருத்தித்துறை | 1000. 00 |
| ஞானேஸ்வரி யசோதா | | கொழும்பு | 2500. 00 |
| திருமதி லீ.நே. ஜோசேப் மூலம் திருமதி பாமா ஸ்ரீதரன் | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | | நீர்வேலி 20k. அரிசி | 2000. 00 |
| Dr. R. ராமச்சந்திரன் | | வட்டவல | 5000. 00 |
| குமாரசாமி சோமசுந்தரம் | தெகிவல | கொழும்பு | 5000. 00 |
| த. துரைராசாமூலம் கு. தயாளன் குடும்பம் | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| S. சிவஞானராசா | மக்கள் வங்கி செங்கலடி | மட்டக்களப்பு | 1000. 00 |
| ஏ. செல்வேஸ்வரன் | மக்கள்வங்கி | திருகோணமலை | 1000. 00 |
| செ. பிரதீபன் | | உடுப்பிட்டி | 1000. 00 |
| Dr T. உமாபதிசிவம் | | கொட்டகல | 10000. 00 |
| புனிதவதி சிவசுப்பிரமணியம் | கனடா (இந். சமயப் பேரவை) | | 10000. 00 |
| தர்ஷினி மகேந்திரம் C.A. நிறுவனம் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| கபிலன் ஆரணி | | நல்லூர் | 1மூடை அரிசி |
| திரு நந்தகுமார் | இ. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | மானிப்பாய் | 2000. 00 |
| ஸ்ரீரஞ்சன் | | மானிப்பாய் | 1000. 00 |
| R. பேரின்பம் | | புத்தளம் | 2000. 00 |
| திரு தர்மபாலன் குடும்பம் | | மலேசியா | 2000. 00 |
| மு. தர்மலிங்கம் | | உடுப்பிட்டி | 1000. 00 |
| திருமதி ச. நந்தகுமார் | | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| Dr க. சிவஞானசூரியர் | | கொழும்பு | 1500. 00 |
| பொ. சோமாஸ்கந்தன் | | புலோலி மேற்கு | 1000. 00 |
| க. செந்தூரன் | இடைக்காடு | அச்சுவேலி | 2300. 00 |
| ஜெயந்திரன் இராசலட்சுமி | | இடைக்காடு | 3000. 00 |
| க.ம. செல்வரெட்ணம் | | நவாலி கிழக்கு | 1500. 00 |
| க. நடேசு (தெணியான்) | கரணவாய் வடக்கு | வல்வெட்டித்துறை | 2000. 00 |

(தொடரும்....

உ

# நம்பிக்கையில் நிம்மதி

திரு கு. குணாளன் அவர்கள்

எதன்மீது எமக்கு சந்தேகம் வந்தாலும் நிம்மதி கெடுகிறது. இது மனைவி ஆயினும் சரி, மகேஸ்வரன் ஆயினும் சரி. எது பிடிக்கவில்லையோ அதில் இருந்து ஒதுங்கி நிற்பது நன்று. ஆனால் தினமும் சந்தேகப்பட்டு உடலையும், மனதையும் கெடுத்துக் கொள்ளக்கூடாது.

நாம் ஓர் உணவைச் சாப்பிட்டு முடிந்தபின் எதைச் சாப்பிட்டோம் என்று நினைத்தால் அடி வயிற்றைக் கலக்கும். சாப்பிடுவதற்குமுன் நன்றாகப் பார் எப்பிரச்சனையும் எழாது. திருமணம் முடிந்து எல்லா நிகழ்வும் முடிந்த பின் "இதையா கட்டிக் கொண்டோம்" என்று நினைத்தால் நிம்மதி இருந்த இடம் தெரியாது போய் விடும். எனவே எதைச் செய்யிலும் முன்னாலே யோசிப்பது சாலச் சிறந்ததாகும். யோசித்துச் செய்த முடிவுகளில் நம்பிக்கை வைத்தால் எந்தச் சக்தியாலும் அம்முடிவுகளை அசைக்கமுடியாது.

செல்வச்சந்நிதி முருகனிடம் போவது என முடிவு எடுத்தால் திரும்பி வரும்போது பலன் இருக்கும் என நம்பு. நம்பிக்கையும், சந்தேகமும் மாறிமாறி மனதில் தோன்றினால் அப்போதும் நிம்மதி என்பது இருக்கவே இருக்காது.

நண்பன் தீயவன் என்றால் விலகி விடுவது நல்லது. நல்லவன் என்றால் நம்பிவிடுவது நல்லது. விலக்கியவனை நம்பத் தொடங்காதே. நம்பியவனை விலக்கத் தொடங்காதே.

"இன்றையபொழுது நன்றாக இருக்கும்" நம்பு. அது நன்றாகவே இருக்கும். இப்பரீட்சையில் சித்தி அடைவேன் என நம்பினால், சித்தி கிடைத்தே தீரும். "என் மனைவி உத்தமி" என நம்பு. அவள் தவறாகவே நடந்தாலும் உனக்கு நிம்மதி இருக்கும். ஆனால் அவள் தன் தவறுகளுக்காக இந்த உலகில் வெந்து வெந்து சாவாள். நாம் தொடங்குகிற தொழிலில் நம்பி இறங்கு. தொழில் திறமையே எமக்கு வந்துவிடும். தண்ணீரில் விழுந்துவிட்டால் "நீந்தத் தெரியும்" என்று நம்பு. நீந்தத் தெரிந்து விடும். கடன் வந்து விட்டால் "கட்ட முடியும்" என்று நம்பு கட்டிவிட முடியும். முடியாது முடியாது என்பவனும், அது இல்லை, இது இல்லை என்று வாதிடும் நாத்திகனும் மரக்கட்டைகளுக்குச் சமன்.

"உண்டு" என்பவனுக்கே உள்ளம் வேலை செய்கிறது. எந்த ஒன்றையும் கண்ணால்க் கண்டால்த்தான் நம்புவேன் என்பவன் முகத்தில் மட்டுமே கண்களைப் பெற்றவன். அகத்திலே கண்ணில்லாதவன் ஆகிறான். ஊனக்கண் ஒரு கட்டத்தில் ஒளி இழந்து போகும். ஆனால் ஞானக் கண் எப்போதும் பிரகாசிக்கும். எந்தக் காரியத்திலும் நம்பிக்கையோடு இறங்கினால் எந்த இடர் வந்தாலும் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

நம்பிக்கையோடு முயன்றால் சாணத்தில் தங்கம் கிடைக்கும். சந்தேகத்தோடு பார்த்தால் தங்கமும் சாணம் மாதிரித்தான் தெரியும் என ஆன்றோர்கள் கூறியுள்ளனர். நம்பியவர் கெட்டாரா? நம்பாதவர் வாழ்ந்தாரா? ஒரு தாயின்

தெய்வ நம்பிக்கையால் புத்தி இல்லாது இருந்த ஒருவன் புத்தியுள்ளவனாகிறான். அவன் தெய்வ நம்பிக்கை உள்ளவனாக இருந்தால் இவ்வுலகில் சாதனையாள னாக மாறுவான்.

முடியும் என்றால் முடிகிறது. தயங்கினால் சரிகிறது. எச்செயலையும் முடியும் என நினைத்து அதில் இறங் கினால் அது முடியும். முடியாதுபோல என நினைத்து ஒரு செயலில் இறங் கினால் அது முடியாது என்றே போகிறது.

சீதை பத்தினி என்ற நம்பிக்கை யில்த் தான் இராமபிரான் தைரியமாக இருந்தார். இராமபிரான் தன்னிடம் வருவார் என்ற நம்பிக்கையில்த்தான் சீதாபிராட்டி உயிரோடு இருந்தார். இராமபிரான்மீது நம்பிக்கை வைத்தே விபீடணன் அவரோடு சேர்ந்தான். இராவணன்மீது நம்பிக்கை வைத்தே கும்பகர்ணன் அவனுடன் இருந் தான்.

நம்பினால் கை கொடுப்பது நம் பிக்கை. ஈஸ்வரனை நம்பி நம்பி விழு. கிருஷ்ண பரமாத்மாவை நம்பி அவன் பாதார விந்தங்களில் விழு. விழுந்தபின் எழுவதற்கு உன் கைகள் தாம் பயன்படுகின்றன என்றால் அந்தக் கைகள் அவனுடைய கைகள் என்பது அர்த்தம்.

ஒருவன் அங்கே போனால் அது கிடைக்காது, இங்கே போனால் இது கிடைக்காது எனச் சந்தேகப்பட்டால் அவன் எங்கேயும் போகமாட்டான். எதிலும் முன்னேறமாட்டான். இருந்த இடத்தில் இருந்தே இறப்பான் என்பது திண்ணம். விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து இந்த உலகத்தினை உள்ளங்கையுள் அடக்கி உள்ள கணனி யுகத்தில் வாழும் மாணவ சமுதாயம் எந்தக் காரியத்திலும் நம் பிக்கை வைத்தால் நிம்மதியாக வாழலாம் என்பதில் ஐயமே இல்லை.

மானிட வாழ்வில் நம்பிக்கை வைத்தால் நிம்மதி கிடைக்கும். இதில் எந்தவித ஐயப்பாடும் கிடையாது எமது கருத்தாகும். ஆண்டவன்மீது நம்பிக்கை வைத்தால் ஆயுள் உள்ளவரை வாழ்வில் நிம்மதி கிடைக்கும். அன்னைமீது நம் பிக்கை வைத்தால் எக்கஷ்டம் வந்தாலும் நிம்மதி கிட்டும் என்பதில் ஐயம் இல்லை.

தலை குனிந்து கல்விபயிலும் மாணவர்களாகிய நாம் கல்வியில் நம் பிக்கை வைத்தால் எதிர்காலத்தில் இச் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நிம்மதியாக வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என்பது உறுதி.

**"அன்னையின் அடியிணையை அனுதினமும் ஆராதிப்போம்"**

## ஒன்றுபட்டு உண்டு வாழ்க

உனக்கு உயர்வும், மதிப்பும், அழகும் எப்போது உண்டாகும்? உன் இனத்துடன் நீ ஒற்றுமையாக இருக்கும்போதுதான். உன் இனத்தை விட்டு நீ பிரிந்துவிட்டால் எல்லோராலும் வெறுக்கப்படுவாய். தலையிலே இருக்கும்போது முடியானது அழகாக இருக்கின்றது. வாசனை எண்ணெய் பூசப்படுகின்றது. தன் இனத்தைவிட்டு தனியே விழுந்து விடுமானால் அது இகழப்படுகிறது. அருவருப்பாக கருதப்படுகிறது. இதனை எண்ணிப் பார்த்து நீ எல்லோருடனும் ஒற்றுமையாக இருப்பாயாக.

*அறிவு ஆழமான கடல் போன்று அமைதியாய் இருக்கும்.*

உ

# இந்துசமயத்தில் பெண்கள்

**செல்வி S.K. சிந்துரா (கிழக்குப் பல்கலைக்கழகம்)**

இன்று 'பெண்கள்' என்போர் உலகின் பார்வையில் பன்முகப்பரிமாணங்களில் வளர்ச்சி கண்டுள்ளனர். சமயத்திலும் பெண்களின் பங்களிப்பு அன்று தொட்டு இன்றுவரை பெரும்பங்கு வகிக்கின்றது. அந்தவகையில் நாம் அன்று தொட்டு இன்றுவரையில் இந்துசமய இலக்கியங்கள் காட்டும் பெண்மை, இன்றைய நிலையில் இந்து சமயத்தில் பெண்களின் பங்களிப்பு என்பன பற்றி சற்று விரிவாக இக்கட்டுரையில் நோக்குவோமாயின்;

பெண்மைக்கு, தாய்மைக்கு தனிச் சிறப்பு வழங்கிப் பெருமைப்படுத்தும் சமயம் இந்துசமயம். ஒருவன் பேசும்மொழி தாய் மொழி; வாழும் நாடும் தாய்நாடு; இயற்கையும் அன்னை; நதிகளும் கங்கா, யமுனா, சரஸ்வதி; கடல் அன்னை; பூமித் தாய், பால் வழங்கும் பசுவும் கோமாதா; என உலகிலே மாந்தர்கள் உயர்வான வாழ்வு வாழ வழிசமைக்கும் அனைத்தையும் 'அன்னை' என்ற மகத்தான பெயரில் இந்துமதம் அழைக்கின்றது. இயற்கையின் எல்லையற்ற ஆற்றல்கள் அனைத்தும் சக்திக் கோட்பாடாக சைவத்தில் வளம் பெற்றன. சைவம் சிவனை முதன்மைப் படுத்த சாக்தம் சக்தியை முதன்மைப்படுத்தியது.

சிவம் தனது எல்லைக்குள் அடங்கிய சக்தியின் மூலமே உலகினைத் தொழிற்படுத்துகின்றது. சிவத்தின் அருளுருவம் சக்தி வடிவாகின்றது. அச் சக்திவடிவே பெண்மையின் ஆற்றலாகவும் வழிபடப்படும் மரபு இந்து வழிபாட்டு மரபில் உருவானது. இது இந்துப் பாரம்பரியம் காட்டும் பெண்மைக்குரிய இலக்கண மரபாக காணப்படுகின்றது. இதனால் பெண்களின் அதி உத்தம குணநலன்கள் வாய்ந்த பெண்மை- தாய்மை என்பன தெய்வாம்சம் பொருந்தியனவாக இந்து சமய மரபில் ஏற்றம் பெற்றன.

**"பெண்ணுரு ஒருதிறன் ஆகிநின்று அவ்வுருத்**
**தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"**

எனப் புறநானூறு கூறுகின்றது.

புராதன இலக்கியமான வேதங்கள் கூறும் பெண்மை பற்றி நோக்குவோமாயின்; வேதப்பாடல்களில் பெண்மையின் பல்வேறு இயல்புகளும் தாய்மைக்கு இலக்கணமாகத் திகழும் பண்புகளும் வர்ணிக்கப்பட்டுள்ளன. அதிதி என்னும் தேவதை தாயின் முழுமையான வடிவாகப் போற்றப்படுகின்றாள். அதிதி என்றால் எல்லையற்றவள், கட்டுப்படாதவள், சுதந்திரமானவள் என்பது பொருள். பெண் இயல்பிலே சுதந்திரமானவள் என்பதனை இது புலப்படுத்துகின்றது. இத் தேவதையை போற்றுவனவாக 88 பாடல்கள் வேதத்தில் இடம்பெற்றுள்ளன. இத் தாய்த் தேவதை மூப்பும் வாட்டமும் அறியாதவள். அக்கறையுடன் மக்களைப் பேணி நல்வழி நடத்திச் செல்லும் திறமையும், கருணையும், கடமையும், கண்டிப்பும்

வாய்ந்த அன்னை. மித்திரன், இந்திரன், வருணன் என்போரின் தாய்த் தேவதையே வேதம் காட்டும் பெண்மை.

அடுத்து, வேதத்தில் சவிதா என்னும் பெண் தெய்வத்தைக் காணலாம். மண்ணிலே விளையும் விளைச்சலுக்கு சவிதாவின் அருள்வேண்டி போற்றப் படுகின்றது. "உஷை" என்னும் பெண் தெய்வம் இருளை நீக்கும் ஒளித்தேவதை. "ராத்திரி" என்னும் இரவுத் தேவதையும் பல நட்சத்திரக் கூட்டங்களுடன் தோன்றி இருளகற்றுபவளாகவும் உஷையின் புதல்வியாகவும் பெருமைப் படுத்துகின்றாள். இருவரும் வானும் மண்ணும்போல மகிழ்ந்து உலகினை வாழ வைக்கின்றனர். இருவருக்கும் ஒரே நோக்கம். உலகின் இருளகற்றி மனுக்குலத்திற்கு ஒளி வழங்கும் அறம்பேணுவோர் இவர்கள்.

அடுத்து பிருதுவி என்னும் தேவதை. இவள் மண் எனப்படும் அன்னை. இந்த அன்னைக்கு நாயகன் வானம். வானின் மைந்தன் மழை. இதனை "பூமி நமது தாய். நாம் பூமியின் புத்திரர்கள். மேகம் நமது தந்தை. அவை நம்மைப் புனிதமாக்கி தெம்பூட்டுகின்றன" என்ற அதர்வப் பாடல் இயற்கைச் சக்திகளைத் தாய் தந்தையராக்கி பெற்றோர்களிடையே சமத்துவ உணர்வைச் சிறப்படைய வைத்தன.

அடுத்ததாக; உபநிடதங்கள் கூறும் பெண்மைபற்றி பார்ப்போமாயின், உபநிடதங்களில் பெண்கள் மேலான நிலையில் அறம் வளர்க்கும் அறிவு ஜீவிகளாக விளங்கினர் என்பதனைக் காண முடியும். அவர்கள் தவவாழ்வு என்னும் உயரிய அறத்தினைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். கார்க்கி, வாசக்னவி என்னும் இரு பெண்கள் ஜனகருடைய அவையில் யக்ஞவல்கியருடன் உரையாடும் பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இவர்கள் பண்டைய வேதகாலப் பெண்மணிகள் எனச் சிறப்பிக்கப்படுபவர்கள். இவ்விரு பெண்மணிகளும் யக்ஞவல்கியரிடம் தர்க்கம் செய்து வாதிட்டுப் 'பிரம்மஞானம்' பெற்ற அறிவு மேதைகளாகப் போற்றப்படுகின்றனர்.

இந்தப் பிரம்மவாதியான யக்ஞவல்கியருக்கு மைத்திரேயி, காத்தியாயினி என்னும் இரு மனைவியர் உள். அவர் இவ்விருவருக்கும் தமது சொத்துக்களைப் பகிர்ந்தளிக்க முன்வந்தபோது மைத்திரேயியானவள் எனக்கு இவற்றினைவிட அழியாத செல்வமான பிரம்ம ஞானமே தங்களிடமிருந்து வேண்டும் எனக்கேட்டு அதனைப் பெற்றதாகவும் வரலாறு உண்டு. இதிலிருந்து அறிவெனும் அறத்தைப்பேணி விடுதலையடைய விரும்பும் பெண்மையின் மாண்பு விளக்கப்படுகின்றது.

அடுத்ததாக இதிகாசபுராண இலக்கியங்களில் பெண்மையானது தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டது. காரணம் இந்துமதம் பெண்கட்கு 'கற்பு' என்னும் பேரறத்தைப்பேணும் கடமையை வழங்கியுள்ளது. கற்பு என்னும் சிறப்பொழுக்கத்தைப் பேணுவதன்மூலம் பெண்களினால் எதையும் வாழ்வில் சாதிக்க முடியும் என இதிகாச புராணங்கள் வலியுறுத்துகின்றன.

இதிகாசபுராண கால மரபுகள் பொதுவாக ஒழுக்க விழுமியங்களைப் பேணிப்பாதுகாத்து அடுத்த சந்ததிக்கும் அதனை வழங்குபவர்கள் பெண்களே எனும் ஒரு கருத்தினை மறைமுகமாக

*உண்மையான அறிஞனிடம் பிறரைத் தாழ்மையாக எண்ணும் எண்ணம் இருக்காது.*

உணர்த்தியுள்ளன. அதனை வலியுறுத்தும் வகையில் சீதை, சாவித்திரி, தமயந்தி, அருந்ததி, அனுசூயா போன்ற உயர் கற்பரசிகளின் வரலாறுகள் அங்கு இடம்பெற்றுள்ளன. ஆனால் இடைக் காலத்தில் பெண்கள் நிலை மிகவும் தாழ்ந்திருப்பதனையும் அறியமுடியும். பின்னர் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு 'சமயம்' என்ற போர்வையில் அறியாமை நிறைந்த மக்கட்கூட்டம் காரணமாயிருந்ததே தவிர சமயம் இவற்றிற் பங்கு பெறவில்லை என்பது உணரப் படவேண்டிய உண்மை.

அடுத்ததாக, தமிழகத்தில் புராதன பெண்களின் வாழ்வு நிலையினை எடுத்துக்கொண்டால்,

**"நல்லறம் செய்தோர் நல்லுலகடைதலும்**
**அல்லறம் செய்வோர் அருநரகடைதலும்"**

சுட்டிக்காட்டப்பட்டு அற ஒழுக்கத்தினை வாழ்விலே பேணுவது அத்தியாவசியமானதாகச் சொல்லப்பட்டது. அறிவுப்பசி போக்குதலைவிட வயிற்றுப்பசி போக்குதலே அக்காலத்திலும் முதன்மை அறமாகப் பேணப்பட்டது. ஆதிரையாள் என்னும் பெண்ணின் அறவாழ்வினைக் கேள்விப்பட்டு மணிமேகலை தனது அமுதசுரபி என்ற சற்பாத்திரத்தில் அப் பெண்மணியைக் கொண்டே முதற்பிச்சை ஏற்றாள். 'பாரகமெங்கும் பசிப்பிணியறுக' என வாழ்த்தி அமுதிட்ட வரலாறு பெண்களின் அறவாழ்விற்கொரு ஆதாரமாகும்.

சங்ககாலப்பெண்களின் கடமை உணர்வினைப் பேசும் கலித்தொகை அன்பு, அறம், வீரம் என்னும் பண்புகளில் அவர்கள் தன்னிகரற்று விளங்கினார் எனவும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனவும் சிறப்பிக்கின்றது. இதன் சிறப்பானது மலையில் பிறந்த சந்தனம் மலைக்கு அல்ல பூசுபவர்க்கே பயன் தருவது; கடலிற் பிறந்த முத்து அணிபவர்க்கே அழகு கொடுக்கும் - நீருக்கல்ல; யாழிற் பிறந்த இசை கேட்பவர்க்கே இன்பம் அளிக்கும்- யாழுக்கல்ல; அவ்வாறே பெண்களும் பிறந்தவீட்டினைவிட புகுந்த வீட்டுக்குத்தான் பயன்படும் திறமுடையவர்கள். இது இயற்கை நியதி எனக் குறிப்பிடுகிறது.

இந்துக்களின் அறவாழ்வு இல்லறம், துறவறம் என இருவகையில் பாகுபடுத்தப்பட்டுள்ளது. அறமும் வீரமும் காதலும் சிறந்து விளங்கிய சங்க காலத்தில் எழுந்த நூல்கள் பெண்களது இல்லறம், கல்விப்புலமை, வீரவாழ்வு பற்றியே பெரிதும் விதந்துரைக்கின்றன.

**"ஈன்று புறம் தருதல் என்தலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்**
**களிநெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"**

இப்பாடலில் பொன்முடிப்புலவர், எல்லோரும் தத்தம் கடமைகளைச் செய்வதே அறம் என வலியுறுத்தினார்.

உறுதியுடைய உத்தமருக்கு உலகம் வளைந்து கொடுக்கிறது.

வள்ளுவர் காட்டிய பெண்மை அனைவராலும் போற்றப்படுவது அன்பும் அறனும் உடையதே இல்வாழ்வு. அதனை இருவரும் பேணவேண்டும் என்பது திருக்குறள் கூறும் அற ஒழுக்கமாகும்.

**"தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**

என்பதில் அவர் காட்டும் பெண்மையின் அறவாழ்வு சமுதாய ஒழுக்கத்தின் ஆணிவேராகக் காணப்படுகின்றது. கற்பெனும் திண்மையே பெண்களின் பெருவீரம் என்ற வள்ளுவர் வாக்கினை இளங்கோ அடிகள்:

**'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்'**

என ஏற்றுக்கொண்டமையினை சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

(தொடரும்...

## சித்திரைமாத ஆலய விசேட உற்சவ தினங்கள்

**08.04.2009 பங்குனி 26 புதன்**
வைரவப் பெருமான் கும்பாபிஷேகதினம்
பங்குனி உத்தரம்

**14.04.2009 சித்திரை 01 செவ்வாய்**
இந்து புதுவருடப்பிறப்பு
மாலை விசேட உற்சவம்

**26.04.2009 சித்திரை 13 ஞாயிறு**
கார்த்திகை விசேட உற்சவம்

---

## சித்திரைமாத குருபூசை தினங்கள்

**02.04.2009 பங்குனி 20 வியாழன்**
முருகேசு சுவாமிகள் குருபூசை
நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் குருபூசை

**04.04.2009 பங்குனி 22 சனி**
முனையடுவார் குருபூசை

**05.04.2009 பங்குனி 23 ஞாயிறு**
யோகர் சுவாமிகள் குருபூசை

**11.04.2009 பங்குனி 29 சனி**
காரைக்கால் அம்மையார் குருபூசை

**13.04.2009 பங்குனி 31 திங்கள்**
தொகையடியார் குருபூசை

**20.04.2009 சித்திரை 07 திங்கள்**
திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

**26.04.2009 சித்திரை 13 ஞாயிறு**
சிறுத்தொண்டர் குருபூசை

**27.04.2009 சித்திரை 14 திங்கள்**
மங்கையற்கரசியார் குருபூசை.

*நம்பிக்கைத் துரோகம் செய்பவன் மாபெரும் குற்றவாளி.*

# திருவிளையாடற்புராண வசனம்

**-ஆறுமுகநாவலர்-**

படலம்~ 4

## தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்

மலயத்துவச மன்னன் என்பவன் வடமொழி, தமிழ்மொழி இரண்டும் கற்றுத் தேறி, மனுநூல் வழி தவறாது நல்லாட்சி செய்து வந்தான். அவன் சூரசேனன் என்னும் அரசன் மகளான காஞ்சன மாலையை விவாகஞ் செய்தான்.

அவன் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் வருத்தமுற்று, விரதங்கள் பல அனுட்டித்து யாகங்கள் பல செய்தான். பின்னர் அசுவமேதயாகஞ் செய்யத்தொடங்கி தொண்ணூற்றொன்பது யாகஞ் செய்தான். அவன் மனதில் நினைத்தது நிறைவேற ஒரு யாகம் பாக்கி யாக இருந்தது. பாண்டியன் நூறு யாகம் செய்து முடித்தால் தன்பதவி நொடிப் பொழுதில் மாறிவிடும் என எண்ணிய தேவேந்திரன் பாண்டியன் இடத்துக்கு விரைந்தான். பாண்டியனின் அசுவமேத யாகத்தை முடிக்காமல் தடுத்து, "நீ விரும்பிய புத்திர பாக்கியம் வேண்டி "புத்திர காமேட்டி" யாகம் செய்வாயாயின் புத்திரனைப் பெறுவாய்" என்று கூறி தன் உலகத்தை அடைந்தான்.

மனம் மகிழ்ந்த மலயத்துவச பாண்டியன் தன் மனைவியுடன் யாக சாலை புகுந்து புத்திர காமேட்டி யாகத்தை ஆரம்பித்தான். நன் நிமித்தங்கள் பல தோன்றின. உலகமாதாவாகிய உமாதேவி மூன்று வயது கொண்ட மூன்று தனங் களையுடைய (முலை) ஒரு பெண் பிள்ளை வடிவெடுத்து யாக குண்டத் தினின்றும் வெளியே வந்தார். அப்பெண் குழந்தையை காஞ்சனமாலை தன் மடி மீதிருத்தி மார்போடு அணைத்து பேரானந் தம் அடைந்தாள். தான் செய்த யாகத்தின் பயனாகக் கிடைத்த பெண்பிள்ளை, பிறர் நகைக்கும்வண்ணம் மூன்று தனங்களை உடையதாய் வந்தது குறித்து மன்னன் பெரிதும் வருத்தமடைந்து மனங்கலங்கி நின்றான்.

"மன்னவா! மனங் கலங்காதே! உன் மகளுக்கு தடாதகை எனப் பெயர் சூட்டி, புத்திரனைப் போலவே வளர்த்து முடிசூட்டி வை. திருமண காலத்தில் இப் பெண்ணுக்குரிய கணவன் வரும்போது ஒரு தனம் (முலை) மறையும். கவலை கொள்ளாதே" என சிவபெருமானுடைய திருவருளினாலே ஒரு அசரீரி வாக்குத் தோன்றியது. மன்னன் பெருமகிழ்ச்சி அடைந்து யாகத்தை முடித்து, மனைவி யுடனும் குழந்தையுடனும் மாளிகை சென்றடைந்தான்.

சிவபெருமான் திருவாக்காக அரு ளியபடியே சடங்குகள் பலவும் செய்து, தடாதகை எனப்பெயரிட்டு வளர்த்து வந் தான். தடாதகை எல்லாக் கலைகளையும் கற்றுத்தேறினாள். உரியவேளை வர அவளுக்கு முடிசூட்டி தன் அரசையுங் கொடுத்தான். சில காலம் செல்ல மலயத் துவச பாண்டியன் சுவர்க்கம் அடைந்தான். கன்னியாகிய தடாதகைப் பிராட்டி எந் நேரமும் சோமசுந்தரக் கடவுளை மனதில்

நிறுத்தி நல்லாட்சி புரிந்து வந்தமையால் பாண்டிநாடு "கன்னிநாடு" எனப்பெயர் பெற்றது.

இவ்வாறு மீனாட்சியம்மையார் திருவவதாரஞ் செய்த சரிதத்தை அகத்திய மாமுனிவர் சொல்லக்கேட்ட முனிவர்கள் அகத்தியரைக் கீழ்வருமாறு வினாவினர். "தக்கனும், இமயமலையரையனும் உலக மாதாவாகிய உமாதேவியை மகளாகப் பெற்றமையை யாம் அறிவோம். மனிதனாகிய பாண்டியனுக்கு மகளாய் வந்த காரணம் யாது" என்று கேட்டனர்.

"வித்தியாதரன் என்று ஒருவன் இருந்தான். அவனது மகளின் பெயர் "வித்தியாவதி". அவள் எப்பொழுதும் உமாதேவிமீது அன்புடையவளாக இருந்தாள். ஒருநாள் தன் தந்தையிடம், "உமாதேவியை வழிபட சிறந்த ஸ்தலம் எது" என்று வினாவினாள். "மதுரை" என்று பெயர் கொண்ட ஊரிலே "பூலோக சிவலோகம்" எனச் சிறப்புப் பெயர் பெற்ற சிவஸ்தலம் ஒன்றுண்டு. அறுபத்துநான்கு சக்திபீடங்களில் தலையாயது மதுரையே. அங்குள்ள உமாதேவியை நீ பூசித்து வந்தால் உனக்கு வேண்டுவன அனைத்தும் கிடைக்கும்" என்றான் தந்தையான வித்தியாதரன்.

வித்தியாவதி பிதாவை வணங்கி விடைபெற்று மதுரையை அடைந்தாள். பொற்றாமரை வாவியிலே நீராடி, சொக்கலிங்க மூர்த்திக்கு வலப்பக்கத்தே உள்ள மீனாட்சியம்மையைத் தொழுது, அங்கேயே தங்கியிருந்து விரதங்கள் நோற்று வந்தாள். அவளது தூய அன்பினால் கவரப்பட்ட உமாதேவி மூன்று வயது உடைய ஒரு குழந்தையாகி அவள் முன்னே தோன்றினாள். "நீ யாது விருப்பினை" எனக்கேட்ட உமையம்மையிடம், "இதே பெண்ணுருவாய் நீ என்னிடம் வர வேண்டும்" என்று பணிந்தாள். மீனாட்சி அம்மை அதற்கிசைந்து, "இந்நகரத்திலே மலயத்துவச பாண்டியன் என ஒருவன் பிறப்பான். நீ அவனுக்கு மனைவியாவாய். அப்போது நான் உனக்குப் புத்திரியாய் வருவேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார். மீனாட்சியம்மை பாண்டியனுக்குப் புத்திரியாய் திருவவதாரஞ் செய்த காரணம் இதுவே"

இவ்வாறு அகத்திய மாமுனிவர் சொல்லக்கேட்டு முனிவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

**ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர்**

சைவத்தின் முதற்குரவர் சமயத்தின் காவலர்
தாயா கவந்துமைப் பாலூட்டி நின்றவர்
அவதா ரபுருஷ ராகவந் துதித்தவர்
ஆளுடைப் பிள்ளை ஞான சம்பந்தராம்
சிவனா ரின்பெருமை சிறப்பாகச் செய்தவர்
சித்தாந் தமுடிபுகள் முத்தாகத் தந்தவர்
தவமா கச்சைவ அடியவர் பெற்ற
சம்பந் தப்பிள்ளை என்னும் குரவரே

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்*

முயற்சி உள்ள இடத்தில் இறைவன் அருள் இருக்கும்.

உ

# சைவப்புலவர் சி. வல்லிபுரம் அவர்களின் பக்திமொழிப் புலமை

**யாழ் வதிரிவாசன்**

வடமராட்சியின் வளங்கொழிக்கும் கிராமமான வதிரியில் வடக்கு வாசல் சிறப்போடு மூர்த்தி, தல தேர் தீர்த்த, வாகன விருட்சச் சிறப்புகளோடு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவர் வதிரி பூவற்கரை விநாயகர். அவ்வாலய மூர்த்திகளின் சிறப்பினை வதிரியூரைச் சேர்ந்த அமரர் சைவப்புலவர் திரு சின்னத் தம்பி வல்லிபுரம் அவர்கள் நான்கு வரிகள் கொண்ட பாடல்களாகப் பாடியுள் ளார். அன்னார் பூவற்கரை விநாயகர்மீது அளவிறந்த பக்தியும் ஈடுபாடும் கொண்ட வர். புலவர் அவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலிய மொழி களில் தேர்ச்சி பெற்றவர். அவரிடம் சிங்களமும், ஆங்கிலமும் பயின்றோர் ஆயிரக்கணக்கானோர் இன்று இலங்கை யின் பல பாகங்களிலும் உயர்ந்த அரச சேவைகளில் பணியாற்றிக்கொண்டிருக் கிறார்கள். அந்தணப் பெருமக்கள்கூட அவரிடம் வந்து சமஸ்கிருத சந்தேகங் களை தெரிந்துகொண்டார்கள். புலவர் அவர்கள் சைவசித்தாந்தம் கற்பிப்பதில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்.

அவர் பூவற்கரை விநாயகருக்காக திருவூஞ்சற்பாடலை எழுதிப் பாடியுள்ளார். மூலமூர்த்திக்கும் சக பரிவார மூர்த்திகளுக் கும் அவர் பாடியுள்ள சில பாடல்களை நாம் பார்க்கும்போது அவரின் பக்திமொழிப் புலமை புலப்படும்.

**மூலமூர்த்தியாகிய விநாயகரை நோக்கி:-**

ஓங்கார ரூபம் உடையான் – உள்ளத்தொளியாய்
நீங்காது உறையும் நிகரில்லான் – ரீங்காரம்
வண்டிசைக்கும் சோலை வதிரிபூவற்கரையெம்
பண்டிதனை நெஞ்சே பதி

சித்தியொடு முத்திதரும் செல்வக் கணபதியே – அத்திமுகா
பூவற்கரை உறையும் வித்தகனே
எப்போதும் முட்டின்றி எல்லாம் இங்கே நிகழ
ஒப்பிலருட் பார்வை உதவு.

ஆறுமுகன் அண்ணா அருளம்மை முன்புதல்வா
கூறுமடியார்கள் வினை போக்கி – பேறுபல
வாரி வழங்க வதிரி பூவற்கரையை
சேரிடமாய்க் கொண்டாய் தெரிந்து

**தேங்காய்ப் பலிபீடத்தை நோக்கி:-**

தேங்காய் அடிப்பார் செழுமலரிட்டே தொழுவார்
ஆங்கார ஆணவத்தை அல்லிடத்தே நீங்கவிட்டு
சுற்றி வலம்வருவார் சுந்தரப் பூவற்கரையை
பற்றிவாழ் பக்தரெல்லாம் பார்த்து

**கிழக்கு வாசல் முருகனை நோக்கி:-**

காலையிலும் மாலையிலும் கைகூப்பியே கந்தன்
வேலை வணங்குதலே வேலையென - மேலைநாள்
ஓதும் புலவர் உரைப்படி பூவற்கரையில்
சூதுதவிர் வேலைத் துதி

**தெற்கு வீதி விநாயகரை நோக்கி:-**

கல்லாலின் கீழமர்ந்து கற்றதவ மூத்தோர்க்குச்
சொல்லால் உணர்த்தரிய தொன்மறையின் - பல்பொருளும்
சின்முத்திரையால் தெளிவு பெறச்செய்த
தென்முகனை வாழ்த்து தினம்

**தென்மேற்கு மூலை முருகனை நோக்கி:-**

அள்ளி அருள்வழங்கும் ஆனைமுகன் பாங்கரிலே
தெள்ளுதமிழ் முருகா சேர்ந்து நின்று - விள்ளுபுகழ்
ஓங்கும் பூவற்கரையை உன்னுபவரை எல்லாம்
தாங்குவீர் வேண்டுவன தந்து

**வசந்தமண்டப அம்மனை நோக்கி:-**

மாதா சிவசக்தி வல்வினைகள் நீக்கியெமக்கு
ஆதாரமாகி அருள் புரிவாய் - வேதாவும்
வந்து வணங்கும் வதிரி பூவற்கரையெம்
சுந்தரியே நீயெம் துணை.

**வசந்தமண்டப நாகதம்பிரானை நோக்கி:-**

எம்பிரான் கோயில் நண்ணி இன்னிசைப் பாடல்பாடி
நம்புவார் தம்மை நாகம் நலிவுறத்தீண்டா தோஷம்
அம்புவி தன்னில் நீங்கும் அணிபூவற்கரையெம் - நாக
தம்பிரான் பாதம் போற்றும் சகலரும் நீடுவாழ்வார்

**வசந்தமண்டப வைரவரை நோக்கி:-**

பூவற்கரை காவல் பூண்ட வைரவரே
யாவற்றினையும் எளிதாக மேவுற்று
நல்வாழ்வு வாழ நமக்கருளை ஈந்துவிடை
சொல்லியருள் நீயே துணை

*தளராத முயற்சிக்குத் தன்னம்பிக்கை அவசியம்.*

மேற்படி புலவர் அவர்களின் பக்திரசம் நிறைந்த பாடல்கள் இதுவரை புத்தகமாக வெளிவராதது சைவ உலகின் துரதிருஷ்டமே. எனவே ஆலயங்கள் கட்டட அலங்காரங்களில் மேலெழும் அதேவேளை மறைந்து கிடக்கும் பக்திமான்களின் பக்தி இலக்கியங்களையும் வெளிக்கொணரவேண்டும். இதுவே சைவ உலகுக்கு நாம் செய்யும் மகத்தான பணியாகும். இம்மகத்தான பணியை ஆற்றங்கரை வேலேந்திய பெருமானின் அருளாசியோடு ஞானச்சுடர் செய்து வருகின்றமை சைவ உலகுக்குக் கிடைத்த ஒரு இமாலய வரப்பிரசாதமாகும்.



**தவத்திரு வே. முருகேசு சுவாமி அவர்களின் 12ஆம் ஆண்டு குருபூசை 03.04.2009 வெள்ளிக் கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும். கவிமணி க. ஆனந்தராசாவின் (அன்னைதாசன்) அவர்களின் இசைச் சொற்பொழிவுடன் நிறைவு பெறும். அதனைத் தொடர்ந்து மவர் குருபூசையும் இடம்பெறும்.**

## நீடு வாழ்க

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆற்றப்படும் சமய வளர்ச்சிக்கும் பல பணிகள் ஆற்றிவரும் கவிமணி க. ஆனந்தராசா [அன்னைதாசன்] அவர்கள். 60ஆவது அகவையில் அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் கடந்த 27வருடங்கள் ஆசிரியராகவும் 10 வருடங்கள் யா/ உரும்பராய் சந்திரோதயா வித்தியாசாலையின் அதிபராகவும் கடமையாற்றினார்.

அத்துடன் அன்னைதாசன் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் தவத்திரு மயில்வாகனம் சுவாமிகள் தொட்டு தவத்திரு முருகேசு சுவாமிகளின் நேரடி ஆசிகளைப் பெற்றவர். அத்துடன் ஆச்சிரமத்தில் இடம்பெறும் குருபூசை தினங்கள், விழாக்கள், வாராந்த நிகழ்வுகள் ஆகியவற்றில் பங்குகொண்டு விழாவை சிறப்பிப்பவர்.

கவிமணி அன்னைதாசன் அவர்கள் தன்னலம் பாராது தொண்டு செய்வதில் சிறந்தவர்கள் இவர்கள் ஆற்றிய பணிகளைக் கொண்டு இவருக்கு பல்வேறு பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சேவையாளன். இவரது 60அவது அகவையில் அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறுவதை வாழ்த்துவதோடு மேலும் இவரின் சைவசமயப்பணிகள் சிறக்க சந்நிதி வேற்பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

தகுதியற்ற புகழ்ந்துரையைப் பெரியோர் ஏற்பதில்லை.

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

## கட்டுரைத் தொடர்- 25

**சிவத்தமிழ்வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்**

வியாமள ஆகமத்தின் சாரமாகிய ஆறாம் தந்திரத்தில் சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு, ஞாதுரு ஞான நேயம் ஆகியவற்றைத் தொடர்ந்து துறவு என்ற பகுதி இடம்பெறுகிறது. அன்பால் இறைவனைப்பற்றி இயல்பான முறையில் பாசங்களினின்றும் நீங்குதல் துறவு எனப்படும். அறிவினால் ஆராய்ச்சி செய்து பற்றில் நீங்குதல் அவாவறுத்தல் எனப்படும். உலக இன்பங்களை இயல்பாகத் துறந்து சோதிப்பிரானை மறவாது வழிபடுவோருக்கு அவர் சிவலோகம் அருளுவார். துறவைத் தொடர்ந்து தவம், தவதூடனம் ஆகிய பகுதிகள் இடம் பெறுகின்றன.

தன்னுள்ளே மறைந்துள்ள பொருளைக் காணச்செய்யும் முயற்சியே தவமெனப்படும். சிவனிடத்தே மனத்தை வைத்து நிலைபெற்ற உத்தமர்களின் உள்ளமானது உலகிலுள்ள எத்தகைய துன்பத்தையும் கண்டு அஞ்சுவதில்லை. முடியாட்சி நிலவிய காலத்தில் மன்னனின் ஆணை தெய்வத்தின் ஆணை என்று மதிக்கப்பட்ட காலத்தில் பல்லவ அரசனின் ஆணையைத் துச்சமென மதித்த நாவுக்கரசர்

**நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்**
**நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்**
**இன்பமே யெந்நாளும் துன்பமில்லை.**

எனச் சான்றாண்மை வீரத்துடன் முழங்குகின்றார். அகத்திலே அஞ்சாமை குடிகொண்ட இவர்களுக்குப் பிறப்பு இறப்பு இல்லாமையால் யமனுக்குப் பயப்படுவதில்லை. அவர்களுக்கு வேறு எவ்வகையான துன்பமும் இல்லை. உலகியல்ப் பற்றை நீக்கியவர்களுக்கு அடைதற்குரிய உலகியல்ப் பயன்கள் எதுவுமில்லை. இரவு பகல் என்ற வேறுபாடுமில்லை. புலன்களைச் சிவனின் திருவடித்தாமரையில் ஒடுக்குபவர்கள் பற்றற்றான் பற்றினைப் பற்றியவர்கள் ஆவார்கள்.

**ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்**
**நடுங்குவதில்லை நமனுமங்கில்லை**
**இடும்பையும் இல்லை இராப்பகல்இல்லை**
**படும்பயன் இல்லை பற்று விட்டோர்க்கே**

உண்மையான இறை நாட்டமின்றி வெறும் அறிவு விருத்திக்காக நூல்களைக் கற்றுப் பிதற்றித் திரிவதனால் பயன் எதுவும் இல்லை. பொய்ப்பெருமைகளை விட்டுவிட்டு ஒரு கணப்போதாவது புறத்தே போகும் உள்ளத்தை தடுத்து அகத்தே

**கோபம் அறிவை விழுங்கிவிடும்.**

நோக்குங்கள். அவனருளாலே அவனை நோக்கும்பொழுது உள்முகப் பார்வையானது பசுமையான மரத்தில் அடித்த ஆணிபோன்று திருவருளில் பதிந்துவிடும் இதனால் ஆன்மாவைப் பீடித்திருக்கும் பிறவிப்பிணியானது நீங்கிப் போய்விடும்.

**சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டு நீர்**
**மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்**
**பார்த்த வப் பார்வை பசுமரத்தாணிபோல்**
**ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே**

தவதூடனம் என்பது தவப்புறக் கணிப்பு அல்லது தவக்கடப்பு என்று சொல்லலாம். தவத்தாற் பெறும்பயன் கிடைத்த பின்னர் தவ அனுசரிப்புத் தேவைப்படாது என்பதே இதன்பொருள் ஆகும். புறநோக்கைவிட்டு அக நோக்குக் கொண்டவர்க்குப் புறத்தே செய்யும் கிரியை ஒன்றும் வேண்டாம். உயிர்க்கு உயிராக நின்று இயக்குகின்ற பரம் பொருளை அகத்திலே கண்ட பின்பு கற்று அறிந்துகொள்ள வேண்டியது எதுவும் இல்லை. பொருள் இரண்டாக இருக்கும்பொழுது காதலுக்கு இடம் உண்டு. பொருள் ஒன்றானபோது காதலுக்கு இடமில்லை. உண்மைப் பொருளான சிவத்தை உடலில் கண்டால் அன்பு செலுத்தவேண்டிய அவசியமும் இல்லை. கருவி கரணங்கள் எல்லாம் இறைவனை நோக்கித் திரும்பினால் ஆனந்தக் கூத்தனை அகத்திலே தரிசிக்கலாம். உடம்பின் அவயவங்கள் அனைத்தையும் இறைவனைநோக்கித் திருப்புவதால் ஏற்படும் நன்மையினைத் திருஅங்க மாலையில் திருநாவுக்கரசர் தெளிவாக விளக்குகின்றார். "தலையே நீ வணங்காய்", "கண்காள் காண்மின்களோ", "நெஞ்சே நீ நினையாய்" என உடல் உறுப்புக்கள் அனைத்தையும் இறைவனை நோக்கித் திரும்பும்படி கட்டளையிடுகின்றார். எல்லாக் கருவி கரணங்களும் இறைவனை நோக்கித் திரும்பினால் ஏற்படும் விளைவினையும் தெளிவாக விளக்குகின்றார்.

**தேடிக் கண்டு கொண்டேன்**
**திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டு கொண்டேன்**

என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும்.

சித்தம் சிவமாகிவிட்டால் செய்கின்ற செயல்கள் யாவும் தவமாகிவிடும் என்பதைச் "சித்தத்தைச் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும் அத்தன்" என மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. சிவாயநம என்ற சிவ மூல மந்திரத்தை இடையறாது உச்சரிப்பவர்களுக்குத் துன்பமும் இல்லை, துயரமும் இல்லை, அபாயமும் இல்லை, அச்சமும் இல்லை என்பதைச்,

**"சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு**
**அபாயம் ஒருநாளும் இல்லை"**

பலர் முன் பயனில்லாததைக் கூறுபவன் அனைவராலும் வெறுக்கப்படுவான்.

எனத் தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் குறிப்பிடுகின்றார். சிவசிவ என்னும் தனிப்பெரு மந்திரத்தை ஓதிக் கொண்டு வருவார் நெஞ்சம் சிவனுறையும் திருக்கோயிலாகவே மாறிவிடும். அவ்வாறு செய்பவர்கள் வேறு எத்தவமும் செய்ய வேண்டியதில்லை. அத்தகையோரின் சித்தமாகிய நெஞ்சில் சிவனடிப்பேரின்பமே நிலைபெறும். “சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்” என்பதுபோல இத்தகையவர்கள் இறைவனால் வலிந்து ஆட்கொள்ளப்படு வார்கள். “அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்” என்ற மணிவாசகப் பெருமானின் வாக்கிற்கு அமைய சிவனடி யார்களோடு சேர்ந்திருந்து சிவனையே துதிக்கும் வாய்ப்பு உண்டாகும். சித்திக் கும் முத்திக்கும் வழிகாட்டும் அன்பியல் வாழ்க்கை, அருளியல் வாழ்க்கை, இன் பியல் வாழ்க்கை ஆகிய மூன்றும் ஒருங்கே கிட்டும். முன்னைத் தவத்தின் பயனாக சித்தம் சிவமாகியவர் உறவு உண்டாகி சித்தியும் முத்தியும் ஒருங்கே கிட்டும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

**சித்தம் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்**
**சித்தம் சிவானந்தம் சேர்ந்தோர் உறவுண்டால்**
**சித்தம் சிவமாகவே சித்தி முத்தியாஞ்**
**சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே**

நாத விந்துவாகிய இறைவனின் திருவடியைப் பொருந்துகின்றவர்களுக்கு ஞானம் தானாகவே விளங்கும். அன்பே சிவமாகிச் சிவனருளைப் பெற்றிருக்கும் அன்பாளன் செல்வம் வேண்டின் அத னைத் திருமகளும் வாரி வழங்குவாள். ஞானம் வேண்டின் வித்யா தெய்வமான கலைமகளின் அருளினால் ஞானமும் கிட்டும். பராசக்தியின் அருளினால் எல் லாப் பெருமைகளும் அடியவனுக்கு ஒருங்கே கிட்டும். நம்முடைய முயற்சி எத்தனை பெரிதாயினும் எம் பெருமானு டைய அருள் ஒன்றே எமக்கு எல்லா நன்மைகளையும் தரும். தீதற்ற முறை யில் வரும் செல்வம், தெளிந்த ஞானம் என்பன கிடைப்பதோடு நம்முடைய மனி தப் பண்புகளும் உயர்வடையும். அதன் பயனாக மனிதனுக்குத் தெய்வ நிலை யும் சித்தித்துவிடும். எம்பெருமானே குருவாக வந்து ஆட்கொண்டு திருவரு ளினை வாரி வழங்குவார். தெய்வத் திருவருளினால்த்தான் ஞான குருவும் நமக்கு வாய்ப்பார்.

**பிரானருள் உண்டெனில் உண்டு நற்செல்வம்**
**பிரானருள் உண்டெனில் உண்டு நல்ஞானம்**
**பிரானருளில் பெருந்தன்மையும் உண்டு**
**பிரானருளில் பெருந் தெய்வமும் ஆமே**

அவவேடம் என்பது போலிக் கோலம் ஆகும். அகமும் புறமும் ஒத்தில் லாத பொய்வேடம் புனைவது பயன் அற்றதாகும். வேடதாரிகளும் விளம்பர விரும்பிகளும் இறையருளை என்றுமே பெறமுடியாது. ஆத்மீகத்தை வியாபார

நோக்கோடு பயன்படுத்துபவர்களுக்கு வாழ்வில் என்றுமே உய்தி கிடையாது. சமூக அந்தஸ்த்திற்காகச் சமய வேட தாரிகளாக நடிப்பவர்களின் தொகை இன்று கூடிக்கொண்டே செல்கிறது. "உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே" என்ற மகாபாரத வாக்கிற்கு அமைய வாழ்கின்ற போலி வேடதாரி களின் தொகை நமது சமூகத்தில் அதி கரித்துக் கொண்டே போகிறது. பஞ்சமா பாதகங்கள் ஐந்தும் செய்பவர்கள் பலர் இன்று சிவ சின்னங்களை அணிந்து கொண்டு சமயத்தின் தளபதிகளாகத் தங்களை வெளிக்காட்டிக் கொள்கிறார் கள்.

கலியுகத்தில் இறைவனைப் பற்றிப் பிடிப்பதற்கு பக்தி மார்க்கமே மிகச் சிறந்தது என நாரத மகரிஷி தனது பக்தி சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத் தேடுவதும்**
**நின் அடியார் செய்கை பராபரமே"**

என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கிற்கு அமைய ஆடியும், பாடியும், அழுதும், தொழுதும் இறைவனை வணங்கினால் இறையருளைப் பூரண மாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பொய்வேடம் பூண்பவர்களைத் திருமந்திரம் இரக்கம் இன்றிச் சாடுகிறது. வயிற்றை நிரப்புவதற்காகப் பயனற்ற வேடங்களைப் பூண்டு உலகத்தை ஏமாற் றும் அறிவிலிகளின் தான் தோன்றித்தன மான செயற்பாடுகளால் எதுவித பயனும் இல்லை. பொய்யாய்க் கோலத்தைப் பூண்டு தவம் செய்பவர்கள் நரகத்துக்குப் போவார்கள். உள்ளத்தில் உண்மை இன்றிக் கோலத்தால் மட்டும் நடிக்கும் பொய்த்தவம் செய்பவர்கள் புண்ணியர்கள் ஆகமாட்டார்கள். மெய்த்தவம் போன்று நடிப்பதால் இவர்களுக்கு உலகியல் இன்பங்கள் சில கிடைக்கலாம். ஆயினும் உண்மை ஞானத்தினால்த்தான் தவத்தின் பயன் கைகூடும். இம்மைக்கும் மறுமைக் கும் பயன்தருவது உண்மை ஞானமே என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளக்கு கிறது.

**பொய்த்தவம் செய்வார் புகுவர் நரகத்துப்**
**பொய்த்தவம் செய்தவர் புண்ணியர் ஆகார்**
**பொய்த்தவம் மெய்த்தவம் போகத்துள் போக்கியும்**
**சத்தியம் ஞானத்தால் தாங்கும் தவங்களே**

அவ வேடத்தைச் சாடிய தவயோகி அடுத்து தவவேடத்தின் சிறப்பினை விளக்குகின்றார். தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும் தாம் பிற உயிகளுக்குத் துன்பம் எதுவும் செய்யாது இருத்தலும் தவத்தின் வடிவம் என்பதை

**உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு**

'எனத் திருக்குறள் கூறுகிறது. தவத்தால் உயர்ந்து இறையருளுக்குப் பாத்திரமான அடியவர்களிடம் யமனே நெருங்கமாட்டான் என்பதை

*தன்னைப் பூரணமாய் அறியாதவன் ஒருநாளும் பிறரைச் சரியாக அறியமுடியாது.*

**"நாளென் செயும் வினைதான் என் செயும்**
**எனை நாடிவந்த கோளென் செயும்**
**கொடுங் கூற்றென் செயும்"**

என முருக உபாசகராகிய அருணகிரிநாதர் கூறுவதைக் கந்தரலங்காரத்திலே காணலாம்.

சிவனைக் குறிக்கும் அடையாளங்களாகிய சிவசின்னங்களில் விபூதியும், உருத்திராக்கமும் புறச் சிவசின்னங்களாகும். பஞ்சாட்சர மந்திரம் அகச் சிவசின்னமாகும். இவை ஞான நூல்களைக் கற்பவர்களுக்கு, உரிய அடையாளங்களாகத் திகழ்கின்றன. சைவர்கள் ஒவ்வொருவரும் சமயதீட்சை பெற்றுச் சிவமூல மந்திரத்தினை உச்சரித்து திருநீற்றினைத் திரிபுண்டரமாக நெற்றியிலே தரிக்க வேண்டும் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. தவவேடத்தில் நிற்போர் திருநீற்றை அணிவதோடு செம்பொனாலாகிய குண்டலங்களை இரண்டு காதுகளிலும் அணிந்திருப்பர். முப்பத்திரண்டு சிவமணிகள் கொண்ட கண்டிகையாகிய உருத்திராக்கம் மார்பிடத்துக் காணப்படும். நாவினால் சிவமூல மந்திரமாகிய பஞ்சாட்சர மந்திரத்தைச் செபித்தல் வேண்டும். உண்மைத் தவநிலையில் இருக்கும் சிவயோகிக்கு இவையே அடையாளங்களாகும்.

**பூதியணிவது சாதனமாதியிற்**
**காதணி தாம்பிர குண்டலங்கண்டிகை**
**ஓதியவர்க்கும் உருத்திர சாதனந்**
**தீதில் சிவயோகி சாதனந் தேரிலே.**

(தொடரும்...

**முடி காணிக்கை தருதல், அலகு குத்துதல் ......... இந்த நம்பிக்கையெல்லாம் சரியானதுதானா?**

நம்பிக்கைகள் எல்லாச் சமயத்திலும் காணப்படும். நம்பிக்கைகளைக் குறைத்துப் பேசுவதால் எந்த உயர்வையும் யாரும் அடையமுடியாது. நம்பிக்கையால் உடல் நோய்கூடக் குணமாவதாக ஆய்வுகள் சொல்கின்றன. இத்தகைய நம்பிக்கைகளுக்கு "வைராக்கியம்" என்று பெயர்.

ஆன்மீகத்தில் வைராக்கியம் உயர்ந்த இடத்தைப்பெறும். ஒரு நேர்த்தியினைச் செய்யப்போவதாக முடிவுசெய்தது முதல் அதைச்செய்து முடிக்கும்வரை, அதை யாருக்காகச் செய்கிறோம்? எதற்காகச் செய்கிறோம்? எந்தக் கடவுளிடம் செய்கிறோம்? என்பது நினைவில் இருக்கும். இவற்றைச் செய்து முடித்தபிறகும் இந்த நினைவு அலைகள் நம் மனதில் அழியாமல் பசுமையாக இருக்கும்.

"உடம்பை வருத்தி மேற்கொள்ளப்படும் வைராக்கியங்களால் உள்ளம் உறுதியடையும் என்கிறார் யோக சாஸ்திரத்தின் தந்தையான பதஞ்சலி முனிவர். வைராக்கியங்களே பல தெய்வங்களின் திருவருளை நமக்குப் பெற்றுத்தந்ததாக நம் புராண இதிகாசக் கதைகள் கூறுகின்றன.

***எழுத்தாளரின் பேனா, மயிலிறகு போன்று கனவுகள் நிறைந்திருக்க வேண்டும்.***

உ

# சிவவொளி

**வாரியார் சுவாமிகள்**

**கட்டி முண்டகரபாலி அங்கிதனை மூட்டி:**

கட்டி முண்டக அரபாலி அங்கி என்று பிரித்துக் கொள்ளவும். "கட்டி" என்பது வீணே கழிகின்ற பிராண வாயுவை அங்ஙனம் கழிய விடாமல் கட்ட வேண்டும் என்பதனைத் தெரிவிக்கின்றது.

**கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானவர்**
**மட்டவிழ் தாமரை உள்ளே மணஞ்செய்து**
**பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு**
**நட்டிடு வார்க்கு நமனில்லை தானே.**

-திருமந்திரம்-

நாளொன்றுக்கு இருபத்தோராயிரம் சுவாசங்கள் செல்கின்றன. அவற்றுள் வெளியே செல்வது 12 அங்குலங்கள்; உள்ளே புகுவது 8 அங்குலங்கள்; 4 அங்குலங்கள் வீணாகின்றன. அவற்றை வீணாகாவண்ணம் கட்ட வல்லவரே காலனைக் கட்டவல்லவராவர்.

**"பன்னிரண் டங்குலம் பறித்திடும் பிராணன்**
**பின்னதில் நான்கும் பிரிந்துபோம் அதனால்**
**ஆயுளுங் குறைந்திட் டாக்கையுந் தளர்ந்து**
**சாயுமென் றுரைத்துச் சாகா திருக்க**
**நாடியோர் பத்து நாடிநா டிகள்புக்கு**
**ஓடிய வாயு ஒருபதுந் தேர்ந்து"**

-சிற்றம்பல நாடிகள்-

இனி, தணிந்திருக்கின்ற மூலாதாரத்துள்ள மூலாக்கினியைப் பிராண வாயுவினால் எழுப்பி அதனை மேலை வெளிவரை மூட்டினால் அங்கு மதிமண்டலம் வெதும்பி அமிர்தம் பொழியும்.

**"மூலா தாரத்தில் மூண்டெழு கனலை**
**காலால் எழுப்புங் கருத்தறி வித்தும்"**

-ஔவையார்-

**"மூலக் கனலால் முழுமதி யுருக்கிப்**
**பாலைப் பருகும் பண்புந் தருளி"**

-சிற்றம்பலநாடிகள்-

உணர்வு கீழரணியாகவும், பிரணவம் மேலரணியாகவும் பிடித்துக்கடைய, ஞானாககினி பிறக்கும். அவ்வக்கினியால் பாசம் எரியும். மூலாதாரத்தில் குண்டலினி சத்தி பாம்புபோல் மண்டலமிட்டிருக்கும். அதன் வாயிலிருந்து எழுகின்ற காற்றே பிராணனாகும். இட நாசியிலும் வட நாசியிலும் மாறிவரும். அதனை மறித்து

முதுகெலும்பின் நடுவிலுள்ள சுழுமுனை வழியே செலுத்தி ஆறாதாரங் கடந்த அப்பாலைக்குச் சென்று அமைதல் வேண்டும்.

அங்ஙனம் பன்னிரு அங்குல அளவில் ஓடும் பிராணனை அடக்குஞ் சிவயோக சாதனையைக் குருமுகமாக அறிந்து முறையே பயின்று சாதித்தவர்க்கு உலகமெலாம் தலை வணங்கும். அழிவற்ற தன்மையும் உண்டாகும்.

இனி, ரேசகம் என்பது பிராண வாயுவை வெளியே விடுதல்; பூரகம் என்பது பிராண வாயுவை உள்ளே இழுத்தல்; கும்பகம் என்பது பிராணவாயுவை விடாமல் நிறுத்துதல். இதில் தொடக்கத்தில் பூரகம் 16 மாத்திரையும், கும்பகம் 64 மாத்திரையும், ரேசகம் 32 மாத்திரையுமாகச் சாதனை செய்து படிப்படியாக உயர்த்துதல் வேண்டும். அங்ஙனம் செய்யும்போது நாட்டத்தை நடுமூக்கில் வைக்கவேண்டும்.

**நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்**
**வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை**
**ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை**
**தேட்டமும் இல்லை சிவனவன் ஆமே.**

-திருமந்திரம்-

**அண்டமொடு தாவி:**

அவ்வாறு எழுகின்ற பிராணவாயுவை ஆறாதாரத்தின் வழியே மேலைப் பெருவெளிக்குச் செலுத்துதல் வேண்டும். அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவாம். அவைகள் முறையே நாபிக்குக் கீழே இரண்டும், நாபியும், இருதயமும், கண்டமும், புருவநடுவுமாம். மேலும்,

| | | |
|---|---|---|
| மூலாதாரத்திலுள்ள எழுத்து | ஓ | - விநாயகர் |
| சுவாதிட்டானத்திலுள்ள எழுத்து | ந | - பிரமன் |
| மணிபூரகத்தில் உள்ள எழுத்து | ம | - திருமால் |
| அநாகதத்தில் உள்ள எழுத்து | சி | - உருத்திரன் |
| விசுத்தியில் உள்ள எழுத்து | வ | - மகேச்சுரன் |
| ஆக்ஞையில் உள்ள எழுத்து | ய | - சதாசிவம் |

இனி, ஆறாதாரத்துள்ள அவ் ஆறு மூர்த்திகளையும் முருகவேள் அதிட்டித்து நிற்பர். அதனாலன்றோ ஆறுமுகமானார்.

**"உருத்தெளிந் திடநம் உருவே யாகும்**
**ஆறு மாமுகத்து அமர்ந்ததும் இதுவே**
**வேறிலை என்று மெய்ம்மொழி செப்பி"**

-சிற்றம்பலநாடிகள்-

ஆறாதாரமும் பிரமந்திரமுங் கடந்த இடத்தில் மேலைப்பெருவெளி தோன்றும். ஆயிரத்தெட்டிதழ்க் கமலத்துடன் அது விளங்கும். "ஸஹஸ்ரார வெளி" எனப்படும் அங்கே ஞான நடனஜோதி ஒப்புவமை இன்றி ஒளி செய்துகொண்டிருக்கும்.

**"இலங்குமா யிரத்தெட்டு இதழ்த்தா மரைமேல்**
**துலங்கிடு நடனச் சோதியைக் காட்டி"**

-சிற்றம்பலநாடிகள்-

அவ்வாறு, பிராணவாயுவை எழுப்பும்போது "ஓம்" என்ற பிரணவ சப்தத்து அசபா நலஞ் சித்திக்கச் செய்யவேண்டும்.

**ஒளியை ஒளிசெய்து ஓமென்று எழுப்பி**
**வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி**
**ஒளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்**
**தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே**

-திருமந்திரம்-

**விந்துவொலி கத்த:**

மேற்கூறிய சிவயோக சாதனையை முறையே தொடங்கி புரிந்துவரில் அங்கு விந்து சுழித்து ஓரினிய நாதம் எழும். அது பத்து வகையான கருவிகளை நிகர்த்துப் பேரானந்தத்தை விளைவிக்கும். இந்த இன்னிசையைக் கேட்டசெவி வேறு எந்த இசைகளையுங் கேட்க இசையாது.

**கற்பகந் தெருவில் வீதி கொண்டு:**

புருவ நடுவே நாட்டத்தை வைத்து, மனதைத் தடுத்து இருந்தபடி இருந்து நோக்கில் அங்குச் சிவவொளி தோன்றி அதன் நடுவே ஒரு வீதி தோன்றும். அவ்வீதி வழியே சென்றால் அங்கே ஒரு பொற்பிரகாசமான மண்டபந் தோன்றும்.

**"சோதிமலை ஒன்று தோன்றிற்று அதிலொரு**
**வீதியுண் டாச்சுதடி அம்மா**
**வீதியுண் டாச்சுதடி"**

-இராமலிங்கஅடிகள்-

அப்புருவ நடுவில் இடை பிங்கலை சுழுமுனை என்ற மூன்று நாடிகளும் கூடுவதனால் அது "திரிவேணி சங்கமம்" எனப்படும்.

## ஆசைக்குக் காரணம் யார்?

இந்த அறையிலிருந்து சுவரை ஊடுருவிக்கொண்டு என்னால் வெளியேற முடியுமானால் சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால், அது முடியாது. எனக்கு நோயே வராமல் இருக்குமானால் அது மிகவும் நல்லது. ஆனால் நோய் வருவதை என்னால் தடுக்க முடியாது. எனக்குச் சாவே கிடையாது என்றால் மிகவும் மகிழ்ச்சிதான். ஆனால், நான் இறந்தேயாக வேண்டும்.

என்னால் இயலாத லட்சக்கணக்கான விஷயங்களை எல்லாம் செய்ய முடியுமானால் பேரானந்தம்தான். ஆசை இருக்கிறது. ஆனால், அதை நிறைவேற்றும் வழி கிடைக்காமல் போகும்போதுதான் துன்பம் என்ற வினோதமான பிரதிச்செயல் உண்டாகிறது. ஆசைக்குக் காரணம் யார்? நான்.... நானே! இப்போது நான்படும் துன்பங்களுக்கெல்லாம் நானே காரணம்! *-சுவாமி விவேகானந்தர்-*

குறைவாகப் பேசு நிறையப் பணிசெய்.

உ
(தொடர்ச்சி...

# ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி

## மூலமும் உரையும்

*81. பூமி திருத்தி உண்.*

ப-ரை. பூமி- உன் விளை நிலத்தை, திருத்தி- சீர் திருத்திப் பயிர்செய்து, உண்- நீ உண்ணு.

*82. பெரியாரைத் துணைக் கொள்.*

ப-ரை. பெரியாரை- (அறிவிலே சிறந்த) பெரியோரை, துணைக்கொள்- உனக்குத் துணையாகப் பேணிக்கொள்.

*83. பேதைமை அகற்று.*

ப-ரை. பேதைமை- (பிறவிக்குக் காரணமாகிய) அஞ்ஞானத்தை, அகற்று- (நீ மெய்ஞ்ஞானத்தினாலே) போக்கு.

*84. பையலோடு இணங்கேல்.*

ப-ரை. பையலோடு- சிறு பிள்ளையோடு, இணங்கேல்- நீ கூடாதே.

*85. பொருள் தனைப் போற்றி வாழ்.*

ப-ரை. பொருள் தனை- திரவியத்தை, போற்றி- (மேன்மேலும் உயரும்படி) காத்து, வாழ்- நீ வாழு.

*86. போர்த் தொழில் புரியேல்.*

ப-ரை. போர்- சண்டையாகிய, தொழில்- தொழிலை, புரியேல்- நீ செய்யாதே.

*87. மனம் தடுமாறேல்.*

ப-ரை. மனம்- மனசு, தடுமாறேல்- (யாதொரு விஷயத்திலும்) கலங்காதே.

*88. மாற்றானுக்கு இடங் கொடேல்.*

ப-ரை. மாற்றானுக்கு- பகைவனுக்கு, இடம் கொடேல்- (உன்னை நெருக்கிப் பின் வருத்தும்படியாக நீ) இடங்கொடாதே.

*89. மிகைபடச் சொல்லேல்*

ப-ரை. மிகைபட- (சொற்கள் சுருங்காமல்) அதிகப்படும்படி, சொல்லேல்- நீ சொல்லாதே.

*90. மீதூண் விரும்பேல்.*

ப-ரை. மீது ஊண்- அதிக போசனத்துக்கு, விரும்பேல்- நீ ஆசைப்படாதே.

*91. முனை முகத்து நில்லேல்.*

ப-ரை. முனை முகத்து- சண்டை முகத்திலே, நில்லேல்- (நீ போய்) நில்லாதே.

*92. மூர்க்கரொடு இணங்கேல்.*

ப-ரை. மூர்க்கரோடு- அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல்- நீ சிநேகம் பண்ணாதே.

(தொடரும்....

தன்னடக்கம் இல்லாதவன் பிறரை அடக்கமுடியாது.

உ

# செய்திச் சிதறல்

- அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் 48ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது அனைத்து சைவச் சான்றோர்களும் ஒன்றிணைந்து சைவப்பாடசாலைகளில் "சைவ உணவு கொடுத்தலே நீதி! புலால் உணவு கொடுக்காதீர்!" என்ற வேண்டுகோளை முன்வைத்து பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

- அகில இலங்கை இந்து மாமன்ற மண்டபத்தில் பூரணைநாள் கருத்தரங்கும் கருத்தாடலும் 10.03.2009 அன்று கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

- வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு உதவும் பொருட்டு வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் உள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தால் ரூபா 50ஆயிரம் இந்து அமைப்புக்கள் ஒன்றியத்திடம் வழங்கப்பட்டது.

- யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் வெளியீடான மாசிமாத இந்து சாதனம் இரண்டாவது நூல் பல்வேறு சமய சிந்தனைகளுடன் வெளிவந்துள்ளது.

- 10.03.2009 அன்று கொக்குவிலில் யாழ் மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவைக்குரிய பணிமனையை அரச அதிபர் கணேஷ் திறந்து வைத்தார்.


- சண்டிலிப்பாய் மத்தி முதியோர் சங்கத்தினரால் 22.03.2009 அன்று வருடாந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

- வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஷ்வரன் அவர்களுக்கு இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டி உள்ளது. இவரது வைத்திய செலவிற்கு நிதிஉதவி செய்வோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு உதவவும்.

Dr க. நாகேஸ்வரன்<br>
66/12 றெபேட் டிறைவ்<br>
கிரிலப்பன,<br>
கொழும்பு- 6<br>
T.P. N0. 0114909890

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



நாட்டியப்பெண்கள் பாடலைப்பாடி முடியவும் அங்கே ஒரு சலசலப்பு ஏற்படத் தொடங்கியது. அங்கே ஏற்பட்ட சலசலப்பு ஆலய வாசலுக்கு அண்மையிலேதான் முதலில் ஏற்பட்டது.

சந்நிதியானின் வெளிவாசலில் சீமேந்தினால் உருவாக்கப்பட்ட பெரிய திருப்பணி உண்டியல் அமைந்திருப்பதை அடியார்கள் அவதானிக்கலாம். அந்தத் திருப்பணி உண்டியலுக்கு முன்பாக வெளிவீதியில் சரியாக மூலஸ்தானத் திற்கு நேரே மேடை அமைக்கப்பட்டு அந்த மேடையில்த்தான் அந்த நாட்டிய நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

நாட்டியமாடவந்த சின்னமேளம் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த இணுவிலைச் சேர்ந்த ''ருக்மணி'' குழுவினர் என அறியப்படுகின்றது. இவ்வாறு நாட்டியமாடவந்த அந்தச் சின்ன மேளத்தினர் வழமையாக சின்னமேள ஆட்டத்திற்கு முன்பு எல்லா இடங்களிலும் பாடுவதுபோன்று ஆரம்பட் பாடலைப் பாடி முடித்துவிட்டார்கள். இப்பொழுது சின்ன மேளம் ஆட ஆரம்பிக்கின்ற தருணம். என்ன ஆச்சரியம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆலயத்தின் வாசல்க் கதவுகள் அங்கே

தானாக மூடப்படுகின்ற அந்த அதிசயம் நடந்தேறியது.

இவ்வாறு கதவுகள் மூடப்பட்ட தனால் இனம்புரியாத பயமும், பரபரப்பும் அங்கே ஏற்படத் தொடங்கியது. உடனடி யாகவே அங்கே இடம்பெற்றுக்கொண்டு இருந்த அந்த நாட்டிய நிகழ்வு நிறுத்தப் பட்டது.

சந்நிதியில் சின்னமேள நிகழ்வை இயல்பாக பார்வையிட வந்தவர்கள், சின்னமேள நிகழ்வை சந்நிதியில் நடத்த லாமா? என்ற கேள்விக்குறியுடன் அங்கே சமூகமளித்திருந்தவர்கள் இதுபோன்ற ஒரு நிகழ்வை அங்கே நடாத்துவதில் உடன் பாடு இல்லாதவர்கள் என அங்கே பல வகைப்பட்ட உணர்வுகளுடன் கூடியிருந்த அனைவரும் பயத்துடன்கூடிய ஒரு பரபரப் புக்கு உள்ளானார்கள்.

1960ஆம் ஆண்டு தசாப்தத்தில் சிறுவர்களாக இருந்து நடந்தேறிய இந்த நிகழ்வில் நேரடியாகவே சமூகமளித் திருந்த அன்பர்கள் எம்மிடம் பின்வருமாறு தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின் றனர். "அந்தப்பாட்டு முடிந்தவுடன் திடீரென அங்கே ஆலய வாசல்ப்பக்கம் இருந்தவர்கள் மத்தியிலிருந்து ஒரு சலசலப்பு ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து ஆலயத்தின் வாசல்க் கதவு தானாகவே மூடிக்கொண்டது என்ற செய்தி பரவவே அனைவரும் பதட்டமும், குழப்பமும் அடைந்தனர். இறுதியில் அந்தச் சின்னமேள நிகழ்வு தொடரமுடியாது அத்துடன் தடைப்பட்டு விட்டது" என்றும் கூறுவதுடன் அதன்பின்பு இன்றுவரை சந்நிதியில் சின்னமேள நிகழ்வு என்று ஒன்று நடைபெறவில்லை என்றும் எடுத்துக்கூறுகின்றனர்.

இவ்வாறான ஒரு அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து அந்தவருட உற்சவத்தின் உரிமையாளரும் அந்தச் சின்னமேள நிகழ்வை ஒழுங்கு செய்த வருமான பூசகர் மிகுந்த சோகத்திற்கு உள்ளானார்கள். அதுமட்டுமல்ல அன்று நித்திரையில் சந்நிதியான் அவருக்குக் கனவிலே காட்சிகொடுத்து "இங்கே நான் எத்தனை சின்னமேளங்களைப் பார்க் கிறேன் இவற்றைவிட வேறு சின்னமேளங் கள் எனக்கு வேண்டுமா" எனக்கூறி அவருடைய தவறினை உணரச்செய்துள் ளான். இவ்வாறு சந்நிதியான் கனவிலே தனக்கு வெளிப்படுத்தியதை மற்றவர் களுக்குக் கூறிய மேற்படி பூசகர் தான் மேற்கொண்ட செயலை நினைத்து மிகவும் வேதனைப்பட்டுள்ளார்கள். ஆம் இதற்கு முன்பும் இதுபோன்ற ஒரு சின்னமேள நிகழ்வு சந்நிதியில் இடம்பெறவில்லை எனவும் அதன்பின்பும் இதுவரை அவ் வாறான ஒரு நிகழ்வு இடம்பெறவில்லை எனவும் ஆலயத்துடன் தொடர்புள்ள பல ரும் எடுத்துக்கூறுகின்றனர். இதுபோன்று செல்வச்சந்நிதி ஆலயத்திலோ அல்லது ஆலயச்சூழலிலோ அதிகார வெறியுடன் செயற்படுபவர்கள் அல்லது பட்டம், பதவி என்ற வகையில் ஆணவத்துடன் நடந்து கொள்பவர்கள் இவர்கள் எல்லாம் இவற்றை அங்கே தொடர்ந்து செயற் படுத்தமுடியாது என்பதுதான் யதார்த் தமாகும். அடியவர்களுக்கு கருணை செய்வதற்காகவே சந்நிதியான் ஆற்றங் கரையில் நாடிவந்து குடிகொண்டிருக் கின்றான். இவற்றையெல்லாம் புறம்தள்ளி தொடர்ந்தும் ஒருவர் தீமையான வழியில்

செல்வாராயின் அவரது முடிவும் மிகவும் பரிதாபத்திற்குரியதாகவே அமைந்துவிடும்.

ஆம் இந்த ஆலயத்திலோ அல்லது ஆலய சூழலிலோ தத்தம் கடமைகளை மேற்கொள்பவர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே பக்குவப்படுத்தி நேரான பாதையில் செல்பவர்களாகச் செயற்படவேண்டும். அதற்கு மாறாக பிழையான பாதையில் செல்வார்களாயின் அவர்கள் தங்களுக்கு தாங்களே அழிவைத் தேடிக் கொள்பவர்களாக அமைத்து விடுகின்றனர். இத்தகைய நிகழ்வுகள் சந்நிதி ஆலயத்தில் என்றோ நடந்தவை அல்ல அவை இப்பொழுதும் எமது கண் முன்னாலேயே நடந்து கொண்டிருப்பதைத்தான் நாம் காண்கிறோம். இவ்வாறு நடைபெறுகின்ற துன்பியல் நிகழ்வுகளை இப்பந்தியில் விளக்கங்களுடன் வெளிப்படுத்துவது எமது கட்டுரைத் தர்மத்திற்கு ஒவ்வாதது என்பதால் அவற்றை எல்லாம் இங்கே தவிர்த்துக் கொள்ளுகின்றோம்.

ஆனாலும் சந்நிதியின் வரலாற்றில் இவ் ஆலயத்துடன் தொடர்புள்ள அனைவருக்குமே மிகுந்த மனச்சஞ்சலத்தை ஏற்படுத்துமளவிற்கு அகம் பாவத்துடனும், அதர்மத்துடனும் செயற்பட்டவர்கள் தொடர்பான ஒரு சம்பவத்தை இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானதென நம்புகின்றோம்.

1986ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பிரசித்தி பெற்றதும், மங்களகரமானதும், புனிதம் நிறைந்ததுமான அந்தக் காண்டாமணி பீரங்கித் தாக்குதலால் அழிக்கப்பட்டது. இதே ஆண்டு இதே மாதம் சந்நிதியானது 45அடி உயரமான பிரமாண்டமான சித்திரத்தேர் தீமூட்டி எரிக்கப்பட்டது. இவை எல்லாம் நடந்தேறிய மிகவும் துன்பியல் நிகழ்வுகளாகும்.

500க்கு மேற்பட்ட அற்புதமான சிற்பங்களுடன் 1008 மணிகளுடன் ஒரு கலைப் பொக்கிஷமாகத் திகழ்ந்த அந்த அழகிய சித்திரத்தேர் எரிக்கப்பட்ட நிலையில் அதனை உருவாக்குவதற்காக அயராது உழைத்தவர்கள், அதன் எழில்த் தோற்றத்தைக் கண்டு அதன் தெவிட்டாத அழகில் லயித்துப்போயிருந்தவர்கள், உற்சவத்தின்பொழுது வானுயர்ந்த தோற்றத்தில் பவனிவருகின்ற அந்த அற்புதக் காட்சியினால் கட்டுண்டவர்கள் என அனைவரும் தேர் முழுமையாக எரிந்து விட்ட செய்திகேட்டு துக்கத்தால் உறைந்து போனார்கள்.

உண்மையில் இந்தத் தேர் அழிப்பு யுத்தத்தினால் தற்செயலாக ஏற்பட்ட ஒன்று அல்ல. எட்டு இராணுவத்தினர் திட்டமிட்டு பெற்றோல் ஊற்றி தீ மூட்டி நாசமாக்கிய நாசகாரச்செயல். இதில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவர் மட்டும் உயிர்தப்பி இறுதியாக கதிர்காமக் கந்தனுக்குத் தூக்குக்காவடி எடுத்துப் பத்திரிகைகளுக்கு பேட்டியும் வழங்கியிருந்தார். அந்த இராணுவச்சிப்பாய் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவிக்கும்பொழுது அதில் சம்பந்தப்பட்ட நால்வர் அந்தப் பகுதியிலே சண்டையில் இறந்துவிட்டதாகவும் ஏனைய மூவர் வேறு இடத்தில் இடம்பெற்ற சண்டையில் இறந்து விட்டதாகவும் தன்னைக் காப்பாற்றிய அந்தச் சந்நிதி முருகனுக்கு நேர்த்தியாக கதிர்காமக் கந்தனுக்குக் காவடி எடுத்ததுபற்றி குறிப்பிட்டிருந்தார்.

(முற்றும்)

ஓம் முருகா!

*வாழ்க்கை நீடிக்கும்வரை நம்பிக்கையும் இருக்கும்.*

# திருப்பாதிரிப்புலியூர்

**திரு வல்லையூர் அப்பாண்ணா அவர்கள்**

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சி வாயவே" என அப்பர் பெருமான் பாடிப் பணிந்திருந்த திருத்தலம் திருப்பாதிரிப் புலியூர் சிதம்பரத்துக்கு சரிநேர் வடக்கே கரையோரத்தை அண்மித்ததாக கடலூர் மாவட்டத்தில் இத்திருக்கோயில் உள்ளது. இன்னொரு இலகுவான இடக்குறிப்பு. கடலூருக்கு இன்னமும் சற்று வடக்கே பாண்டிச்சேரி மாநில எல்லை ஆரம்ப மாகிறது. திருச்சி- சென்னை நெடுஞ் சாலையில் உள்ள உழுந்தூர்ப்பேட்டை, சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, நெய் வேலி, தஞ்சாவூர் போன்ற பிரபலமான ஊர்களிலிருந்து அடிக்கடி பேருந்து சேவை உண்டு. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் "கூடலூர்" என்று இருந்த இடமே மருவி "கடலூர்" ஆகிவிட்டதாகச் சொல் கிறார்கள். பாடலிபுரம், பாதிரிப்பதி, பாதிரிப்புலியூர், புலிசை, புலியூர், ஆதி மாநகர், உத்தாரபுரம் எனப் பல பெயர் கள் கொண்டது திருப்பாதிரிப்புலியூர் திருக்கோயில்.

கோபுர வாசலுக்கு முன்னால் ஒரு மண்டபம். அருகே ஒழுங்கான படிக் கட்டுக்களுடன் பொலிவாகத் திகழும் "சிவகர தீர்த்தக்" குளம். குளக்கட்டில் நின்றபடி பார்த்தால் அம்பாள் கோபுர வாசல் தெரிகிறது.

ஐந்து நிலைகள் கொண்ட கிழக்குப்பார்த்த ராஜகோபுரத்தில் ஏராள மான சுதைச் சிற்பங்கள் காணப்படு கின்றன. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பார்கள். பாதிரிப்புலியூர்க் கோபுரத்தின் அழகில் திளைத்தவர்கள் உண்மையில் கோடி புண்ணியம் செய்த வர்களே. கோபுரம் தாண்டி உள்ளே நுழைந்தால் பலிபீடம், கொடிமரம், நந்தி ஆகியவையும் இடதுபுறம் கோயில் நிர்வாக அலுவலகமும் காணப்படுகின்றன. இப்போது நாம் நிற்பது விசாலமான வெளிப்பிரகாரம். ஒரு முறை வலம் வந்து உள்ளே நுழையலாமே!

வெளிப்பிரகாரத்தில் சந்நிதிகள் எதுவுமில்லை. ஆயினும், நடந்துசெல்ல நடுவே ஒரு அகலமான நடைபாதைவிட்டு இரு மருங்கும் நந்தவனம் அமைத்துள்ளார் கள். தெற்குவீதியில் காணப்படும் இரண்டு பாதிரி மரங்களுமே ஸ்தல விருட்சங் களாகும். உட்பிரகாரத்தினுள் நுழை கிறோம். மண்டபத்தில் உள்ள தூண்கள், சிற்பங்கள், சிலைகள் என்று யாவும் கலைநுட்பமும் எழில் நேர்த்தியும் கொண்டு விளங்குகின்றன. உட்பிரகாரத்தையும் வலம்வந்த பின்னர் மூலவரைத் தரிசிக்க லாமே! உட்பிரகாரத்தில் சந்திரன், அடுத்து நாவுக்கரசரின் உற்சப மூர்த்தம், அடுத்து மூலவர் நாவுக்கரசர் அமர்ந்த கோலத்தில் உழவாரத்தைத் தோளில் சாய்த்தபடி காட்சி தருகிறார். சாதாரணமாக அறுபத்து மூவரிலும் சரி, நால்வராகக் காட்சி தரும் சந்நிதிகளிலும் சரி நாவுக்கரசர் நின்ற கோலத்தில்த்தான் இருப்பார். பாதிரிப்புலி ஊர் திருநாவுக்கரசரின் சிறப்பிடம் என்பதால்

எங்கும் காணமுடியாத அமர்ந்த கோலம் இங்கு. அத்துடன் அப்பர் முத்திபெற்ற சித்திரைச் சதயநாள் விழா இங்கு வெகு விமரிசையான திருவிழாவாகும்.

உட்பிரகாரத்தில் சந்தான குரவர் கள் நால்வரதும், வரிசையாக அறுபத்து மூவரது மூல மூர்த்தங்களும், தென்மேற்கு மூலையில் வலம்புரி விநாயகரும் உள்ள னர். இந்த விநாயகருக்கு "கன்னி விநாய கர்" என்று பெயர். இறைவனை நோக்கி அம்பிகை தவமிருந்தவேளை அம்பி கைக்கு "பாதிரிமலர்" கொடுத்து உதவிய தால் அவருக்கு அப்பெயர். கன்னி விநாய கர் இன்றும் கையில் பாதிரிப்பூவுடனேயே காணப்படுகிறார். தொடர்ந்து சோமாஸ் கந்தர், சந்திரசேகரர், வள்ளி தெய்வானை சமேத சண்முகர் அமர்ந்துள்ளனர்.

**"அணிதரு கயிலை நடுங்க ஓர் எழு**
**குலகிரி அடைய இடிந்து தூள் எழ**
**..........................."**

என்று அருணகிரிநாதர் இந்த சண்முகரைப் பார்த்தே பாடினார். சண் முகருக்கு எதிரே உட்பக்கமாக தல விருட்சமான "ஆதிபாதிரி" மரம் கவச மிடப்பட்டிருக்கிறது. (வெளிச் சுற்றில் இரண்டு பாதிரி மரங்களைப் பார்த்தோம்!) அருகே, 'யுகமுனீஸ்வரர்" என்ற பெயருட னான ஒரு வித்தியாசமான லிங்கத்தைப் பார்க்கிறோம். லிங்க பாணத்தில் நான்கு பக்கமும் நான்கு முகங்களுடன் உள் ளது இந்த லிங்கம். அடுத்து யானைகள் துதிசெய்ய ஒரே கல்லில் வடித்த "கஜலெட்சுமி". வழமையான இடத்தில் பள்ளியறை.

இப்போது மூலவர் சந்நிதிக்கு முன் உள்ள விசாலமான முன் மண்டபத் தில் நிற்கிறோம். மண்டப தூண்களில் பற்பல சுதைச் சிற்பங்கள். அதைத் தாண்டிச் சிலபடிகள் ஏறி துவாரபாலகர் களைத் தரிசித்து நிமிர்ந்தால் நேராக மூலவர் கருவறை. அருள்மிகு "பாடலேஸ் வரர்" கவசமணிந்து அழகுமிகு அலங் காரத்துடன் காணப்படுகிறார். ஆண்ட வனைத் தொழுத மகிழ்ச்சியில் ஆனந்தக்கண்ணீர் பெருக நிற்கிறோம்.

காலத்துக்குக் காலம் ஆட்சி செய்த பல மன்னர்களும் இக்கோயிற் திருப்பணியில் ஈடுபட்டனர். மகேந்திர பல்லவன் தொடங்கி மூன்றாம் குலோத் துங்கன்வரை (கி.பி 1213) பல திருப்பணி கள் நடைபெற்றமைக்கான சான்றுகளும், கி.பி 7ஆம் நூன்றாண்டில் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் இத்தலத்தைத் தரிசித் தமை பற்றியும் ஸ்தல புராணம் விரித்துக் கூறுகிறது.

சமணத்துறவிகள் நாவுக்கரசரைப் பலவாறாகவும் துன்புறுத்தினர். நீற்றறை யில் பூட்டி வைத்து (பாடல், "மாசில் வீணையும்....."), நஞ்சு கலந்த பாற் சோற்றினை உண்ணக்கொடுத்து, மதங் கொண்ட யானையை ஏவி (பாடல், "சுண்ணவெண் சந்தனச்சாந்து....."), இறுதி யில் கல்லில் கட்டிக் கடலிற் போட்டபோது கல்லே தெப்பமாக மிதக்க (பாடல்,

"சொற்றுணை வேதியன்.....") நாவுக்கரசர் கரையேறிய இடமே கடலூரின் "கரையேற விட்ட குப்பம்" ஆகும். இக் குப்பம் திருப்பாதிரிப்புலியூர் கோயிலிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் உள்ள "வண்டிப் பாளையம்" என்ற இடத்தில் உள்ளது. கரையேறிய நாவுக்கரசர் தோன்றாத் துணையாக நின்ற ஈசனை, "ஈன்றாருளு மாய் எனக்கு எந்தையுமாய்....." எனப் பாடிப்பாடி உள்ளம் உருகி நின்றார். இந்தப் பாடலின் அடியில் ".......... தோன்றாத்துணையாய் இருந்தனன் தன் அடியேங்களுக்கே" என்று குறிப்பிடுவதால் இப்பெருமான் "தோன்றாத்துணை நாதர் எனப்பெயரும் பெற்றார்.

திருஞான சம்பந்தர் இத் தலத் திற்கு வந்தபோது, நாவுக்கரசர் உழவாரக் கைத்தொண்டு செய்த கோயில் என்பதால் கோயிலுக்குள் கால்பதித்து நடக்க அஞ்சி தேரடி வீதியிலே நின்றபடி தேவாரம் பாடினார் என்ற கருத்து நிலவுகிறது. அவர் நின்று பாடிய இடத்தில் அவருக்கு ஒரு தனிக்கோயில் உண்டென்பதைத் தவிர இக்கூற்றினை நிருபுவிக்க வேறு ஆதாரங்கள் எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அடுத்து, கிழக்கு நோக்கிய தனிச் சந்நிதியில் அம்பிகை "பெரியநாயகி" நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறாள். அம்பிகையின் பொலிவான அழகிய முக தரிசனம் மெய் சிலிர்க்க வைக்கிறது. பாடலேஸ்வரரின் பள்ளியறைக்கு அம் பிகை நாள்தோறும் எழுந்தருளுவது இங்குள்ள ஒரு தனிச்சிறப்பம்சம் ஆகும். அம்பிகையின் மண்டபத்தின் மேல் விதானத்தில் பன்னிரண்டு ராசிகளும் அமைந்த சிற்பம் காணப்படுகிறது. அம்பிகையின் கருவறைக்கு முன்பாக உள்ள மண்டபத்துத் தூண்களில் நிறைய சிற்பங்கள் காணப்படுகின்றன. அம்பி கையை வணங்கி வெளியேவர வாசல் அருகே ஒரு தூணில் காணப்படும் சிற்பம் நம்மை இழுத்து நிறுத்துகிறது.

இடது கையில் வில், கால்களில் பாதுகை, வலது கையை மேலே தூக்கி அதிலுள்ள அம்பினை வலக்கண்ணை நோக்கி நீட்டியவாறு வலது காலைத் தூக்கி சிவலிங்கத்தின்மீது வைத்த கண்ணப்பனின் கோலம் நம் கருத்தைக் கவர்கிறது.

"தோன்றாத் துணைநாதர்" என்றும், "கரையேற்றும் பிரான்" என்றும் நாவுக்கரசர் கூறிய பாடலேஸ்வரரையும் அருள்மிகு பெரியநாயகி அம்பிகையையும் வணங்கி நிறைவான அருள்பெற்று வெளியே வருகிறோம்.

**"கருவாய்க் கிடந்து உன்கழலே நினையுங் கருத்துடையேன்**
**உருவாய்த் தெரிந்து உன்நாமம் பயின்றேன் உனதருளால்**
**திருவாய் பொலியச் சிவாய நம என்று நீறணிந்தேன்**
**தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூர் அரனே"**

-அப்பர்-

திறமையும் நம்பிக்கையும் வெல்லமுடியாத படை.

உ

# சித்திரைமாத வாராந்த நிகழ்வுகள்

03-04-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:~ "என் கடன் பணி செய்து கிடப்பதே"

வழங்குபவர்:~ திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின் 12ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு

---

10-04-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

பாடசாலை மாணவர்கள் நிகழ்வு

[யா/ திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மாணவர்கள்]

---

17-04-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:~ "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர்:~ திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

24-04-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 136ஆவது மாத வெளியீடு

## சித்திரை - 2009

வெளியீட்டுரை:~ Dr V. பாலகிருஷ்ணன் அவர்கள்

மதிப்பீட்டுரை:~ திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

[இளைப்பாறிய அதிபர்]

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன்

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பர்

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபர்

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பர்

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

**சுபமங்களம்**
**நன்றி**